

# தேசீய வளர்ச்சி

# தேசீய வளர்ச்சி

PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

வ. பொன்னுசாமி பிள்ளை, எம். ஏ.
வைஸ் பிரின்ஸிபால், சரித்திரப் பேராசிரியர்
மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரி, திருநெல்வேலி.

பாகனேரி

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பிரசுரகர்த்தர்
திருநெல்வேலி ஜங்ஷன்

முதற்பதிப்பு—1948.

பதிப்பு உரிமை

விலை, ரூ. 1—4—0

Printed at the B. N. K. Press Madras, Q. H. No. M. S. 100/B
For S. R. S. TNY. Q. H. 1. 2-48.

# முகவுரை

கடுகினும் சிறியதோர் வித்திலிருந்து பிரமாண்டமான ஆலவிருக்ஷந்தோன்றி செழிப்புற்று வளர்வது போலவும், பல சிற்றோடைகளும் காட்டாறுகளும் சேர்ந்து சமுத்திரம் போன்ற கங்காநதி உற்பத்தியாவது போலவும், 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து நம் நாட்டு மக்களிடையில் தேசீய உணர்ச்சி பற்பல காரணங்களால் சிறுகச்சிறுக எழுந்து இன்று உச்ச நிலையை அடைந்திருக்கின்றது.

வெகு காலமாக ஆங்கிலம் கற்றோர்களிடையே நிலவி வந்த தேசீய உணர்ச்சியை உலகம் போற்றும் உத்தமரான காந்தியடிகள் சாதாரண மக்கள் மனதில் வேர் ஊன்றி செழிப்புற்று வளரும்படி செய்துள்ளார். அவ்வுணர்ச்சியின் விளைவாக இதுகாறும் உலகில் கண்டுங் கேட்டுமிராத புரட்சி ஒன்று நம்மிடையில் எழுந்தது. கத்தியின்றி, ரத்தம் சிந்தாது சென்ற ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி நாம் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு அரசியல் சுதந்திரத்தைப் பெற்றோம். இத் தேசீய உணர்ச்சி எத்தன்மை வாய்ந்தது? இது எத்தகைய நன்மைகளையும் தீமைகளையும் பயக்கும் குணமுடையது? இது எங்கு, எப்பொழுது, எவ்வாறு உற்பத்தியாயிற்று? இதன் வரலாறு என்ன? முதலியவற்றை தமிழர்கள் அறிந்துகொள்வதற்காக "தேசீய வளர்ச்சி" எனும் இந்நூல் வரையப்பெற்றுள்ளது.

உலகமக்கள் இன்று விரும்புவது அமைதியும் சமாதானமுமாகும். இந்நூற்றாண்டில் நிகழ்ந்த இரு உலக மகா யுத்தங்களும் அரசியல் நிபுணர்களையும், விஞ்ஞானிகளையும், அறிஞர்களையும், சிந்தனையில் ஆழ்த்தும் தன்மையுடையன. உலகில் இதுகாறும் நேர்ந்த யுத்தங்கள் அனைத்தும் மக்களுக்கு இத்தகைய சேதத்தையும் துன்பத்தையும் விளைவித்ததில்லை. இவ்விரு உலக மகா யுத்தங்களின் கோரத்தன்மையைச் சிந்திக்குங்கால், மானிட வர்க்கத்தின்

எதிர்காலத்தைப்பற்றி நாம் ஐயுறுவது இயல்பே. தீவிர தேசீய உணர்ச்சியும், அதன் விளைவான குறுகிய மனப்பான்மையும், தன்னலப் பற்றுமன்றோ இப்போர்களுக்கு மூலகாரணம். இவை பிறிதொரு உலக மகா யுத்தத்தை மூட்டும் எனின் மக்களின் கதியைச் சிந்திக்கவும் நம் மனம் பதறும் என்பது திண்ணம். அவ்வாறு நேரிடா வண்ணம் தீவிர தேசீய உணர்ச்சியை எவ்வாறு மட்டுப்படுத்தலாம் என்றும், நாம் பெற்றுள்ள அரசியல் சுதந்திரத்தை நாமும் நமது சந்ததியார்களும் நிரந்தரமாய் எவ்வாறு அனுபவிக்க முடியும் என்றும், உலக சமாதானத்தை பாதுகாப்பதற்கு உகந்த முறை யாதென்றும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக நாகரீகம் பல நாட்டாரின் கூட்டுறவால் செழிப்புற்று விளங்கும் என்றும், இந்தியாவின் பலபாகங்கள், பற்பல மதத்தினர், வகுப்பினர் முதலியோரின் ஒத்துழைப்பால் தலை சிறந்த இந்திய நாகரீகம் ஆக்கப்பட்டு இருக்கிறதென்றும், தமிழ் மக்கள் தனித்து நிற்க முயன்றால் பயன் உறார் என்றும், சர்வ தேச மனப்பான்மையே உலக சமாதானத்திற்கு அடிப்படை என்றும், இந்நூலில் குறிப்பிடப்பட்டு உள்ளன.

இன்று கல்லூரிகளில் மாணவர்களுக்கு அவர்களின் தாய் மொழியிலேயே அறிவு புகட்டப்படவேண்டுமென்றும் ஆங்கிலத்தில் போதித்தல் உசிதமன்று என்றும் பெரும்பான்மையோர் கருதுகின்றனர். ஆனால் சிலர் தாய் மொழியில் நவீன அறிவு நூல்கள் இயற்றப்படவில்லை என்றும், மேனாட்டு சாஸ்திரங்களை ஒட்டி அவைகள் வரையப்படும் முன்னர் ஆங்கிலத்தைப் புறக்கணிப்பது தவறு என்றும் கருதுகின்றனர். அரசியல் வரலாறு, பொருளாதாரம், ரசாயனம், கணிதம், முதலிய அறிவுத்துறைகளில் உயர்ந்த நூல்கள் தமிழில் வரையப்படவில்லை என்பது உண்மையே. தமிழ் மொழியில் தேர்ச்சிபெற்ற ஒருவர் உலக வரலாறு, அரசியல், பொருளாதாரம் முதலிய துறைகளில் அவரது அறிவைப் பெருக்க விருப்பமுறுவரேல் அவருக்குப் போதிய வசதியில்லை. காரணம் இத்துறைகளில் இருக்கும் உயர்ந்த நூல்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் வரையப்பெற்றிருப்பதே. தமிழ் மொழி வளர்ச்சிக்காக உழைக்கும் அன்பர்கள் இதுகாறும் இத்துறைகளில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. தமிழி

லும் ஆங்கிலத்திலும் தேர்ச்சிபெற்ற தமிழ் அறிஞர்கள் தம் மொழியில் நவீன அறிவு நூல்களை ஆக்கவேண்டும்; அவர்கள் சுயமாகத் தாய்மொழியில் அத்தகைய நூல்களை வரையவேண்டு மென்ற நோக்கத்துடன் இந்நூல் வரையப் பெற்றுள்ளது. அவ் விதம் வரையப் பெற்ற பின்னரே தாய்மொழி வாயிலாக மாண வர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டுமென்று கருதுவது முறை அன்று. நீந்தக்கற்ற பின்னரே நீரில் இறங்குவது நன்றென ஒருவர் கூறினரேல், அவர் நீந்தக் கற்பது எவ்வாறு? தண்ணீரில் இறங்கி தம் முயற்சியாலும் பிறர் உதவியாலும் அன்றோ நீந்து வதில் அவருக்குத் தேர்ச்சிபெறமுடியும். அதைப்போல தாய் மொழியில் கற்பிப்பது என்று கங்கணம் பூண்டாலன்றோ அறிஞர் கள் பலர் அறிவுநூல்களை அம்மொழியில் ஆக்க முற்படுவார்கள். தமிழ்மொழியில் இருக்கும் இக் குறையை நீக்கும் நோக்கத்துடன் இந்நூல் வரையப் பெற்றுள்ளது.

ஆங்கிலத்தில் வரையப் பெற்றுள்ள பல நூல்களைத் தழுவி எளிய நடையில் யாவருக்கும் விளங்கும் வார்த்தைகளில், கல்வி இலாகா அங்கீகரித்துஇருக்கும் பதங்களை உபயோகித்து யாம் இந்நூலை வரைந்துளோம். ஆசிரியர் ஹேஸின் "தேசீயக்கட்டு ரைகள்", ராம்ஸேம் மியுரின் "தேசீயமும், சர்வதேசீயமும்", ரவீந்திரநாத் தாகூரின் "தேசீயம்" என்னும் நூல், ஆக்டன் பிரபு, டிலயல் பர்ன்ஸ், லாஸ்கி, ஜான் ஸ்டூவர்ட் மில் முதலிய அறிஞர்களின் நூல்களும் கட்டுரைகளும் பயன்படுத்தப் பெற் றுள்ளன. தமிழ் மொழியை வளர்ப்பதில் ஆர்வமுடைய அன்பர் களின் ஆதரவையும் ஆசியையும் இந்நூல் பெறுமென நம்பப் படுகின்றது. இதன் அபிவிருத்திக்கான குறிப்புகள் மனமார வரவேற்கப்படும்.

ஆசிரியர்

# பொருளடக்கம்

அத்தியாயம் பக்கம்


## 1. தேசியம் : பொருள் விளக்கம்

i. தேசியம் ... ... 1
ii. தேசியக் கருவிகளின் தன்மை ... ... 4

## 2. ஐரோப்பாவில் தேசிய வளர்ச்சி வரலாறு

i. முற்காலம் ... ... 19
ii. தேசிய வளர்ச்சிக்குரிய காரணங்கள் ... 21
iii. தேசிய வளர்ச்சி வரலாறு : மேற்கு ஐரோப்பா 24
iv. ,, இத்தாலி ... 31
v. ,, ஜெர்மனி ... 33
vi. ,, பால்கன் நாடுகள் ... 35
vii. ,, இருபதாம் நூற்றாண்டு ... 36

## 3. ஆசியாவில் தேசிய வளர்ச்சி வரலாறு

i. ஜப்பான் ... ... 39
ii. சீனு ... ... 41
iii. இந்தியா ... ... 44
iv. தென்மேற்கு ஆசியா ... ... 54
v. கிழக்காசியா ... ... 55

## 4. தேசியமும் ஏகாதிபத்தியமும்

i. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் தேசிய வளர்ச்சியும் 56
ii. தேசிய வளர்ச்சியும் டொமினியன் அந்தஸ்தும் 58
iii. டொமினியன் அந்தஸ்தின் தன்மை ... 62
iv. துருக்கி ... ... 64
v. சாம்ராஜ்யங்களின் அழிவும் தேசியக் குடி அரசுகளும் ... ... 65

5. அரசும் தேசிய உணர்ச்சியும்

i. அரசு அமைப்பும் தேசியமும் ... ... 67
ii. அரசும் சிறுபான்மை இனங்களும் ... 71
iii. இனம், மதம், மொழி வேறுபாடும் ஜன மாற்றமும் ... ... 76
vi. சுய அரசியல் நிர்ணயத்திற்குரிய அம்சங்கள் 79

6. தேசியத்தின் நன்மை தீமைகள்

i. தேசியத்தின் நன்மைகள் ... ... 81
ii. ,, தீமைகள் ... ... 85
iii. பொருளாதாரக் கொள்கை ... ... 90
iv. தேசியத்தின் சுயநல விளைவுகள் ... ... 93

7. தேசியத்தின் எதிர்காலம்

i. தேசியத்தின் தன்மை ... ... 95
ii. உலக ஒற்றுமைக் கருவிகள், போக்கு வரவு வசதிகள் ... ... 97
iii. கருத்துக்களும் விஞ்ஞான வளர்ச்சியும் ... 99
iv. உலக மக்களின் ஒத்துழைப்பு ... ... 100
v. சர்வதேச உணர்ச்சியும் உலகப் பொது உணர்ச்சியும் ... ... 102
vi. சர்வதேச உணர்ச்சியும் கல்வி முறையும் ... 103
vii. சர்வதேச சங்கத்தின் அவசியமும் அதன் தன்மையும் ... ... 105
viii. சர்வதேச உணர்ச்சியும் முதலாளித்துவமும் 108

# தேசீய வளர்ச்சி

## அத்தியாயம் 1

## தேசீயம் ; பொருள் விளக்கம்

### I. தேசியம்

இன்று உலகெங்கும் ஒரே முழக்கம்; ஒரே இரைச்சல்; சுதந்திரம் சுதந்திரம் என்னும் பேரொலி வானைப் பிளக்கின்றது. இந்தோனேஷியர், டச்சுமக்களிடமிருந்து விடுதலை அடையக் கிளர்ச்சி செய்கின்றனர். பிரெஞ்சு சாம்ராஜ்யத்திலிருந்து விடுதலைபெற இந்தோ-சைனு மக்கள் மிக்க ஊக்கங் கொண்டுள்ளனர். அரபியர்களும், யூதர்களும் பாலஸ்தீனத்தைத் தங்கள் நாடென விவாதிக்கின்றனர். பிலிப்பைன் மக்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டினரிடமிருந்து சுதந்திரம் பெற்றுள்ளனர். எகிப்தியர் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டனர். 1948-ஜூன் மாதத்தில் இந்தியாவை விட்டு வெளியேறுவதாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டு 1947-ஆகஸ்டு 15-ல் இந்திய மக்களுக்கும் பாகிஸ்தான் மக்களுக்கும் சுதந்திரம் அளித்து வெளியேறிற்று. சீன மக்கள் சியாங்-கே-ஷேக்கின் தலைமையில் ஜப்பானியரை வீரத்துடன் எதிர்த்து நின்று தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாத்தனர். நம் தேசத்தில் முஸ்லிம் மக்கள் தங்களுக்கென தனி நாடொன்று வேண்டுமென்று முழங்கிப் பெற்றுள்ளனர். ஆந்திர மக்கள் தமிழகத்திலிருந்து பிரிந்து தனி அரசு ஒன்றை அடைய ஆர்வங் கொண்டுள்ளனர். கேரள மக்களும், கன்னட மக்களும் சென்னை மாகாணத்திலிருந்து தனி நிர்வாகத் தொகுதிகளை நிறுவ முயற்சிக்கின்றனர்.

1918-ல் முதல் உலகப் பெரும்போர் முடிவுற்றதும், முன் குறிப்பிட்ட சுதந்திரமுழக்கம் மும்முரமாய்இருந்தது.

ஜனநாயகக் கொள்கையைப் பாதுகாப்பதற்கும், ஒரு தேசமக்கள் அவர்களது அரசியலை அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப அமைத்துக்கொள்வதற்கும் யுத்தம் நடத்தப்பட்டது என்று நேசக்கட்சியினர் பறை சாற்றினமையால் அந்நியராட்சிக் குட்பட்ட தேசங்கள் விடுதலை அடைய ஆர்வங்கொண்டன. அதனால் ஸார் சாம்ராஜ்யம், ஆஸ்திரியா ஹங்கேரி சாம்ராஜ்யம், துருக்கி சாம்ராஜ்யம் முதலியவை மங்கி மறைந்தன. விடுதலை பெற்ற மக்கள் ஸெக்கோஸ்லோவாக்கியா, எஸ்டோனியா, பின்லந்து, லட்வியா, லித்துவேனியா, யூகோஸ்லேவியா, ஆஸ்திரியா, ஹங்கேரி முதலிய தேசீய நாடுகளை அமைத்தனர். தலைவர் கமால் பாஷா துருக்கியைச் சீர்திருத்திப் பலப்படுத்தி 'ஐரோப்பிய நோயாளி' என்ற அதன் இழிவை நீக்கினர். போலந்து மக்கள் மீண்டும் தங்கள் நாட்டைப் பெற்றனர். ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, நியூஸிலாந்து, கானடா முதலிய பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகள் பல துறைகளிலும் முன்னேற்றமடையவே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தேசீய நாட்டினரடங்கிய "பிரிட்டிஷ் காமன்வெல்த்" (பொதுநல அரசு) ஆக மாறியது. இந்திய மக்களும், எகிப்தியரும் சுதந்திரம்பெற ஆர்வங்கொண்டு மும்முரமாகக் கிளர்ச்சி செய்து சிறிது சுதந்திரம் பெற்றனர். 1800 வருஷங்களுக்கு முன்னர் தாங்கள் இழந்த தாய் நாடாகிய பாலஸ்தீனத்தின் ஒரு பாகத்தை யூதர்கள் மீண்டும் பெற்றனர். அரசியல் சுதந்திரம் உடைய நாடுகள் இறக்குமதி வரிகளை விதித்துத் தங்கள் கைத்தொழிலையும், வர்த்தகத்தையும் பெருக்குவதில் முனைந்தன; தற்காப்பின் பொருட்டு யுத்த தளவாடங்களை அதிகரித்தன.

மேற்கூறிய மாறுதல்கள் இரு உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் எழுந்ததேன் என்று ஆராயின் ஒரே ஒரு காரணமே புலப்படும். அதுவே தேசீயமாகும். அது எப்பொழுது உண்டாயிற்று? ஏன் உண்டாயிற்று? எத்தன்மை வாய்ந்தது? மனித சமூகத்திற்கு நன்மை பயக்குமா? அல்லது தீமை விளைவிக்குமா? என்பனவற்றை ஆராய்வ

தற்கு முன்னர் அதன் பொருளையும் இயல்பையும் பரிசீலனை செய்ய வேண்டும்.

தேசியம் என்பது, பல்வேறு தொழில்களையும், வகுப்புகளையும் உடைய ஒரு கூட்ட மக்கள் நாகரீகத்தில் தாங்கள் இதர தேசங்களில் வாழும் மக்களுக்கு வேறுபட்டவர்களென்றும், தாங்கள் ஒரு தனிப்பட்ட இனத்தினர் என்றும், தங்களது நாகரீகத்தையும், இனத்தையும், பாதுகாக்க எத்தகைய தியாகமும் அரிதல்ல என்றும் கொள்ளும் உணர்ச்சியாகும். அவ் வுணர்ச்சியின் பயனால் அவர்களுக்கு ஒரு சுதந்திர அரசாங்கம் ஏற்படின், அவர்களை தேசீய நாட்டினர் எனக் கூறலாம். தேசீய உணர்ச்சி மனதில் எழும் ஒருவகை நிலை; அது உள்ளுணர்ச்சியை குறிக்கும். அவ்வுணர்ச்சி பற்பல காரணங்களினால் எழுகின்றது. ஒரு கூட்டத்தில் பெரும் பான்மையோர் நிறம், தேக அமைப்பு, உயரம் முதலியவைகளில் ஒத்திருந்தால் அவர்கள் தங்களை ஒரு தனி இனத்தினரென்று கருதி ஒற்றுமையுடன் வாழ்வது இயல்பே. அக் கூட்டத்தினர் இயற்கை எல்லைகளாகிய நதிகள், மலைகள், சமுத்திரங்கள் முதலியவைகளால் சூழப்பட்ட ஒரு தனித் தேசத்தில் வாசம் செய்வரேல் அவர்களுக்குள் அந்த ஒற்றுமை ஏற்படுவது மிகவும் எளிது. அத்தகைய தனித் தேசத்தில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் ஒரே மொழியை உபயோகித்தால் ஒற்றுமை யுணர்ச்சி அவர்களுக்குள் வலுவுறும். ஏனெனில் அவர்களுடைய எண்ணங்களையும், கருத்துக்களையும், இலட்சியங்களையும் அம்மொழியில் வெளியிட முடியும். அம்மொழியிலுள்ள இலக்கியங்கள் அவர்களுடைய அன்பையும், ஆதரவையும் பெறும் என்பது திண்ணம். மொழியைப் போல மதமும் அம்மக்களிடம் ஒற்றுமையுணர்ச்சியை எழச் செய்யும் ஒரு கருவியாகும். இனம், தேசம், மொழி, மதம் இவைகளை பொதுவாக உடைய அக்கூட்டத்தினர் நாகரீகத்தில் ஒத்திருப்பார்கள் அன்றோ? அந் நாகரீகத்தைச் செழிப்புறச் செய்ய எத்தகைய தியாகத்தையும் அவர்கள் மனமுவந்து

செய்வார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து ஆற்றிய வீரச் செயல்கள், அவர்களுக்கு நேர்ந்த இன்னல்கள், இவை களின் நினைவு அவர்களை ஒற்றுமையுடன் இருக்கத் தூண்டும். முதன் முதலாக அவ்வுணர்ச்சி அவர்களிடையில் இயற்கையில் எழவேண்டுமேயன்றி அதை உற்பத்தி செய்வது அரிது. அதன் விளைவாக அவர்கள் நன்மையிலும், தீமையிலும், செழுமையிலும், வறுமையிலும் தாங்கள் ஒற்றுமையுடன் இருக்கவேண்டும் என்று கருதுவர்; வாணிகத்திலும், சக்தியிலும் தலை சிறந்து இருக்கவேண்டும் என்று நினைப்பர். ஒன்றுகூடியே வாழவேண்டும்; ஒன்றுகூடியே செழிப்புறவேண்டும்; ஒன்றுகூடியே இதர தேசமக்களின் மதிப்பைப் பெறவேண்டும் என்று ஆர்வங் கொள்வர். நீந்துவதற்குப் பாம்புக் குட்டிக்குப் பயிற்சி அளிக்கவேண்டியதில்லையன்றோ? அது போன்று ஒரு கூட்ட மக்களை ஒன்று சேர்ந்து வாழும்படி தூண்டும் மனமே தேசிய உணர்ச்சிக்கு அடிப்படையாகும்.

## II. தேசியக் கருவிகளின் தன்மை

**1. நாடு:** உள்ளுணர்ச்சியின் விளைவான தேசியத்திற்கும் அதை யொட்டிய புறத்துறை சாதனங்களாகிய நாடு, இனம், மொழி, மதம், அரசியல், பொருளாதார நிலை, நாகரீகம், வரலாறு, பழக்க வழக்கங்கள் முதலியவைகளுக்கும் எத்தகைய தொடர்பு இருக்கின்றதென்பதை ஆராய்ந்திடின் தேசியத்தின் தன்மை நன்கு விளங்கும். பொதுப்படக் கூறின் இயற்கை எல்லைகளால் சூழப்பட்ட ஒரு தனி நாட்டில் வாழும் மக்கள் ஒற்றுமை யுணர்ச்சியைப் பெறுவர் எனக் கருதலாம். அந்நாட்டை எதிரிகள் கைப்பற்றுவண்ணம் அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஆர்வங்கொண்டு அதைக் காக்கின்றனரோ அவ்வளவுக் கவ்வளவு தேசிய உணர்ச்சியின் வேகம் அவர்களிடம் பரவி நிற்கும். மிருகங்களும், பறவைகளும் அவைகளின் உறைவிடத்தின்மீது ஆசை கொண்டிருப்பதைப்போல, மனிதரும் தங்கள் நாட்டின்மீது அன்பு கூறுகின்றனர். அந்நியரிடையில் நெடுங்

காலம் தங்கி தாய்நாடு திரும்பும் ஒரு மனிதனின் உணர்ச்சியும், அந்நிய நாடுகளில் ஒரு தேச மக்கள் தங்களுடைய வேற்றுமைகளை மறந்து ஒன்று சேர்ந்திருக்கும் மனப்பான்மையும் இதற்குப் போதிய சான்றாகும். நவீன தேசிய இயக்கத்தின் தந்தையெனக் கூறப்படும் இத்தாலிய ஆசிரியர் **மசீனி,** தாய் நாட்டைக் கடவுள் மனிதனுக்கு அளித்த வீடு என்றும், அது அவனது தொழிற்சாலையென்றும், அங்கு வாழ்பவர்களின் கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் அந்நியர்களைவிட அவன் எளிதில் அறிய முடியும் என்றும், அதன்மீது அவன் அன்பு கூறுவது இயல்பென்றும் கூறுகின்றார். தனி நாடின்றி உலகில் சஞ்சாரம் செய்யும் ஒரு கூட்டத்தினரிடையில் தேசிய உணர்ச்சி எழுவது அரிதே. ஆனால் அவ்வுணர்ச்சிக்குத் தனி நாடு இன்றியமையாதது என்று கருதுவது தவறாகும். யூதர்கள் பல நூற்றாண்டுகளாகத் தனி நாடு ஒன்றில்லாது உலகெங்கும் சிதறுண்டு வாழ்ந்து வருகின்றனர். எனினும், அவர்களுக்கிடையில் தேசிய உணர்ச்சி வலுவுற்றிருக்கின்றதென்பதை மறுக்கமுடியாது. தங்கள் தாய் நாடாகிய பாலஸ்தீனத்தை என்றாவது ஒருநாள் அடையலாம் என்ற எண்ணம் அவ்வுணர்ச்சியை அவர்களுக்குள் வளர்த்து வந்தது. புராதன கிரேக்கர்கள் மத்திய தரைக்கடல் பிரதேசங்களில் எல்லாம் சிதறுண்டு கிடந்தனரெனினும், அவர்களிடம் ஒற்றுமையுணர்ச்சி இருந்தது. போலந்து மக்கள் தங்கள் நாடு மும்முறை பிரிவினை செய்யப்பட்டதின் பின்னர் ஐரோப்பிய நாடுகளில் சிதறுண்டு வாழ்ந்தனர். ஆனால் அவர்களிடையில் தேசிய உணர்ச்சி உச்ச நிலையில் இருந்தது. இதர மக்களிடம் தேசிய ஒளியை எழச் செய்ததும் அவர்களது உணர்ச்சியேயாகும். ஆகவே, தனி நாடு தேசிய உணர்ச்சிக்கு அவசியமெனக் கொள்வது தகுதியன்று.

தனி நாட்டில் வாழும் மக்கள் தேசிய உணர்ச்சி பெற்று ஒற்றுமை அடைவார்கள் எனக் கொள்வதற்கும் இடமில்லை. ஆஸ்திரியா - ஹங்கேரி இயற்கை எல்லைகளால் சூழப்பட்டிருப்பினும் அதில் வாழும் மக்கள் ஒற்றுமை உணர்ச்சி

அடையவில்லை. ஜெர்மனிக்கும், பிரான்ஸுக்கும் இயற்கை எல்லைகளில்லை. ஆனால் அத்தேசங்களில் வாழும் மக்கள் இரு தேசீய நாட்டினராக இருக்கின்றனர். பெல்ஜியத்திற்கும், ஹாலந்திற்குமிடையில் இயற்கை எல்லைகளில்லை. இரு தேச மக்களும் ஒரு கூட்டத்தினராய் ஒன்று சேராது இரு தேசீய நாட்டினராய் விளங்குகின்றனர். பிரிட்டிஷ் தீவு இயற்கை அமைப்பில் தனியாக இருக்கின்றதெனினும் அங்கு ஆங்கிலேயர், ஸ்காச்சு மக்கள், வெல்ஷ் மக்கள் என மூன்று இனத்தினர் காணப்படுகின்றனர். நம் தேசம் ஒரு தனி நாடு எனினும் மக்களிடையில் ஒற்றுமை உணர்ச்சி வேகமாக வளர்ச்சியடையவில்லை. ஆனால் ஐரிஷ் மக்கள் தனித் தீவில் வாழ்கின்றமையால் அவர்களிடையில் தேசீய உணர்ச்சி வலுவுற்றதெனக் கூறலாம். ஆகவே, தேசீய உணர்ச்சிக்கு மூலகாரணம் தனி நாடே எனக் கருதக் காரணம் இல்லையெனினும், அந்நாடு அவ்வுணர்ச்சியை மக்களிடையில் எழச் செய்யும் என்பது உண்மையே.

**2. இனம்:** இரண்டாவது சாதனமாகிய இனத்தின் தன்மையை பரிசீலனை செய்வோம். ஆசிரியர் **ஸிம்மோர்ன்** தேசீய உணர்ச்சிக்கு இனமே மிக முக்கியமானதெனக் கூறுகின்றார். ஆனால் **மசீனி** அது அவ்வாறு அன்று என அறைகின்றார். ஸ்விட்ஸர்லாந்து, கானடா, அமெரிக்க ஐக்கிய நாடு இவைகளின் வரலாற்றை ஆராய்ந்த பின்னர், இனத்தைத் தேசீய உணர்ச்சிக்கு மூலகாரணமெனக் கொள்வது தகுதியன்று என்பது நன்கு விளங்கும். இந்நாடுகளில் வாழும் மக்கள் பல இனங்களைச் சார்ந்தவர். ஸ்விட்ஸர்லாந்தில் ஜெர்மானியரும், பிரெஞ்சு மக்களும், இத்தாலியரும் ஒன்று சேர்ந்து ஸ்விஸ் மக்களாக விளங்குகின்றனர். கானடாவில் ஆங்கிலேயரும், பிரெஞ்சு மக்களும் ஒன்று சேர்ந்து கானடிய தேசீய நாட்டினராய்த் தோன்றுகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டில் பல்வேறு இனங்கள் இருக்கின்றன. மிக்க தேசீய உணர்ச்சி பெற்ற பிரிட்டிஷ் மக்கள் ஒரு தனி இனத்தைச் சார்ந்தவர் அல்லர் என்பது அவர்களது வரலாற்றிலிருந்து விளங்கும். அவர்

கள் ஆங்கிலேயரும், டேனிஷ் மக்களும், பிரெஞ்சுக்காரரும், டச்சுக்காரரும் சேர்ந்த ஒரு கலப்பினமாவர். பிரெஞ்சு மக்களும் அவ்வாறே. கலப்பில்லாத இனம் என்பதை இன்று உலகில் காண்பது அரிது. ஒரு தேசிய மக்களிடையில் நீண்ட தலையர்களையும், வட்ட மண்டையர்களையும், நெட்டையர்களையும், குட்டையர்களையும், தடித்தவர்களையும், ஒல்லியர்களையும், சப்பை மூக்கினர்களையும், நீண்டு உயர்ந்து வளர்ந்த மூக்கினர்களையும், பல்வேறு நிறமுடையவர்களையும் இன்று காணலாம். ஆகவே, தேசிய உணர்ச்சி இனத்தின் விளைவு எனக்கொள்வது பொருத்தமன்று.

ஒரு தேசிய நாட்டினர் பல இனங்களைச் சார்ந்திருப்பதுபோல ஒரே இனத்தைச் சார்ந்தவர் பல தேசிய நாட்டினராக விளங்குகின்றனர். ஆங்கிலேயர், ஜெர்மானியர், டேனிஷ் மக்கள், ஸ்கான்டிநேவியர், டச்சு மக்கள் இவர்களனைவரும் ஒரே இனத்தைச் சார்ந்தவரெனினும் பல்வேறு தேசிய நாட்டினராய் இருக்கின்றனர். யூகோஸ்லேவியாவில் மக்கள் ஒரு இனத்தைச் சார்ந்தவராயினும் தேசிய உணர்ச்சி அவர்களிடம் வலுவடையவில்லை. இந்திய மக்கள் பல்வேறு இனங்களைச் சார்ந்தவர்களாயினும் அவர்களிடையில் தேசிய உணர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஆகவே, இனத்தைத் தேசிய உணர்ச்சிக்கு மூலகாரணமெனக் கொள்வது தவறெனினும், இன ஒற்றுமை அவ்வுணர்ச்சியை எழச் செய்ய மிக்க துணை புரியும் எனக் கூறலாம். ஒரு தனி நாட்டில் சீன மக்களும், நீக்ரோவர்களும், ஐரோப்பிய மக்களும் வாழ நேரிடின் அவர்கள் மூன்று தனி இனங்களாக இருப்பார்களேயன்றி ஒன்று சேர்ந்து ஒரு தனி இனமாக மாறுவார்கள் என்று கூறமுடியாது. இம்மட்டிற்கும் இனம் தேசிய உணர்ச்சிக்குச் சிறிது சாதகமாக இருக்கின்றது. ஆனால், அது இன உணர்ச்சியாக மாறித் தங்களது இனமே தலைசிறந்ததென்ற எண்ணத்தை மக்களிடையில் உண்டுபண்ணுமாயின் அவர்கள் தேசிய உணர்ச்சியை அடையார். நம்

தேசத்தில் அத்தகைய உணர்ச்சிக்குக் காரணமான வகுப் புப் பெருமை தேசீய உணர்ச்சியின் வேகத்தைத் தடை செய்கின்றது. தாராளமாகப் பழகும் தன்மையும், விவாகத் தடையின்மையும் ஒரு தேச மக்களிடையில் இருக்கு மெனில் அவர்கள் எளிதில் தேசீய உணர்ச்சியைப் பெறு வர் என்பது திண்ணம். அண்மையில் இன ஒற்றுமையை அடிப்படையாகக்கொண்டு ஜெர்மன் சர்வாதிகாரியான ஹிட்லர் ஜெர்மன் மக்களை ஒன்று சேர்க்க முயன்றார். இன உணர்ச்சியைப் பல்வேறு விதங்களில் எழச் செய்தார். வெற்றி பெறவில்லை. ஆகவே, அநேக இனங்களைச் சார்ந் தவர்களிடத்தில் ஒற்றுமை உணர்ச்சியைப் பார்க்கலாம்; ஒரே இனத்தைச் சார்ந்தவர் வேற்றுமைப்பட்டு இருக்க லாம். இன்று எத்தேசீய நாட்டினரும் ஒரு தனி இனத்தைச் சார்ந்தவர் அன்று. போக்குவரவு வசதிகள் அதிகரிப்ப தாலும், நாகரீகம் வளர்ச்சி யடைவதாலும் இன ஒற்றுமை குன்றும் எனக் கொள்ளலாம். எனவே, தேசீயத்தையும் இனத்தையும் ஒன்று சேர்ப்பது ஆசிரியர் **கார்னர்** கூறுவது போல முறை அன்று.

**3. மொழி:** மூன்றாவது சாதனமாகிய மொழியை ஆராய்ந்திடின் தேசீய உணர்ச்சி அதனாலே எழுகின்றதென்று கொள்வது தவறு என்பது நன்கு விளங்கும். ஸ்விஸ் மக்கள் இத்தாலி, பிரெஞ்சு, ஜெர்மன், ரோமான்ஷ் என்ற நான்கு மொழிகளை உபயோகிக்கின்றனர். இவை அரசாங் கத்தால் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன. சட்டசபையில் அங்கத்தினர்கள் இந் நான்கு மொழிகளில் எம்மொழியை யும் உபயோகிக்கலாம். அமெரிக்க ஐக்கிய நாட்டினர் பொதுவில் ஆங்கிலத்தை உபயோகித்த போதிலும் பல மொழிகள் அவர்களிடம் பழக்கத்திலிருக்கின்றன. யூதர்கள் தாங்கள் வாழும் நாட்டு மொழிகளில் மிக்க தேர்ச்சி பெற் றிருக்கின்றனரெனினும், அம்மக்களுடன் சேர்ந்து ஒரு இனமாக ஆகவில்லை. அமெரிக்கர்களும், கானடியர்களும் ஆங்கிலத்தையே உபயோகித்து அண்மையில் வாழ்ந்து வருகின்றனரெனினும் ஒரே இனமாகாது, இரு தேசீய

நாட்டினராய் இருக்கின்றனர். அவ்வாறே பிரிட்டிஷ் மக்களுக்கும் அமெரிக்கருக்கும் இடையில் மொழி ஒற்றுமை இருப்பினும் அவர்கள் இரு தேசிய நாட்டினராயிருக்கின்றனர். பெல்ஜிய மக்கள் பிளிமிஷ், வலூன் என்னும் இரு மொழிகளை உபயோகிக்கின்றனர். கியூபெக்கில் இருக்கும் கானடியர்கள் பிரெஞ்சு மொழியை உடையவர்கள். பிரான்ஸிலிருக்கும் பால்க்ஸ் மக்களும், பிரிட்டனி மக்களும் பிரெஞ்சு மொழியை உபயோகிக்கவில்லை. எனினும், அவர்கள் கானடிய தேசியத்தையும் பிரெஞ்சு தேசியத்தையும் முறையே பெற்றுள்ளனர். ஆகவே, மொழியைத் தேசியத்தின் சின்னமாகக் கொள்வது தவறாகும்.

கலப்பில்லாத இனத்தைப்போல கலப்பில்லாத மொழியையும் காண்பதரிது. இற்றைய ஆங்கிலம் நார்மன்-பிரெஞ்சு மொழியையும், ஆங்கிலத்தையும் அடிப்படையாகக்கொண்டு உலகில் இதர மொழிகளின் சேர்க்கையால் வளம்பெற்றிருக்கின்றது. பிரெஞ்சு மொழி லத்தீனையும், காலிஷ் மொழியையும், பிராங்க்ஸ் மொழியையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. மொழியைத் தேசிய உணர்ச்சிக்குக் காரணமாகக் கொள்ள ஏதுவில்லையெனினும், அது பெரும்பாலும் கலப்புற்றேவளம்பெறுகின்ற காரணத்தினால் அதை மக்களிடையில் எழும் ஒற்றுமையுணர்ச்சிக்குத் தாய்ப்பால் ஆகக் கூறுவது பொருந்தும். ஏனெனில் பொது மொழியே மக்களிடையில் ஒத்த மனத்தன்மையை எழச்செய்யும் இயல் புள்ளது. ஒத்த மனத்தவர் தங்களையொரு தனிக் கூட்டம் எனக் கருதுவது இயல்பு. புராதன கிரேக்கர்கள் மொழி வேறுபாட்டினால் அந்நியர்களை அநாகரீகர்களெனக் கருதினர். தமிழ் மொழியிலும் சமஸ்கிருத மொழியிலும் அந்நியர்கள் மிலேச்சர்களென்று கூறப்படுகின்றனர். ஒரு தேச மக்கள் அடையும் இன்பத்தையும், துன்பத்தையும், வெற்றியையும், தோல்வியையும், மொழி வாயிலாகவே கவிகளும் வரலாற்று ஆசிரியர்களும் வெளியிடுகின்றமையால், மொழி அவர்களை ஒன்று சேர்க்கும் இயல்புள்ளதாகின்றது.

அத்தேசத்தில் காலஞ்சென்ற பெரியோர்களின் கருத்துக்களையும் செயல்களையும் மொழி வாயிலாகவே அம்மக்கள் அறிந்துகொள்ள முடியும். அம்மொழியில் இயற்றப்படும் இலக்கியங்களும், இதிகாசங்களும், மத நூல்களும் மக்களை ஒன்று சேர்க்கும் தன்மையுடையன. பல சிறு இனங்கள் தங்கள் மொழிகளை மறந்து அண்மையிலுள்ள ஒரு பெரிய இனத்தின் மொழியை ஏற்று அதனுடன் ஒற்றுமை அடைகின்றன. வட இத்தாலியர்களும், தென் இத்தாலியர்களும் இனத்தில் வேறுபட்டிருப்பினும் மொழி ஒற்றுமையினால் ஒரு தேசிய நாட்டினராக விளங்குகின்றனர். ஆங்கிலம், இந்திய மக்களிடையில் பரவவே அவர்களிடையில் தேசிய உணர்ச்சி எழுந்தது. ஆனால் இந்தியர்களிடையில் பொது மொழியின்மை அத்தேசிய உணர்ச்சியின் வளர்ச்சியைத் தடைசெய்கின்றது. இந்திய தேசிய வாதிகள் ஆங்கிலேயரிடமிருந்து தேசத்தை விடுவிக்கத் தங்கள் சகோதரர்களிடம் ஆங்கிலத்திலேயே செய்திகளைத் தெரிவிக்க வேண்டியிருந்ததால், பொதுமொழியின்மை தேசிய இயக்க வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கின்றதென்பதை எளிதில் யூகித்துக் கொள்ளலாம். இன ஒற்றுமையைவிட மொழி ஒற்றுமையே மக்களிடையில் தேசிய உணர்ச்சியை எழச்செய்யும். எனினும், மொழியையே அவ்வுணர்ச்சிக்கு மூலகாரணமாகக் கொள்வது தவறாகும்.

**4. மதம்:** மத ஒற்றுமை தேசிய உணர்ச்சியை மக்களிடையில் எழச்செய்கின்றதென்பது உண்மையே. மதவேற்றுமையால் அயர்லாந்தில் கத்தோலிக்க மதத்தினரும், பிராட்டெஸ்டன்டு மதத்தினரும் ஒற்றுமையடையாது இருக்கின்றனர். டச்சு மக்களும், பெல்ஜிய மக்களும் இரு தேசிய நாட்டினராய் விளங்குவதற்குக் காரணம் மத வித்தியாசமே ஆகும். இந்தியாவில் முஸ்லிம் மக்களுக்கும், இந்துக்களுக்குமிடையிலுள்ள மத வேறுபாடுகள் தேசிய உணர்ச்சியை வளரவொட்டாது தடுக்கின்றன. முஸ்லிம்மக்கள் பாஞ்சாலத்தையும், வங்காளத்தையும் பிரிவினைசெய்து பாகிஸ்தானைப் பெற்றுக்கொண்டுள்ள

னர். துருக்கி சுல்தானின் ஆட்சிக்குட்பட்டிருந்த கிறிஸ்தவ மக்கள் மத வித்தியாசத்தால் கிளர்ச்சி செய்து சுதந்திரம் பெற்றனர். பிராட்டெஸ்டண்டு மதத்தினருக்கும், கத்தோலிக்கர்களுக்கும் உள்ள வேற்றுமைகளே போலந்து நாடு 18-வது நூற்றாண்டில் வீழ்ச்சியுறுவதற்கு முக்கிய காரணமாகும். ஆகவே, மத ஒற்றுமை தேசிய உணர்ச்சியை எழச்செய்கிறதெனக் கூறலாம். ஆனால் அவ்வுணர்ச்சிக்கு அதை மூலாதாரமாகக் கொள்வது பொருந்தாது.

ஆராய்ந்து நோக்கின், மிக்க தேசிய உணர்ச்சி பெற்ற பிரிட்டிஷ் மக்களிடையில் மத ஒற்றுமையில்லை என்பதை அறியலாம். அரசாங்கம் ஆங்கிளிக்கன் வழக்கத்தை நிறுவியிருக்கின்றதெனினும், இதர அனுஷ்டானங்களைப் பின்பற்றும் பிரிட்டிஷ் மக்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கின்றனர். அரசுக்கு அந்நியர்களால் ஆபத்து நேரும்பொழுது மக்களிடையில் மத வேற்றுமைகள் மறைகின்றன. அவர்கள் ஒற்றுமையுடன் ஒத்துழைக்கின்றனர். ஜெர்மனியில் பிராட்டெஸ்டண்டு அனுஷ்டானத்தையும், கத்தோலிக்க மதத்தையும் பின்பற்றுகின்றவர்கள் பெரும்பாலும் எண்ணிக்கையில் சரிசமமாக இருக்கின்றனர். தேசிய உணர்ச்சி இம்மத வேற்றுமையால் மறையாமல் அவர்களிடையில் ததும்புகின்றது. மேலும் உலக மதங்களான கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் இவைகள் கிறிஸ்தவர்களையும், முஸ்லிம் மக்களையும், பௌத்தர்களையும் தனித் தேசிய இனத்தினராக ஆக்கவில்லை யன்றோ? ஒரே மதத்தினர் தங்களுக்குள் போர் புரிகின்றார்கள் அல்லவா? ஆகவே, மதத்தைத் தேசிய உணர்ச்சிக்கு அடிப்படையெனக்கொள்வது தகுதியன்று. இன்று நாகரீகம் பெற்ற நாடுகளில் மதச் சகிப்புத்தன்மை சட்டப்படி ஏற்பட்டிருப்பதால் மத ஒற்றுமையைத் தேசிய உணர்ச்சிக்கு அவசியம் என்று கருத இடமில்லை. சில பொதுத் தத்துவஞானங்களை மக்களுக்குப் போதித்து அவர்களுடைய வாழ்க்கையில் ஒற்றுமையை உண்டுபண்ணுவதால் மதத்தை இம்மட்டும் தேசிய உணர்ச்சியை எழச் செய்யும்

சாதனம் எனக் கொள்ளலாம். முற்காலத்தில் மக்களிடையில் ஒற்றுமையை மதம் எழச் செய்தது என்பது உண்மையே. ஆனால் மதச் சகிப்புத்தன்மை ஏற்படுத்தப்பட்ட பின்னர், அதைத் தேசிய உணர்ச்சிக்கு மூலாதாரமாகக் கொள்வது பொருத்தமன்று.

**5. அரசு:** ஒரு தேச மக்கள் ஓர் அந்நிய அரசின் கீழ் நெடுங்காலம் வாழ்வரேனில் அவர்கள் ஒற்றுமை யடைவார்களெனக் கருதப்படுகின்றது. அந்நியரின் ஆட்சி மக்களிடையில் தேசியத் தீயை மூட்டும் என்பது உண்மையே. இந்திய மக்கள் பிரிட்டிஷ் ஆட்சியினால் ஒற்றுமை அடைந்திருக்கின்றனர். கிரேக்கர்கள் துருக்கி சுல்தானின் ஆட்சியை வெறுத்து ஒற்றுமை அடைந்தனர். ஐரிஷ் கத்தோலிக்க மக்கள் ஆங்கில ஆட்சியை அயலார் ஆட்சி எனக் கருதிக் கிளர்ச்சி செய்து, சுதந்திரம் பெற்றிருக்கின்றனர். எகிப்தியர் ஆங்கில ஆட்சியிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டனர். இத்தாலியர் அந்நிய அரசுகளின் அதிகாரத்தை வெறுத்துத் தேசிய உணர்ச்சி பெற்றனர். ஆங்கிலேயர் ஆதியில் பல்வேறு வேற்றுமைகள் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களை ஆட்சி புரிந்த நார்மன் மன்னர்களும் அவர்களுக்குப் பின்னர் தோன்றிய அஞ்ஜீவன் அரசர்களும் தங்களது நிர்வாக முறையினால், அவர்களை தங்களுடைய வேற்றுமைகளை மறந்து ஒற்றுமை அடையும்படி செய்தனர். ஸ்பானிஷ் மக்கள் ஐந்தாம் சார்லஸ், இரண்டாம் பிலிப் இம்மன்னர்களின் ஆட்சியில் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமை யடைந்தனர். அயலாரின் ஆதிக்கம் மக்களிடம் ஒற்றுமை உணர்ச்சியை எழச் செய்கின்றதென்பது உண்மையே. ஆனால் அவ்வித ஒற்றுமை நிரந்தரமாக இருக்கவேண்டுமெனின் மக்களிடையில் ஒற்றுமைக் கருவிகளாகிய மதம், மொழி, இனம், பழக்க வழக்கங்கள், நாகரீகம் முதலியவைகளில் சிலவை இருக்கவேண்டும். அவைகளில்லாவிடில் அந்நியராட்சியால்

விளைந்த ஒற்றுமை உணர்ச்சி அவ்வாட்சி மறைந்ததும் நீர்மேல் குமிழிபோல் நிலைத்து இராது என்பது திண்ணம். நம் நாட்டு மக்கள் இவ்வுண்மையை மறவாதிருப்பார்களாக.

**6. பொருளாதார ஒற்றுமை:** மக்களிடையில் பொருளாதார ஒற்றுமை தேசிய உணர்ச்சியை எழச் செய்கின்றது என்று அநேகர் கருதுகின்றனர். பொருளாதார நோக்கமே ஜப்பானியர்களை ஒன்று சேர்த்துப் பிற நாடுகளைக் கைப்பற்றும்படி அவர்களைத் தூண்டியது எனக் கொள்ளலாம். ஆஸ்திரேலியர், மங்கோலிய மக்களால் தங்களுக்கு ஆபத்து நேரிடும் எனக் கருதி ஒன்று சேர்ந்திருக்கின்றனர் என்பது உண்மையே. ஆனுல் பொருளாதார ஒற்றுமையைத் தேசிய உணர்ச்சிக்குக் காரணம் எனக் கொள்வது தவருகும். ஏனெனில், கானடியரும் அமெரிக்க ஐக்கிய நாட்டினரும் ஒன்று சேர்ந்து ஒரு பொது அரசின் கீழ் வாழ்ந்திடின், இருதிறத்தினரும் லாபம் அடைவார்களென்பது திண்ணம். ஆனுல் அவர்கள் அவ்வாறு சேராது தனித்து நிற்பதின் காரணம் அவர்களுடைய தேசிய உணர்ச்சியே ஆகும். ஆசிரியர் **லாஸ்கி** தமது "அரசியல் இலக்கணம்" என்னும் நூலில் கூறுவது என்னவெனில், இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர் அகன்ற பின்னர் சிறிது குழப்பமுண்டாகுமென்று இந்திய அறிஞர்களுக்குத் தெரியுமெனினும் பல்லாயிரக் கணக்கான இந்திய மக்கள் அவர்களை வெளியேறும்படி வற்புறுத்துகின்றனர். காரணம், ஆங்கிலேயர் தேசத்தில் நிலவச் செய்யும் சமாதானத்தால் விளையும் நலனைக் காட்டிலும், இந்தியர்களின் குழப்பத்தால் உண்டாகும் தீமையே சிறந்ததென அவர்கள் கருதுவதேயாகும். ஆங்கிலேயர் எகிப்திலிருந்து வெளியேறின் அதனுல் அத்தேச மக்கள் சிறிது நஷ்டமடைவார்கள் என்பதை உணர்ந்தும், எகிப்தியர் அவர்களை வெளியேறும்படி நிர்பந்தித்தார்கள் அன்றோ? ஆகவே, பொருளாதார ஒற்றுமையைத் தேசிய உணர்ச்சிக்கு ஆதாரம் எனக்கொள்வது தகுதியன்று. லாபத்தைக்

கருதியா மக்கள் தேசத்திற்காக உயிர் துறக்க விரும்பு கின்றனர்? தேசீய உணர்ச்சியை ரூபாய் அணு பைசா விற்கு ஒப்பிட இயலாது. பொன்னும் வெள்ளியும் தியாக மனப்பான்மையை உண்டாக்கும் வலிமையுள்ளதன்று. தனித்து நிற்பது லாபம் அளிக்காது எனினும் மக்கள் சுதந்திரத்தையும் சுய ஆட்சியையுமே விரும்புகின்றனர். இலைகளேயும், கொடிகளேயும் தின்று காட்டில் சுயேச்சை யாய் இருக்கும் யானை ஒன்று நாட்டில் கரும்பு, தேங்காய், பச்சரிசி முதலியன மக்களிடம் பெறலாம் என நினைத்து மனமிணங்கி அவர்களின் அடக்குமுறைக்கு உட்படுமா? உட்படாது அன்றோ? அதுபோல மக்களும் லாபத்தை விடச் சுதந்திரத்தையே மேலானதாகக் கருதுவது இயல்பே. தேசீய ஒற்றுமைக் கருவிகள் அனைத்தினும் பொருளாதாரக் கருவியே வலுவற்றதெனக் கூறலாம்.

**7. நாகரீகம்:** மக்களிடையில் ஒத்த நாகரீகம் இருக்குமெனின் அவர்கள் ஒற்றுமையுணர்ச்சியை எளிதில் அடைவார்களென்று கருதப்படுகின்றது. நாகரீகத்தில் ஒற் றுமையுள்ள மக்களுக்கு அவர்களது நாகரீகம் இதர நாக ரீகங்களிலிருந்து வேறுபட்டதென்ற எண்ணத்தைத்தேசீய உணர்ச்சி ஏழச் செய்யும். சிற்பம், கலை, இலக்கியம், ஆடை யணியும் விதம், கட்டடங்கள் அமைத்தல், பழக்க வழக்கங் கள் முதலியன நாகரீகத்தின் அம்சங்களாகும். இவை களில் ஒத்திருக்கும் மக்களுக்கு ஒரு தனிக்குணம் உண் டென்று அநேகர் கருதுகின்றனர். உதாரணமாக ஆங்கி லேயர் இதர ஐரோப்பிய மக்களைவிடத் தேயிலைப் பானத் தில் மிக்க பிரியமுடையவர்கள். ஜெர்மானியர்களுக்கு பீர் என்னும் மயக்கநீர் பருகுவதில் மிகுந்த பிரியம் உண்டு. ஆனால், ஒரு கூட்ட மக்களிடம் காணப்படும் பழக்க வழக்கங்கள் அவர்களுக்கே உரியதெனக் கொள்வது தகுதி யன்று. ஆங்கிலேயர் முற்காலத்தில் தேயிலையைப் பற்றி அறியார் அன்றோ? அவர்களைத் தமாஷ் பேர்வழிகள் என்று அந்நிய மக்கள் குறிப்பிட்டு வந்தனர். ஆனால் இப் பொழுது அவர்களை வர்த்தக லாபத்தில் மோகங்கொண்ட

கூட்டத்தினர் என்று அழைக்கின்றனர். சங்கீதத்திலும், தத்துவ ஞானத்திலும் ஜெர்மானியர்கள் முற்காலத்தில் இன்றிருப்பது போல புகழுடைய வில்லை. நவீன இந்திய மக்கள குடுமி வெட்டப்பட்டவராய்ச், சிறுபான்மையினர் நறுக்கு மீசையும் உடையவர்களாய் காணப்படுகின்றனர். அவர்களில் அநேகர் ஐரோப்பியர்களைப் போல ஆடைகளை அணிகின்றனர். ஆகவே, எக்கூட்டத்தினருக்கும் தனி சுபாவம் உண்டெனக் கொள்வது முறையன்று. காலப் போக்கிற்கு ஏற்ப நாகரீகமும் பழக்க வழக்கங்களும் மாறும் தன்மை யுடையன. ஒத்த நாகரீகம் தேசீய உனர்ச் சியை எழச்செய்வது உண்மையே. ஆனால் அதுவே அதற்கு மூலகாரணம் எனக் கொள்வது பொருந்தாது. ஒத்த நாக ரீகமுடைய கானடியரும், அமெரிக்க ஐக்கிய நாட்டினரும் பிரிந்து நிற்பதேன்? பெல்ஜிய மக்களும்,டச்சுக்காரர்களும், இரு தேசீய நாட்டினராக ஏன் இருக்கின்றனர்? தேசீய உணர்ச்சியை ஒத்த நாகரீகம் எழச்செய்யும் எனக் கொள் வது சரியன்று.

**8. வரலாறு:** மதம், இனம், பொருளாதார ஒற் றுமை, நாகரீகம் இவைகளைவிடத் தேசீய உணர்ச்சிக்கு மிகவும் முக்கியமான கருவி மக்களின் வரலாறு ஆகும். ஒன்று சேர்ந்து அனுபவித்த இன்பமும், பட்டதுன்பமும், அவைகளின் நினைவும் மக்களிடையில் ஒற்றுமை யுணர்ச் சியை உண்டுபண்ணும் என்று கூறலாம். செர்பிய மக் களின் ஒற்றுமைக்குக் காரணம், அரசர் ஸ்டீபன் துஷான் என்பவரின் ஆட்சியில் அவர்கள் பெற்ற பெருமையின் நினைவும், 1448-ல் கஸோவாப் போரில் துருக்கியர் கையில் அடைந்த படுதோல்வியும், அதனால் நான்கு நூற்றாண்டு களாக அன்னவர்க்கு அடிமையாக இருக்க நேர்ந்ததும், 1913-ல் துருக்கியர்மேல் அவர்களடைந்த வெற்றியும், 1914-ல் ஜெர்மானியர் கையில் அடைந்த தோல்வியும் ஆகும். சற்று பிளவுபட்டிருந்த பெல்ஜிய மக்கள் ஜெர்மானி யரின் தாக்குதலினால் தேசீய உணர்ச்சி பெற்றனர். டச்சு மக்கள் தேசீய உணர்ச்சி பெறுவதற்கு ஸ்பானிஷ் மக்க

ளின் தாக்குதலே காரணமாகும். கடலணைகளை உடைத்து நாட்டில் வெள்ளப்பெருக்கை உண்டாக்கி ஸ்பானிஷ் எதிரி களை ஓடும்படி வீரத்துடன் போர்புரிந்ததை அவர்களால் மறக்கமுடியுமா? தேசிய உணர்ச்சி பெற்ற ஸ்காட்டிஷ் மக்கள் பானக்பர்ன் வெற்றியையும் பிளாடன் தோல்வியை யும் மறப்பரோ? **ஆர்னால்டு விங்கல் ரீடின்** வீரச் செயலே ஸ்விஸ் மக்களை ஒற்றுமையுடன் இருக்கச் செய்கின்ற தெனின் அது மிகையாகாது. பிரிட்டிஷ் ஆட்சியின் விளை வாக இந்தியர்கள் ஒற்றுமை யுணர்ச்சி பெற்றுள்ளனர். பாஞ்சாலப் படுகொலையையும், மகாத்மா காந்தியின் சத்தி யாக்கிரகப்போரையும் இந்தியர்கள் மறப்பரோ? நெப்போ லியனின் தாக்குதலே ஜெர்மானிய மக்களின் ஒற்றுமைக்குக் காரணமாகும். ஆகவே, அந்நியரின் தாக்குதலைக் குறிக் கும் வரலாறு ஒரு தேச மக்களை ஒற்றுமைப்படுத்தும் என் பார் ஆசிரியர் **ராம்ஸேமியூர்**. அந்நிய மக்களுக்கு அடி மையாக இருத்தலும், அதன் விளைவாக ஏற்படும் அதிருப்தி யும், கிளர்ச்சியும், போரும், வீரச்சாவுமே தேசிய உணர்ச் சிக்கு வித்து என்றும், அது இரத்த ஆற்றில் முளைத்துத் தழைத்தோங்கவேண்டும் என்றும் கருதுகின்றனர் பலர். தளபதி சியாங் - கே - ஷேக்கின் தலைமையில் சீன மக்கள் ஜப்பானியர்களை வீரத்துடன் எதிர்த்து அவ்வித உணர்ச்சி யைப் பெற்றதை உலக மக்கள் அறிவர்.

"கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்ற கூற்றிற்கேற்ப உலக வரலாற்றில் இதுகாறும் நிகழ்ந் திராத சத்தியாக்கிரகப் போரை தலைவர் காந்தி ஆரம்பித்து இந்தியமக்களை சுதந்திரம்அடையும்படிசெய்தது குறிப்பிடத் தக்கது. வெடிக் குண்டுகளும், துப்பாக்கிகளும், கத்திகளும் இப்போரில் புறக்கணிக்கப்பட்டன. இந்திய மக்களின் ஒற்றுமையுணர்ச்சி ஆங்கிலேயரைத் தங்கள் மூட்டைமுடிச்சு களுடன் நாட்டைவிட்டு ஏகும்படி செய்துள்ளது. ஆகவே, மக்களின் தேசிய உணர்ச்சிக்குக் காரணம் மதமும், இன மும், மொழியும், லாபம் பெறும் நோக்கமும் அன்று. சுதந்திர வாழ்க்கையில் ஆர்வமும், அதை அடைய எத்

தகைய தியாகத்தையும் செய்யத் துணியும் மனப்பான்மையும், ஒன்றுகூடி அனுபவித்த இன்பமும், அடைந்த இன்னலும், அவைகளின் நினைவுமே தேசீய உணர்ச்சிக்கு மூலாதாரமாகும். ஒத்த நாகரீகமும், மதமும், இனமும், மொழியும் அவ்வுணர்ச்சியை எழச் செய்ய மிக்க துணைபுரியுமேயன்றி; அவைகள் அதை உற்பத்தி செய்ய முடியாதெனக் கூறலாம். அவையனைத்தும் மனிதனுக்குச் சரீரம் போன்றவையாகும். தேசீய உணர்ச்சி அதனுள்ளிருக்கும் ஆன்மாவாகும். சில அங்கங்களின்றி மனிதன் உயிரோடு வாழ்வதுபோல, தேசீய உணர்ச்சிக்குக் கருவிகளெனக் குறிப்பிடப்பட்ட நாடு, மதம், மொழி, இனம் முதலியவற்றில் சில இல்லாத மக்களும் தேசீய உணர்ச்சி ததும்ப வாழ்வார்களெனக் கொள்ளலாம்.

ஜெர்மானியர் ஒத்த இனத்தையே தேசீயத்திற்கு மூலாதாரம் என்பர். ஆங்கிலேயர் மொழியையும் நாகரீகத்தையும் அதற்குக் காரணமெனக் குறிப்பிடுவர். அமெரிக்க ஐக்கிய நாட்டினர் அவைகளைப் பொருட்படுத்தாது பொது அரசே தேசீய உணர்ச்சியை எழச் செய்யும் என்பர். பொது அரசு அதற்குக் காரணமெனின் பிரிட்டனில் தேசீய உணர்ச்சியைப் பெற்ற மூன்று தனிக்கூட்டத்தினர் இருப்பதேன் ? வெல்ஷ் மக்களும், ஸ்காச்சு மக்களும் ஆங்கிலேயரைப்போல தங்களுடைய நாகரீகத்தில் பற்றுடையவர்களாக இருக்கின்றனர். உண்மையில் எக்காரணத்தினால் அவ்வுணர்ச்சி உற்பத்தியாகின்றது என்பதை வரையறுத்துக் கூறுவது எளிதன்று. ஒரு தேச மக்களிடையில் நிலவும் ஒத்துழைக்கும் மனப்பான்மையே அதற்கு மூலாதாரமாகும்.

தேசீயம் என்பது சிக்கென்று நாம் கையிற் பற்றும் பொருளன்று. அதைப் பிடிக்க முயன்றால் அது எளிதில் நழுவிச் செல்லும் தன்மை உடையது. ரஸாயன நிபுணர்கள் மூலப்பொருள்களைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு வஸ்துவைப் பிரித்துப் பகுத்துப் பரீட்சை செய்வதுபோல நாம் தேசீயத்தைப் பரீட்சை செய்ய முடியாது. அது இனத்

தைச் சார்ந்ததன்று; மதத்தைச் சார்ந்ததன்று; தேச அமைப்பைச் சார்ந்ததன்று; வர்த்தக லாபத்தையும் மொழியையும் சார்ந்ததன்று; ஒரு தேசமக்கள் எக்காரணத்தினால் தேசிய உணர்ச்சியுடன் விளங்குகின்றனர் என ஆராய்ந்திடின் அவர்கள் ஒத்துழைக்கும் மனப்பான்மையை உடையவராக இருப்பதால் அவ்வாறு விளங்குகின்றனர் எனக் கூறலாமேயன்றி, தேச அமைப்பினாலோ அல்லது இன ஒற்றுமையினாலோ அவ்வாறிருக்கின்றனர் எனக் கூறுதல் பொருத்தமன்று. தேசீயம் ஒருவகை மனோநிலை: உள்ளுணர்ச்சி: பொதுபடக்கூறின், விவாகத் தடைகளின்மையும், ஜீவாதாரம் என அங்கீகரிக்கப்பட்ட சில நெறி தத்துவங்களும், ஒன்றுகூடி அனுபவித்த இன்ப துன்பங்களின் நினைவுமே அவ்வுணர்ச்சிக்கு முக்கிய காரணமெனக் கொள்ளலாம். மொழியும், இலக்கியமும் அதை வலுவுறச்செய்யும் தன்மை உடையன. இதர கருவிகளும் அவ்வாறே. அவைகளைப் பெற்றிருக்கும் மக்களைப் பிரிப்பது எளிதன்று. அவைகள் இன்றேல் தேசீய உணர்ச்சி நிரந்தரமாக நிலவுமெனக் கருதுவது தகுதியன்று.

தேசியத்தை பிச்சி போன்ற மென்மையான பூஞ் செடிக்கு ஒப்பிடலாம். நன்கு பண்படுத்தப்பெற்ற நிலத்தில் அது தழைத்தோங்கும். அதன் வளர்ச்சியைத் துரிதப் படுத்தினால் தீமை விளையுமேயன்றி நன்மை பயக்காது. அதை மானிட நாகரீகத்திற்கு இன்றியமையாததெனக் கருதப் போதிய சான்றில்லை. உலகில் நெடுங்காலம் மனித சமூகத்தில் அவ்வித உணர்ச்சி கிடையாது. அது அண்மையில் ஐரோப்பாவில் எழுந்து இன்று உலகெங்கும் பரவியுள்ளது. அதன் பிறப்பையும் வளர்ச்சியையும் அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.

# அத்தியாயம் 2

# ஐரோப்பாவில் தேசீய வளர்ச்சி வரலாறு

## I. முற்காலம்

**தேசீயம்:** மக்களின் ஒருவித மனோநிலை என்று முந்தின அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளோம். அவ்வுணர்ச்சியைப் பெற்றஒரு கூட்டத்தினர் லாபம், பலம், சௌகர்யம் முதலிய வைகளைப் பொருட்படுத்தாது உலகில் தனி அரசு ஒன்றை அமைத்துத் தனித்து இயங்க ஆர்வங் கொள்வர்: தங்கள் இனத்தவர் வாழும் நிலப்பரப்பு முழுவதையும் அவ்வரசின் கீழ்க்கொண்டு வருவதில் ஈடுபடுவர்: அந்நியர் ஆட்சியை வேம்பென வெறுப்பர்: ஒற்றுமையும் அரசியல் சுதந்திரமுமே அவர்களது உணர்ச்சியின் அடிப்படையாகும். இத்தகைய தன்மை வாய்ந்த தேசீயம் நவீன காலத்தில் தோன்றிய உணர்ச்சியே யன்றிப் புராதன காலத்திலும், இடைக்காலத்திலும் அது காணப்படவில்லை. முற்காலத்தில் மிக்க புகழுடன் விளங்கிய கிரேக்கர்கள் நகர அரசுகளின் கீழ் வாழ்ந்து வந்தனர். நகரத்தின் நலத்திற்காக எத்தகைய தியாகமும் செய்ய அவர்கள் ஆர்வமுற்றிருந்தனரே யன்றிக் கிரீஸ் தேசத்திற்காக உழைக்க அவர்கள் விரும்பவில்லை. நவீன காலத்தில் ஐரோப்பிய மக்களிடம் காணப்படும் தேசப் பற்றும், தேசீய உணர்ச்சியும் அவர்களிடம் தோன்றவில்லை. புராதன கிரேக்கர்களுக்குப் பின்னர் பெருமையுடன் விளங்கிய ரோமாபுரி மக்கள் இதர இனத்தினர்களைத் தங்களுடன் ஒன்று சேர்ப்பதில் கைதேர்ந்த நிபுணர்கள். அவர்களிடமும் தற்கால தேசீய உணர்ச்சியைக் காண்பதரிது.

இடைக்காலத்தில் ஐரோப்பியர்களிடம் தேசீய உணர்ச்சி பல நூற்றுண்டுகள் சென்றும் எழவில்லை என்றே கூறலாம். காரணம், அவர்கள் அனுஷ்டித்து வந்த பண்டமானிய முறையேயாகும். அம்முறைக் கேற்ப மன்

னர்கள் மக்களைப் பொருட்படுத்தாது நாடுகளைத் தங்களுக்குள் பங்கிட்டு வந்தனர். ஓர் அரசிளங்குமாரி அந்நிய நாட்டு இராஜகுமாரனை மணந்து சீதனமாகத் தன்தேசத்தில் ஒரு பகுதியைப் பெறுவது வழக்கமாயிருந்தது. பிரபுக்கள் இரண்டு, மூன்று மன்னர்களிடமிருந்து நிலங்களைப் பெற்று அவர்களின் குடிகளாக இருந்தனர். மேலும் அக்காலத்தில் ஐரோப்பியர்களின் மதத் தலைவர் போப் ஆண்டவர் என்றும், அரசியல் தலைவர் புனித ரோமாபுரிச் சக்கரவர்த்தி என்றும், அக்கண்டமே ஒரு கிறிஸ்தவ நாடென்றும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தமையால் தேசியஉணர்ச்சி அவர்களிடையில் பரவவில்லை. மொழிவேற்றுமையும், மத வேற்றுமையும் அவர்களிடம் பெரும்பாலும் காணப்படவில்லை. அவர்களனைவரும் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய பொது மொழி இலத்தீன். அம்மொழியே இலக்கியமொழி என்றும், அதில் தேர்ச்சி பெற்றவர்களே அறிஞர்கள் என்றும் மக்கள் கருதினார்கள். இலத்தீனில் பாண்டியத்தியம் அடைந்த ஒருவர் ஐரோப்பாவில் எந்நாட்டிலும் கஷ்டமின்றி வாழ வசதியிருந்தது. இராஸ்மஸ் என்னும் டச்சு அறிஞர் இலத்தீனில் தேர்ச்சி பெற்றிருந்ததினால் ஆங்கிலேயர், இத்தாலியர், ஜெர்மானியர், பிரெஞ்சுக்காரர் முதலியவர்களுடன் நெருங்கிப் பழக அவருக்கு சாத்தியமாயிற்று. அம்மொழியிலேயே ஐரோப்பிய அறிஞர்கள், தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டனர். இலக்கியங்களை அமைத்தனர். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், போர்ச்சுகீஸிய மொழிகள் பாமர மக்களின் மொழிகளெனப் புறக்கணிக்கப்பட்டன. பொது மக்கள் அறியாமையிலும், அந்தகாரத்திலும் அமிழ்ந்திருந்தனர். போப் ஆண்டவரும், அவருடைய பிரதிநிதிகளும் கல்வி முறையை எல்லா நாடுகளுக்கும் வேற்றுமையின்றி ஒரே ரீதியாக வகுத்து வந்தனர். மதவேற்றுமையின்மையாலும், போக்குவரவு வசதிகளின் குறைவாலும், இலத்தீன் மொழியை அறிஞர்கள் பொது மொழியாக

உபயோகப்படுத்தினமையாலும், தேசீய உணர்ச்சி மத்திய காலத்தில் தோன்றவில்லை. ஒருவரும் இனத்திலும், தேசத்திலும் அதிகப் பெருமை கொள்ளவில்லை.

நவீன காலத்தில் பதினாறும் நூற்றாண்டில் ஐரோப்பியர்களிடையில் தேசீய உணர்ச்சி குறிப்பிடத்தக்க வண்ணம் தோன்றிப் பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் படிப்படியாய் வளர்ந்து சென்ற நூற்றாண்டினிறுதியில் உச்சநிலையை அடைந்தது. ஆசியா மக்களிடையிலும் அவ்வுணர்ச்சி 1850 க்குப் பின்னர் பரவத் தொடங்கியது. இன்று மக்களின் வாழ்க்கையை உலகெங்கும் அவ்வுணர்ச்சியே பெரும்பாலும் நிர்ணயிக்கின்றது.

## II தேசீய வளர்ச்சிக்குரிய காரணங்கள்

ஐரோப்பாவில் தேசீய உணர்ச்சி பற்பல காரணங்களால் எழுந்தது. அவைகளில் முக்கியமானவை பின்வருவன :—(1) மொழிவேற்றுமை (2) மதவேற்றுமை (3) அரசியல் நிகழ்ச்சிகள் (4) பொருளாதார நிகழ்ச்சிகள். இவைகளை ஒன்றன்பின் ஒன்றாக ஆராய்வோம்.

**மொழிவேற்றுமை:** மக்களின் மொழிகளைப் பாமர மக்களின் மொழிகளென ஐரோப்பிய அறிஞர்கள் புறக்கணித்தனரெனினும், அவர்களில் சிலர் அம்மொழிகளில் சிறந்த இலக்கியங்களைப் பதினான்காவது நூற்றாண்டிலிருந்தே ஆக்கத் தொடங்கினர். **சாஸர்** என்னும் ஆங்கிலேயரும், **தாந்தே** என்னும் இத்தாலியரும் முறையே ஆங்கிலத்திலும், இத்தாலியனிலும், சிறந்த இலக்கியங்களை இயற்றினர். பதினைந்தாவது நூற்றாண்டில் அச்சு வித்தை கண்டு பிடிக்கப்படவே தேச மொழிகளை பொதுமக்கள் கற்கப் போதுமான வசதிகள் ஏற்பட்டன. சிறந்த எழுத்தாளர்கள் தங்கள், தங்கள் நாடுகளின் பெருமையையும், அங்கு வாழும் மக்களின் குணாதிசயங்களையும் புகழத் தொடங்கினார்கள். பதினாறுவது நூற்றாண்டில் பிளாரன்ஸ் நகரவாசியான **மாக்கியவல்லி** என்னும்

அரசியல் அறிஞர் பல அரசுகளுக்குட்பட்டிருந்த இத்தாலிய மக்களை ஒன்று சேர்த்து ஓர் அரசின்கீழ் பெருமையுடன் வாழும்படி '**பிரின்ஸ்**' என்னும் தமது அரிய நூலால் தூண்டினர். **காமியோன்ஸ்** என்னும் போர்ச்சுக்கீஸிய கவி தம் இனத்தவர்களின் வீரச்செயல்களை புகழ்ந்தார். பிராட்டெஸ்டன்டு மத இயக்க கர்த்தாவான **மார்டின் லூதர்** ஜெர்மானியரின் தேசப்பற்றைத் தமது சொற்பொழிவுகளினல் பெருக்கினர். **கோர்வான்டிஸ்** என்னும் ஸ்பானிஷ் நவீன நூலாசிரியர் தம் தேச மக்களின் குணாதிசயங்களை விரித்துரைத்தார். புகழ்பெற்ற ஆங்கில நாடகாசிரியரான **ஷேக்ஷ்பியர்** இங்கிலாந்தை இயற்கை அரண் என்றும், வீரர்களின் உறைவிடம் என்றும், வெண்திரைசூழ் மணி நாடென்றும், அரியாசனம் என்றும் சிறப்பித்துக் கூறினர். ஒவ்வொரு இனத்தாரின் பெருமையும் இவ்வாறு குறிப்பிடப்படவே அவர்களுடைய வேற்றுமைகள் வெளியாயின. தேசீய இலக்கியங்கள் வளர்ச்சியுற்றன.

2. **மதவேற்றுமை:** மத்திய காலத்தில் கத்தோலிக்க மதத்தைத் தழுவியிருந்த ஐரோப்பிய மக்களில் அநேகர் அக்காலத்தினிறுதியில் தோன்றிய அறிவு மறுமலர்ச்சியின் விளைவாக மதச் சீர்திருத்த இயக்கத்தில் ஈடுபட்டனர். சீர்திருத்தத் தலைவர்களான **லூதர், கால்வின், நாக்ஸ், ஸ்விங்கிள்** முதலானோர் தங்களுடைய அனுஷ்டானங்களே சிறந்தவை யென்று தேச மொழிகளில் பிரசாரம் செய்தனர்; நூல்கள் வரைந்தனர்; கத்தோலிக்கர்களுக்கும், பிராட்டெஸ்டன்டுகள் என்று அழைக்கப்பட்ட சீர்திருத்தக்காரர்களுக்கும் மதவேற்றுமையின் காரணமாகப் போர்கள் மூண்டன. ஸ்கான்டிநேவியா, டென்மார்க், இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, பொஹீமியா முதலிய தேசங்களும், ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து முதலிய தேசங்களில் சில பகுதிகளும், பிராட்டெஸ்டன்டு அனுஷ்டானத்தை மேற்கொண்டன. புதிய அனுஷ்டானத்தைத் தேசீய உணர்ச்சியின் சின்னமாக அவைகள் கருதின. அதுபோலவே

ஸ்பெயின், பிரான்ஸ், போர்ச்சுகல், இத்தாலி, ஆஸ்திரியா முதலிய நாடுகளில் கத்தோலிக்க மதம் கருதப்பட்டது. ஆங்கிலேயரின் பிராட்டெஸ்டன்டு மதத்தைத் ஒழிக்கும் நோக்கத்துடன் ஸ்பெயின் அரசரான இரண்டாம் பிலிப் தமது "வெல்லொணுத ஆர்மேடா" என்னும் கப்பற் படையை 1587-ல் இங்கிலாந்திற்கு எதிராக அனுப்பினர். ஆங்கிலேயர் கடவுளின் அனுக்கிரஹத்தால் அப்படையைச் சிதற அடித்தனர். அவ்வெற்றியின் விளைவாக அவர்களுடைய தேசீய உணர்ச்சி வலுவுற்றது.

பதினேழாவது நூற்றுண்டின் ஆரம்பத்தில் கத்தோலிக்கர்களுக்கும், பிராட்டெஸ்டன்டுகளுக்கும், ஒரு பெரும் போர் நேர்ந்தது. "**முப்பதாண்டுப் போர்**" என்று அது வழங்கப்படுகின்றது. மதவேற்றுமை காரணமாக ஐரோப்பிய மக்களிடையில் மிகுந்த மனக்கசப்பு ஏற்பட்டது. கத்தோலிக்கர்கள் மிகுந்த நாடுகளில் பிராட்டெஸ்டன்டுகளின் நிலைமையும், பிராட்டெஸ்டன்டுகள் மிகுந்த நாடுகளில் கத்தோலிக்கர்களின் கதியும் விரும்பத் தக்கதன்று. மதவேற்றுமை மக்களிடையில் இவ்வாறு தேசீய உணர்ச்சியை வளர்க்க ஏதுவாயிருந்தது.

**3. அரசியல் நிகழ்ச்சிகள்:** அறிவின் மறுமலர்ச்சி மதச்சீர்திருத்த இயக்கத்தை விளைவித்தது மன்றி, ஐரோப்பிய மக்களைப் புதிய நாடுகளையும் கடல் மார்க்கங்களையும் கண்டுபிடிக்கும்படி தூண்டியது. கொலம்பஸ், வாஸ்கோடிகாமா முதலிய மாலுமிகளின் அரிய சேவையால் அமெரிக்காக் கண்டமும் இந்தியாவிற்கு நேர்முகமான கடல் மார்க்கமும் கண்டுபிடிக்கப்பட்டன. அதனுல் ஐரோப்பிய மக்களுக்குள் வர்த்தகப்போட்டி ஏற்பட்டது. வர்த்தக வளர்ச்சிக்கு அமைதி இன்றியமையாதது என்பதை உணர்ந்த பொது மக்கள் பலம்பெற்ற அரசுகளின்கீழ் வாழ ஆர்வமுற்றனர். பிரபுக்களின் சக்தியைக் குறைக்கும் நோக்கத்துடன் மக்கள் அரசர்களுக்குத் துணை புரிந்தனர். வெடி மருந்தின் விளைவாக மத்திய காலத்தில்

மக்களால் அநுஷ்டிக்கப்பட்ட படைமானியமுறை மறையத் தொடங்கியது. ஆகவே, ஐரோப்பாவில் சர்வாதிகாரம் பெற்ற பல அரசுகள் எழுந்தன. இங்கிலாந்தில் டியூடர் மன்னர்களும், பிரான்ஸில் பூர்பன் மன்னர்களும், ஸ்பெயினில் ஹாப்ஸ்பர்க் இராஜ வம்சத்தினரும், போர்ச்சுகல், ஸ்வீடன் முதலிய தேசங்களின் அரசர்களும் சர்வாதிகாரிகளாயினர். அவர்களுடைய போட்டியின் விளைவாய்த் தேசிய உணர்ச்சி மக்களிடையில் வலுவுற்றது. தங்களுடைய குடிகளுக்கும் இதர நாட்டினர்க்கும் உள்ள வேற்றுமைகளை அதிகரித்து அம்மன்னர்கள் தங்களுடைய சக்தியைப் பெருக்க முயன்றனர். அரசரே மக்களின் சுதந்திரச் சின்னம்: அவர்களுடைய ஒற்றுமையின் ஒளி. இராணுவம், அந்நிய நாட்டுக் கொள்கை, நாணயம், வர்த்தகம் முதலிய யாவும் அவருடைய பொறுப்பே என்று மக்கள் கருதினர்.

**4. பொருளாதார வேற்றுமை:** சர்வாதிகார மன்னர்கள் தங்கள் நாடுகளின் பலத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் வர்த்தகத்தைப் பயன்படுத்தினர். வர்த்தகத் தடைகளை ஏற்படுத்தினர். வர்த்தகப் போட்டியால் நேர்ந்த போர்கள் மக்களிடையில் தேசீய உணர்ச்சியை எழுப்பியது.

## III. தேசிய வளர்ச்சி வரலாறு மேற்கு ஐரோப்பா

**பதினாறும் நூற்றாண்டு:** ஐரோப்பிய மக்களுக்குள் முதன்முதலாகத் தேசிய உணர்ச்சியைப் பெற்றவர்கள் ஆங்கிலேயராவர். அவர்கள் இனத்திலும், மொழியிலும் கலப்புற்றிருந்தனரெனினும், அவர்களுடைய நாட்டின் அமைப்பும், அரசியல் கட்டுப்பாடுகளும் தேசிய உணர்ச்சியை அவர்களிடையில் எளிதில் எழச் செய்தன. பதினொன்று, பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் ஆட்சி புரிந்த நார்மன் மன்னர்களும், அஞ்ஜீவன் அரசர்களும், தங்களுடைய ஆட்சி முறையால் குடிகளை ஒற்றுமைப்படுத்தினர். பதின்மூன்றாவது நூற்றாண்டில்

அவ்வுணர்ச்சியின் விளைவாகப் பார்லிமெண்டு சபை நிறுவப்பட்டது. பின்னர் பதினாலாவது நூற்றாண்டில் ஆங்கிலேய மக்கள் தங்களுக்கண்மையிலுள்ள பிரெஞ்சு மக்களுடன் **நூற்றாண்டுப் போரை** ஆரம்பித்தனர். அப்போரைப் படைமாணிய முறைக்குட்பட்ட பிரான்சு என்னும் ஓர் அரக்கனுக்கும், தேகக் கட்டமைந்த இங்கிலாந்து என்னும் ஒரு வீரனுக்கும் நேர்ந்த போர் என்பார் ஆசிரியர் **டிரவில்லியன்**. பிரெஞ்சு மக்கள் இன்னலுறவே, ஜோன் என்னும் பெண்மணி அவர்களிடையே தேசீய உணர்ச்சியை எழுப்பி ஆங்கிலேயரை நாட்டை விட்டுத் துரத்தும்படி அவர்களைத் தூண்டினார். அவ்வீர வனிதை ஏற்றிய தேசீய ஒளியின் பயனாய்ப் பிரெஞ்சு மக்கள் தேசீய உணர்ச்சியை அடைந்தனர்.

பதினைந்தாம் நூற்றாண்டிலேயே ஸ்பெயினும், போர்ச்சுகலும் தேசீய உணர்ச்சியைப் பெற்றன. காரணம், மூர்ஸ் என்னும் இஸ்லாமிய மக்களுடன் அந்நாடுகள் தொடுத்த போரே. அவ்வுணர்ச்சியின் விளைவாக ஸ்பானிஷ் மக்கள் அமெரிக்காவைக் கண்டு பிடித்துப் பெரும் புகழ் பெற்றனர். போர்ச்சுகீஸிய மாலுமிகள் கீழ் நாடுகளுக்குச் செல்ல நேரான கடல் மார்க்கமொன்றைக் கண்டு பிடித்தனர். ஸ்பானிஷ் மன்னர்களின் பலம் அதிகரிக்கவும், அவர்கள் ஐரோப்பாக் கண்டத்தையும், அமெரிக்காவையும் தங்களாதிக்கத்திற்குள்ளாக்க முற்பட்டனர். பிராட்டெஸ்டண்டு இயக்கம் அத்தகைய எண்ணத்தை அவர்களுக்கு மூட்டியது. முதன் முதலாக தேசீய உணர்ச்சி பெற்ற ஆங்கிலேயர் ஸ்பானிய ஆதிக்கத்தை ஒழிப்பதற்குக் கங்கணம் பூண்டனர். மதச் சுதந்திரத்தின் நிமித்தம் டச்சு மக்கள் ஆங்கிலேயருடன் சேர்ந்தனர். வெல்லொணாத ஆர்மடா என்னும் ஸ்பானியக் கப்பற் படையை ஆங்கிலேயர் 1587-ல் தோல்வியுறச் செய்து, தேசீய உணர்ச்சியுடன் பல துறைகளில் முன்னேறிச் சிறப்புற்று விளங்கினர். டென்மார்க்கும், ஸ்வீடனும் தேசீய உணர்ச்சியைப் பெற்றன.

**பதினேழாம் நூற்றுண்டு:** இந்நூற்றுண்டில் ஜெர்மனி, போலந்து, ஆஸ்திரியா, ஹங்கேரி, இத்தாலி, பால்கன் நாடுகள் இவைகளைத் தவிர இதர நாடுகளில் தேசீய உணர்ச்சி சிறப்புற்றிருந்தது. ரஷ்ய மக்களின் அரசரான மஹா பீட்டர் அவர்களை ஒற்றுமைப்படுத்தி இராணுவத்தையும், கப்பற்படையையும் பெருக்கி, வர்த்தகத்தை வளர்த்துத் தேசீய உணர்ச்சியை எழச் செய்தார். பதினுன்காம் லூயி என்னும் பிரெஞ்சு மன்னரின் அந்நிய நாட்டுக் கொள்கை, ஐரோப்பியர்களிடையில் தேசீய உணர்ச்சியை வளம்பெறச் செய்தது. அண்மையிலுள்ள நாடுகளைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அவர் அநேகம் போர்களைப் பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும், பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் புரிந்தார். அவைகளில் மிக முக்கியமானது **ஸ்பெயின் வாரீசுரிமைப் போரா**கும். இங்கிலாந்து, ஹாலந்து, ஆஸ்திரியா முதலிய நாடுகள் லூயி மன்னரின் எண்ணத்தில் மண்ணைப்போடும் நோக்கத்துடன் அவருக்கு எதிராகப் போர் தொடுத்தன. இறுதியில் நேசக் கட்சியினர் வெற்றி பெற்றனர். தேசீய உணர்ச்சியே அவர்களது வெற்றிக்கு முக்கிய காரணமாகும்.

**பதினெட்டாம் நூற்றுண்டு:** இந்நூற்றுண்டின் இறுதியில் **போலந்து தேசத்தை** ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா முதலிய நாடுகளின் மன்னர்கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர். அப்பிரிவினை தேசீயக் கொள்கைக்கு முரணுன ஒரு பெரும் அநீதியாகும். அதை ஒழிக்கும் எண்ணத்துடன் போலந்து மக்கள் **காஸியஸ்கோ** என்னும் வீரரின் தலைமையில் மிக்க ஆர்வத்துடன் அந்நியர்களுக்கெதிராகப் போர்புரிந்தனர். அதில் வெற்றியுருது, இதர ஐரோப்பிய நாடுகளில் குடியேறித் தேசீய ஒளியை அதிகப் பிரகாசத்துடன் திகழச் செய்தனர். அண்மையிலுள்ள மன்னர்கள் போலந்தைக் கைப்பற்றியதின் காரணம் அந்நாட்டின் மன்னரை மக்கள் தேர்ந்தெடுத்ததே யாகும். வரலாற்று ஆசிரியர்களுக்குள் தலைசிறந்தவரான **ஆக்டன் பிரபு** கூறுவதைப் போல அண்மையிலுள்ள அரசர்கள்

பரம்பரை அரச வம்சத்தில் தோன்ருத ஒருவனை மன்னன் என மதிப்பது குறைவென்று கருதியதே யாகும். மக்களால் அளிக்கப்பட்ட கிரீடமும் கிரீடமாகுமோ என்று அவர்கள் போலந்தில் நிலவிய தேர்தல் முறை மன்னனாட்சியைப் பற்றி கொண்ட வெறுப்பேயாகும். போலந்து அரசு இதர அரசுகளுக்கு ஓர் இழுக்கு என்று கருதப்பட்டது. அதனால் அந்நாடு பிரிவினை செய்யப்பட்டது.

ஐரோப்பாவில் வளர்ந்த தேசீயக் கொள்கையை **போலந்து பிரிவினையே** வலுவுறச் செய்ததென்று கூறலாம். அநேகர் அதையே தேசீயத்தின் ஆரம்பம் என்பர். அந்நியர் ஆட்சியை விரும்பாத அநேகம் போலந்து மக்கள் இதர ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அங்கு சரீரத்தைப் பிரிந்து அதைத் தேடி அலையும் ஆன்மாவைப் போல வாடியிருந்தனர்; நியாயம் வேண்டுமென உலக மக்களிடம் முறையிட்டனர். இத்தாலியிலும், ஜெர்மனியிலும் அவர்களுடைய முழக்கம் பயன் பெறவில்லை. இத்தாலி பல சிறிய நாடுகளாகப் பிரிக்கப்பட்டு அந்நியர்களால் ஆட்சி செய்யப்பட்டது. ஜெர்மனியில் முந்நூறுக்குமேல் சுதந்திர நாடுகளும் நகரங்களும் இருந்தன. அவைகளில் அரசு புரிந்த சிற்றரசர்களும் பிரபுக்களும் மக்களை வரி கொடுப்பதற்குகந்த கறவைப் பசுக்களென்று கருதினரே யன்றி, அவர்களை மனிதர்களென்றும், அவர்களுக்குச் சுதந்திரம் உண்டென்றும் நினைக்கவில்லை. எதேச்சாதிகாரம் தாண்டவம் புரிந்தது. சர்வாதிகாரிகள் மக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தனரெனினும் அவர்களுடைய அன்பைப் பெறவில்லை. ஆகவே, பதினெட்டாவது நூற்ருண்டில் தேசீய உணர்ச்சி குறிப்பிடத் தக்க வண்ணம் வளர்ச்சி யடையவில்லை.

**பத்தோன்பதாம் நூற்ருண்டு:** பதினெட்டாம் நூற்ருண்டின் இறுதியில் பிரான்சு தேசத்தில் நேர்ந்த **மக்களின் புரட்சியும்,** அதன் விளைவான நெப்போலியச் சக்கரவர்த்தியின் ஆதிபத்யமும் பத்தொன்பதாம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் தேசீயத்தை வலுவுறச் செய்தன.

பிரான்சில் பிரகடனம் செய்யப்பெற்ற **மானிட உரிமைகளென்னும்** சாசனத்தில் தேசியக் கொள்கை தனிப்படக் கூறப்படவில்லை யெனினும், அரசியலை நிர்ணயிக்கும் உரிமை அவ்வரசைச் சார்ந்த மக்களுக்குரிய தென்று குறிப்பிட்டிருந்தமையால் தேசியம் அதையொட்டி வலுவுற்றது. மேலும் மன்னனுட்சியை இதர நாடுகளில் ஒழிக்கும் நோக்கத்துடன் பிரெஞ்சு புரட்சிப்படை அந்நாடுகளை ஆட்சி புரிந்த மன்னர்களுடன் போரில் ஈடுபட்டது. இறுதியில் புரட்சிப் படைத் தலைவரான **நெப்போலியன்** என்னும் வீரர் வெற்றியடைந்தார். புரட்சியின் விளைவாய் நாட்டில் பரவிய குழப்பத்தை அடக்கிப் பிரெஞ்சு அரியாசனத்தைக் கைப்பற்றி, ஐரோப்பிய நாடுகளைத் தன் ஆதிக்கத்திற்குட்படுத்த நெப்போலியன் பெரும் முயற்சி செய்தார். ஸ்பெயின், போர்ச்சுகல், ஹாலந்து, இத்தாலி, ஜெர்மனி, ஸ்விட்ஸர்லாந்து முதலிய தேசங்களை வென்று, அங்கு மக்களின் விருப்பத்திற்கும் புரட்சிக் கொள்கைக்கும் மாருகத் தனது ஆதிபத்தியத்தை ஏற்படுத்தினுர். பிரிட்டிஷ் அரசு ஒன்றே தேசிய உணர்ச்சியின் காரணமாக பிரெஞ்சு சக்கரவர்த்தியை எதிர்த்து நின்றது. அவ்வுணர்ச்சியற்ற ஆஸ்திரியா, பிரஷ்யா, ஸ்பெயின், இத்தாலி முதலான நாடுகள் அவருக்கு அடங்கியிருந்தன. பிரிட்டன் மட்டும் பிரான்சுடன் இருபத்திரண்டு ஆண்டுகள் போராடிச் சுதந்திரச் சுடரை அணையாது காத்துநின்றது. இறுதியில் ஸ்பானிஷ் மக்கள் தேசிய உணர்ச்சி பெற்று எழுந்தனர். ஆஸ்திரியா, ரஷ்யா, பிரஷ்யா முதலான நாடுகள் ஸ்பெயினைப் பின்பற்றின. நெப்போலியன் 1812-ல் ரஷ்யாவை ஆக்ரமித்து வெற்றியுருது திரும்பவே, பிரிட்டன் தேசிய உணர்ச்சி பெற்ற நாடுகளுடன் சேர்ந்து அவருடன் போர்புரிந்து 1815-ல் அவரை வீழ்ச்சியுறச் செய்தது. இவ்வாறு பிரெஞ்சுப் புரட்சியும், அதைச் சார்ந்த மானிட உரிமைச் சாசனமும், நெப்போலிய ஆதிபத்தியமும் ஐரோப்பாவில் தேசிய உணர்ச்சியை மக்களிடையில் பரப்பின. நெப்போலியன்

அவ்வுணர்ச்சியின் வேகத்தையும், ஆழத்தையும் பொருட்படுத்தாது போர்புரிந்தாரெனக் கருதுவது தவறு. ஏனெனில் போலந்து நாட்டை **வார்சா** நாடெனத் திருத்தி அமைத்துப் போலந்து மக்களின் தேசிய உணர்ச்சியை அவர் திருப்தி செய்தார். ரஷ்யாவையும், ஆஸ்திரியாவையும் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் அவர் வார்சா நாட்டை அமைத்தாரெனினும், அவருடைய செய்கை போலந்து மக்களின் தேசிய உணர்ச்சியை வலுவுறச் செய்தது. மேலும் இல்லீரியாப் பிரதேசங்களை ஒன்று சேர்த்து யூகோஸ்லாவ் மக்களிடையில் தேசிய உணர்ச்சியை அவர் எழச் செய்தார். இத்தாலியிலிருந்த சிற்றரசுகளைத் தொலைத்து அங்கு ஒரு தனி அரசை அவர் ஏற்படுத்தினமையால் அவரை இத்தாலிய மக்கள் இன்றும் புகழ்கின்றனர். ஜெர்மன் சிற்றரசர்களை அவர் தொலைத்து மக்களின் ஒற்றுமைக்குப் பல வசதிகள் ஏற்படுத்தினர். இவ்வாறு தேசியக் கொள்கை பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரெஞ்சு புரட்சியால் நேராகவும், மறைமுகமாகவும் வளர்வுற்றது.

**வீயன்ன காங்கிரஸ் 1815:** நெப்போலியச் சக்கரவர்த்தியைத் தோற்கடித்த நேசக் கட்சியினர் 1815-ல் வீயன்ன நகரில் கூடினர். அம்மகாநாட்டில் ஆஸ்திரியா பிரதம மந்திரியான **மெட்டர்நிச்சு** என்பவருக்கு அதிகச் செல்வாக்கு இருந்தது. பிரெஞ்சு புரட்சியின் விளைவான ஜனநாயகம், தேசியம் முதலிய கொள்கைகளை நசுக்கிப் புரட்சிக்கு முன்னர் ஐரோப்பாவில் அனுஷ்டிக்கப்பட்ட அரசியல் முறையை மீண்டும் ஸ்தாபிப்பதில், ஆஸ்திரியா மந்திரி மிகுந்த ஆர்வமுற்றூர். அதனல் பெல்ஜியமும் ஹாலந்தும் ஓர் அரசிற் குட்படுத்தப்பட்டன. இத்தாலியில் ஆஸ்திரியாச் சக்கரவர்த்தி முன்போல பல பிரதேசங்களை யடைந்தனர். ஜெர்மனியில் பிரஷ்யாவின் ஆதிக்கம் வலுவுற்றது. போலந்தை ரஷ்ய அரசு முன்போல விழுங்கியது. தேசிய உணர்ச்சி இவ்வாறு ஐரோப்பிய இராஜ தந்திரிகளால் புறக்கணிக்கப்பட்டது.

மெட்டர்நிச்சின் பிற்போக்குக் கொள்கையின் விளைவாக ஐரோப்பாவில் அநேகக் குழப்பங்கள் உண்டாயின. நசுக்கப் பெற்ற ஜனநாயகமும், தேசீயமுமே அமைதியின்மைக்கு மூலகாரணமாயிருந்தன. முதன் முதலாக பால்கன் பிரதேசத்தில் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. அப் பிரதேசம் துருக்கி சுல்தானின் ஆதிக்கத்திற்குள்ளிருந்தது. மதம், மொழி, பழக்க வழக்கங்கள் முதலியவைகளில் சுல்தானும், பால்கன் மக்களும் வேறுபட்டிருந்தனர். பால்கன் மக்கள் கிறிஸ்தவர்கள்; பெரும்பாலும் ஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர்கள். சுல்தான் எதேச்சாதிகாரி. இஸ்லாம் மதத்தைத் தழுவியவர். ஆகவே, பால்கன் மக்கள் சுல்தானின் ஆட்சியிலிருந்து தங்களை விடுவிக்க முயன்றனர். அவர்களை ரஷ்ய சக்கரவர்த்தி அம்முயற்சியில் ஊக்கப்படுத்தினார். ஏனென்றால், அவர் ஸ்லாவ் மக்களின் அதிபதி: மேலும் சுல்தானை ஐரோப்பாவிலிருந்து விரட்டி அவருடைய தலைநகராகிய கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்ற வேண்டுமென்பது அவருடைய பேரவா. 1820-க்குள் துருக்கி மாகாணங்களாகிய செர்பியாவும், மாண்டிநிக்ரோவும் பெரும்பாலும் சுயாட்சியை யடைந்தன. பின்னர் 1821-ல் சுல்தானின் ஆட்சிக்குட்பட்ட **கிரேக்கர்கள்** தங்களுடைய சுதந்திரப் போரை ஆரம்பித்தனர். அநேக ஐரோப்பிய மக்களும் அமெரிக்க ஐக்கிய நாட்டினரும் கிரேக்கர்கள்மீது கருணை கொண்டனர். இறுதியில் 1829-ல் விடுதலை பெற்று கிரேக்கர்கள் சுதந்திர அரசு ஒன்றை அமைத்துக் கொண்டனர். டச்சு மக்களுடன் வியன்னு மகாநாட்டின் விளைவாகச் சேர்க்கப்பட்டிருந்த பெல்ஜிய மக்கள் அவர்களுக்கெதிராக 1831-ல் போர் தொடுத்துத் தங்களை விடுவித்துச் சுதந்திர அரசு ஒன்றை நிறுவினர். 1848-ல் இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா - ஹங்கேரி முதலிய நாடுகளில் தேசீய உணர்ச்சிபெற்ற மக்கள் சுதந்திரம் பெறக் கருதிப் புரட்சி செய்தனர். ஆனல் அவர்கள் பயனுறவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தாலியிலும், ஜெர்மனியிலும் தேசிய உணர்ச்சி வேகமாய்ப் பரவி மக்களை ஒன்று சேரும்படி தூண்டியது. பால்கன் மக்களும் சுல்தானின் ஆட்சியிலிருந்து தங்களைப் பெரும்பாலும் விடுவித்துக்கொண்டனர். இந்நிகழ்ச்சிகளை ஒன்றன் பின் ஒன்றாக ஆராய்வோம்.

## IV. இத்தாலி

பத்தொன்பதாம் நூற்றாண்டி னாரம்பத்தில் இத்தாலி பல சிறு இராஜ்யங்களாகப் பிரிந்து அந்நியராட்சிக்குட்பட்டுப் பலங்குன்றிக் கேவலமான நிலைமையிலிருந்தது. வடபாகத்தில் ஆஸ்திரியாச் சக்கரவர்த்தி ஆட்சி புரிந்தார். வடமேற்கில் பீட்மாண்டும் சார்டினிக்காவிற் கருகிலுள்ள சார்டீனியா தீவும் ஒரு தனி இத்தாலிய அரசரால் ஆளப்பட்டு வந்தன. மத்தியபாகத்தில் போப் ஆண்டவர் ஆதிக்கம் பெற்றிருந்தார். தெற்கில் நேபிள்ஸூம் ஸிஸிலித் தீவும் பூர்பன் அரச வம்சத்தின் ஆளுகைக் குட்பட்டிருந்தன. இவைகளைத் தவிர பார்மா, டஸ்கனி, மொடீனா முதலிய பிரதேசங்களில் பல சிற்றரசர்கள் இருந்தனர். ஆகவே, பெயரளவில் மட்டும் இத்தாலி ஒரே இராஜ்யமாயிருந்தது. இங்ஙனம் பிரிக்கப்பெற்ற இத்தாலிய மக்கள் பிரெஞ்சு புரட்சியின் நிமித்தமாக ஒற்றுமைப்பட்டனர். நெப்போலியன், இத்தாலிய சிற்றரசர்களை முறியடித்து அவர்களைப் பணியவைத்துத் தாமே இத்தாலிய அரசரென்று முடிசூட்டிக்கொண்டார். அவரது ஆட்சி இத்தாலிய மக்களுக்கு மிகுந்த நன்மையை விளைவித்தது. புரட்சிக் கொள்கைகளான ஜனநாயகம், ஒற்றுமை, சுதந்திரம், சமத்துவம் முதலியவற்றைப் பிரெஞ்சு போர் வீரர்கள் இத்தாலியில் பரப்பினார்கள். நெப்போலியனது வீழ்ச்சிக்குப் பின்னர், எவ்வாறு ஐரோப்பிய இராஜதந்திரிகள் இத்தாலியை, அங்கு முன்பிருந்த சிற்றரசர்களுக்கும் ஆஸ்திரியாச் சக்கரவர்த்திக்கும் பங்கிட்டுக் கொடுத்தனரென்பதை முன்னர் படித்தோம். இத்தாலிய மக்கள் அத்தகைய

செய்கையினால் ஏமாற்றமும் அதிருப்தியு மடைந்தனர். ஆயினும், அவர்கள் தங்களுடைய ஒற்றுமை உணர்ச்சியை மட்டும் கைவிடவில்லை. அந்நிய ஆட்சியை ஒழித்து இத்தாலியை ஒரு தனி அரசாக்க அநேக இளைஞர்களும் இராஜதந்திரிகளும் கங்கணம் பூண்டனர். அவர்கள் "கார்ப்பனரி" என்ற ஓர் இரகசிய சங்கத்தைத் தலை சிறந்த எழுத்தாளரான **இத்தாலிக்ஸ்** தலைமையில் அமைத்து, ஆஸ்திரியரின் ஆட்சியை ஒழிக்க முயன்றார்கள்.

தலைவர் மசீனி தமது வீர மொழிகளால் இத்தாலிய இளைஞர்களின் தேசப் பற்றையும், தேசிய உணர்ச்சியையும் வளர்த்தார். "நாட்டிற்காகத் தியாகம் செய்ய வேண்டும். இரத்தத்தைச் சிந்தவேண்டும். அந்நியரின் ஆட்சியை வேரோடு கிள்ளி எறிய வேண்டும்." என்றார் மசீனி. எண்ணற்ற இளைஞர்கள் நாட்டிற்காகத் தியாகம் செய்ய முன்வந்தனர். அவர்களில் மிகவும் சிறந்தவர் **கரிபால்டி** என்னும் மாலுமியாவர். ஆஸ்திரியர்களின் கொடுமையினால் அவர் தமது தாய்நாட்டை விட்டுத் தென் அமெரிக்காவிற்கும், அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் தப்பி ஓட நேர்ந்ததெனினும், இத்தாலிய தேசிய இயக்கத்தில் கண்ணும் கருத்துமாகவே யிருந்தார். அவர் அமெரிக்காவிலிருந்த பொழுது சார்டீனியா அரசரான இரண்டாவது விக்டர் இமானுவேல் அவ்வியக்கத்திற்குத் தலைமை பூண்டார். **கவூர்** என்ற அவரது மந்திரி அவருக்குப் பேருதவி புரிந்துவந்தார். பிரான்சு தேசத்தை யாண்ட மூன்றாவது நெப்போலியச் சக்கரவர்த்தியும் அவருக்குதவி புரிந்தார். கரிபால்டி அமெரிக்காவிலிருந்து மீண்டும் இத்தாலியை அடைந்து சுதந்திர இயக்கத்தில் சிறந்த பங்கெடுத்துக் கொண்டார். இறுதியில் ஆஸ்திரியர்களை லம்பார்டிப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றிச் செஞ்சட்டையாளர்களான தமது வீரர்களுடன் ஸிஸிலிக்குச் சென்று பூர்பன் ஆட்சியைத் தொலைத்துத் தென் இத்தாலியை யடைந்து **இமானுவேல்** மன்னரைச் சந்தித்தார். நேப்பிள்ஸ் நகர வீதியில் எண்ணற்ற மக்கள் ஆனந்தம் கொள்ள மன்னரும்,

கரிபால்டியும் ஜோடியாகப் பவனி வந்தனர். சார்டீனியா மன்னரை இத்தாலிய அரசரென்று மக்கள் அங்கீகரித்த னர். 1870-ல் பிரஷ்யாவிற்கும் பிரான்சிற்கும் போர் மூளவே போப் ஆண்டவருக்குத் துணையாக நின்ற பிரெஞ்சு வீரர்கள் ரோமாபுரியிலிருந்து வெளியேறினர். இத்தாலிய அரசர் அந்நகருக்குச் சென்று அதைத் தம் தலைநகராக்கிக் கொண்டார். இவ்வாறு கரிபால்டியின் போர்த்திறனுலும், மந்திரி கவூரின் சாதுரியத்திஞலும், இமானுவேல் மன்ன ரின் விடாமுயற்சியினுலும், இத்தாலிய தேசீயத்தின் தந்தை யென்றழைக்கப் பெற்ற தலைவர் மசீனியின் வீர மொழிகளாலும், மக்களின் தேசீய ஆர்வத்தாலும் வலிமை யடைந்த தேசீய அரசாங்கமொன்று இத்தாலியில் 1870-ல் நிறுவப்பட்டது. பின்னர் அநேக சீர்திருத்தங்களை மன்னர் செய்தார். ஆரம்பக்கல்வி யளிக்கப்பட்டது. ஆலைச் சட்டங் கள் இயற்றப்பட்டன. முதியோர்களுக்கு உபகாரச் சம்ப ளம் வழங்கப்பட்டது. இத்தாலி இவ்வாறு ஒற்றுமைப் பட்டு முன்னேறியது.

## V. ஜெர்மனி

பதினெட்டாவது நூற்முண்டில் ஜெர்மனி முந்நூறு சிறு சமஸ்தானங்களாகவும், சுதந்திர நகரங்களாகவும் பிரிவுற்றுப் பலம் குன்றியிருந்தது. ஜெர்மன் சிற்றரசர் களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற சக்கரவர்த்தி புனித ரோமாபுரிச் சக்கரவர்த்தியாவார். அவர் ஆஸ்திரியா - ஹங்கேரிக்கும் மன்னர். ஜெர்மனியிலும், ஆஸ்திரியா விலும் அவர் ஆட்சி புரியவேண்டியது வந்ததால் அவரால் ஒன்றையும் சரிவர ஆளமுடியவில்லை. ஜெர்மன் அரசு களில் ஒன்முன பிரஷ்யா பதினெட்டாம் நூற்முண்டில் இரண்டாவது பிரெடரிக் ஆட்சியில், ஏனைய ஐரோப்பிய அரசுகள் மதிக்குமாறு அதி உன்னத நிலையை யடைந்தது. ஆஸ்திரியா வாரீசுரிமைப் போரிலும், ஏழாண்டுப் போரி லும், போலந்து பிரிவினையிலும் அவர் பெரும் பங்கெடுத் துப் பிரஷ்யாவின் எல்லைகளைப் பெருக்கினுர். அவருக்குப் பின்னர், பத்தொன்பதாம் நூற்முண்டில் நெப்போலியன்,

ஜெர்மனியை வென்று தம் ஆட்சிக்குள்ளாக்கினர். அதன் விளைவாக அநேகம் தனிச் சமஸ்தானங்களும், நகரங்களும் மறைந்தன. முப்பத்தொன்பது தனி இராஜ்யங்களே ஜெர்மனியில் மீதியா யிருந்தன.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பிரஷ்யப் பிரதம மந்திரியான **பிஸ்மார்க்** என்பவர் நெப்போலியனது ஆட்சியால் மக்களிடையில் உண்டான ஒற்றுமையுணர்ச்சியை மென்மேலும் அதிகரிக்கும் நோக்கத்துடன் ஒரு பலம் பொருந்திய படையை அமைத்தார். பள்ளிக் கூடங்களில் ஜெர்மானியச் சிறுவர்களுக்குப் போர் மனப்பான்மையை எழச் செய்யும் கல்வித் திட்டத்தை வகுத்தார். கட்டாய இராணுவச் சேவைச் சட்டம் ஒன்றை இயற்றினர். அந்நியர்களை நாட்டைவிட்டு அகற்றக் கருதி முதற்கண் ஆஸ்திரியாவுடன் சேர்ந்து டென்மார்க்கை எதிர்த்து முறியடித்து, ஷீலஸ்விக், ஹால்ஸ்டீன் என்னும் இரு செழிப்பான பிரதேசங்களை டென்மார்க் மன்னரிடமிருந்து பெற்றுர். பின்னர் 1866-ல் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்திலிருந்த ஜெர்மன் நாடுகளை மீட்பதற்காக ஆஸ்திரியாவுடன் போர் தொடுத்தார். **சடோவா** யுத்தத்தில் ஆஸ்திரியர்களை முறியடித்து, வடஜெர்மனியில் பிரஷ்யாவின் ஆதிக்கத்தை ஸ்தாபித்தார். பொது ஆபத்து ஒன்று நேர்ந்திடின் ஜெர்மன் மக்கள் பூரணமாய் ஒற்றுமை யடைவார்களெனக் கருதி அவர் பிரெஞ்சு அதிபதி மூன்றும் நெப்போலியனுடன் 1870-ல் போர் தொடுத்தார். **சிடான், மெட்ஸ்** முதலிய போர்களில் பிரெஞ்சு சேனையை முறியடித்துப் பாரிஸ் நகரத்தையும் கைப்பற்றினர். வெர்ஸேல்ஸ் நகரில் இரு அரசுகளும் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டன. அதன்படி பிரான்சிடமிருந்து அல்சேஸ், லொரைன் என்னும் செழுமை மிகுந்த இரு மாகாணங்களைக் கைப்பற்றினர். பிரஷ்ய அரசரான முதலாம் வில்லியம் வெர்ஸேல்ஸ் நகரில் வைத்து, ஜெர்மன் சக்கரவர்த்தி **கெய்சர்** என 1871-ல் முடிசூட்டிக்கொண்டார். இவ்வாறு ஜெர்மனி, பிரஷ்ய மன்னரின் கீழ் ஐக்கியமடைந்தது.

1888-ல் இரண்டாம் வில்லியம் ஜெர்மன் சக்கரவர்த்தி யானார். பிஸ்மார்க் 1890-ல் தமது பதவியிலிருந்து விலகினார். புதிய ஜெர்மன் சக்கரவர்த்தி பலம் வாய்ந்த கப்பற்படை யொன்றைத் தன் நாடு முன்னேற்ற மடைவதற்காக அமைத்தார்; கீல் கால் வாயைக் கட்டி முடித்தார். பால்டிக் கடலைக் கப்பல் தளமாக்கினார்; உலக அரசியல் விஷயங்களில் தலையிடத் தொடங்கினார். இவ்வாறு ஜெர்மனி பத்தொன்பதாவது நூற்றாண்டினிறுதியில் முன்னேற்ற மடைந்தது.

## VI. பால்கன் நாடுகள்

செர்பியா, மாண்டிநிக்ரோ, கிரீஸ் இம்மூன்று நாடுகளும் எவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சுதந்திரம் அடைந்தன என்று பார்த்தோம். அந் நூற்றாண்டின் பிற்பகுதியில் ரஷ்யச் சக்கரவர்த்தி துருக்கி சுல்தானோடு கிரீமியாப் போரைத் தொடுத்தார். பிரிட்டனும், பிரான்சும் தேசீயக் கொள்கைக்கு அனுசரணையாக இருந்ததெனினும், ரஷ்யர்கள்மீதுள்ள வெறுப்பால் சுல்தானுக்கு உதவி புரிந்து 1856-ல் அப்போரை முடிவுறச் செய்தன. பாரிஸ் நகரில் வைத்துச் செய்யப்பெற்ற சமாதான உடன்படிக்கைப்படி சுல்தான் தமது கிறிஸ்தவக் குடிகளுக்கு அநேகம் சீர்திருத்தங்கள் செய்வதாய் வாக்களித்தார். உடன்படிக்கைக்கு மாறாக பல்கேரிய மக்களை 1875-ல் சுல்தான் துன்புறுத்தவே, ரஷ்யச் சக்கரவர்த்தி அவர்கள் சார்பாகத் துருக்கியோடு போர் தொடுத்தார். இறுதியில் 1878-ல் பெர்லின் நகரில் ஐரோப்பிய இராஜதந்திரிகள் ஒன்றுகூடி உடன்படிக்கை ஒன்று செய்து போரை நிறுத்தினர். அவ்வுடன்படிக்கைப்படி, ஆஸ்திரியாவிற் கண்மையிலுள்ள பாஸினியா, ஹெர்ஸிகோவினு என்னும் துருக்கிய மாகாணங்களின் நிர்வாகம் ஆஸ்திரியாச் சக்கரவர்த்திக்கு அளிக்கப்பட்டது. ருமேனியா, சுல்தானிடமிருந்து விடுவிக்கப்பட்டு செர்பியா, மாண்டிநிக்ரோ, கிரீஸ் முதலிய நாடுகளைப்போல சுதந்திரமடைந்தது.

ஆனால் பல்கேரியாவிற்குச் சுல்தானின் கீழ் சுயாட்சி வழங்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதியில் பெர்லின் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் ஒவ்வொன்றாய்த் தகர்க்கப்பட்டன. பல்கேரியா, ஸ்டாம்புலாப் என்னும் அரசியல் நிபுணரின் நிர்வாகத்தில் பூரணமாய் தேசிய உணர்ச்சியைப் பெற்றது. மன்னர் பர்டினன்டின் ஆட்சியில் சுதந்திரம் அடைந்தது. பாஸ்னியாவையும், ஹெர்ஸி கோவினாவையும் விழுங்கத் திட்டமிட்டு ஆஸ்திரியா தருணம் பார்த்திருந்தது. ஆனால் செர்பிய அரசும், அம் மாகாணங்களைப்பெற மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தது. கிரீஸ் 1897-ல் சுல்தானுடன் போர் தொடுத்தது. காரணம் சுல்தான் ஆட்சி புரிந்த கிரீட் தீவில் கிரேக்க மக்கள் அதிகமாயிருந்தனர். அவர்கள் கிரேக்க அரசின்கீழ் வாழ விரும்பினர். இந் நூற்றாண்டில்தான் அவர்களுடைய விருப்பம் நிறைவேறியது. இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் தேசிய உணர்ச்சி ஐரோப்பாவில் வளம்பெறச் செழித்து வளர்ந்தது. போலந்து மக்கள், ஆஸ்திரிய மன்னரின் கீழ் வாழ்ந்து வந்த ஆஸ்திரியர், ஹங்கேரியர், ஸ்லாவ் மக்கள் முதலியோர்களுக்குத் தேசிய அரசு ஏற்படவில்லை. பிரிட்டன், பிரான்சு, ஜெர்மன், இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுகல் முதலிய நாடுகளில் தேசிய உணர்ச்சி வலுவுற்றிருந்தது.

## VII. இருபதாம் நூற்றாண்டு

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்த போலந்து மக்கள், ஆஸ்திரியா - ஹங்கேரி சாம்ராஜ்யக் குடிகள், ஐரிஷ் மக்கள், அல்பானியர், பின்லாந்தியர், முதலானோர் தங்களுக்கென தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கு மிக்க ஆர்வமுற்றனர். ஆனால் ஆஸ்திரியா, துருக்கி முதலிய சாம்ராஜ்ய நாடுகள், ஜெர்மனியுடன் சேர்ந்து தேசிய இயக்கத்தைத் தொலைக்க முற்பட்டன. 1908-ல் பாஸ்னியாவையும், ஹெர்ஸிகோவினாவையும், பெர்லின் உடன்படிக்கைக்கு முரணாக ஆஸ்திரி

யாச் சக்கரவர்த்தி தமது சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார். ஸ்லாவ் இனத்தைச் சார்ந்த அப்பிரதேசக் குடிகள் செர்பியா அரசுடன் சேருவதற்கு விருப்பம் கொண்டிருந்தனர். ஆதலால் அவர்கள் ஆஸ்திரியாச் சக்கரவர்த்திக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து 1914-ல் ஆஸ்திரியா இளவரசரை ஸரஜீவோ நகரில் சுட்டு வீழ்த்தினர். ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்கும் போர் மூண்டது. செர்பிய அரசு, தான் அக்கொடுஞ் செய்கைக்குப் பொறுப்பாளி அல்லவென்று நிரூபித்ததெனினும், அதன்பால் பொறாமை கொண்ட ஆஸ்திரியா அரசு அதன் சுதந்திரத்தைத் தொலைக்கத் தீர்மானித்தது. ஜெர்மனி, ஆஸ்திரியாவுடன் சேர்ந்தது. ஸ்லாவ் இனத்தவரின் தலைவரான ரஷ்யச் சக்கரவர்த்தி செர்பியாவிற்குத் துணை நின்றார். ஒப்பந்தப்படி பிரான்சு ரஷ்யாவைப் பின்பற்றவே அந்நாட்டைத் தாக்க ஜெர்மன் சக்கரவர்த்தி தமது சேனையை பெல்ஜியத்தின் வழியாக அனுப்பினார். பெல்ஜிய மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவும் பிரிட்டிஷ் அரசு, பிரான்சுடன் சேர்ந்தது. ஐரோப்பாவிற் தோன்றிய யுத்தம் இக்காரணத்தினால் உலகெங்கும் பரவியது. தேசியத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாப்பதின் பொருட்டே முதல் உலக மகாயுத்தம் செய்யப்பட்டதென்று கூறின் அக்கூற்று உண்மையே.

1919-ம் வருஷம் உலக மகாயுத்தம் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கைப்படி முடிவுற்றது. பிரிட்டிஷ் பிரதம மந்திரியான லாயிட் ஜார்ஜ் பிரெஞ்சுப் பிரதம மந்திரியான கிளமன்சோ, அமெரிக்க ஐக்கிய நாட்டு ஜனாதிபதியான வில்சன், இம்மூவரும் தேசியக் கொள்கையை உலக வியவகாரங்களைத் தீர்ப்பதற்கு ஏற்ற கருவியெனக் கையாண்டனர். பிரான்சு இழந்த அல்சேஸ், லொரைன் பிரதேசங்களை ஜெர்மனியிடமிருந்து அந்நாடு கைப்பற்றியது. வட ஷீலஸ்விக் பிரதேசத்தை டென்மார்க் பெற்றது. ஜெர்மனி, ரஷ்யா, ஆஸ்திரியா இம்மூன்று நாடுகளும் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்ட போலந்து நாட்டை மீண்டும் போலிஷ்

மக்களுக்குக் கொடுக்கவேண்டியதாயிற்று. ஆஸ்திரியா சாம்ராஜ்யம் துண்டாடப்பட்டு, ஆஸ்திரியா, ஹங்கேரி, ஸெக்கோஸ்லோவாக்கியா, யூகோஸ்லேவியா என்னும் நான்கு தேசிய நாடுகள் அங்கு எழுந்தன. பின்லந்து, லட்வியா, லித்துவேனியா, எஸ்டோனியா முதலிய நாடுகள் ரஷ்ய சாம்ராஜ்யத்திலிருந்து பிரிக்கப்பட்டன. சுமார் 2000 வருஷம் தாய்நாடு இன்றித் தயங்கி நின்ற யூதர்களுக்குப் பாலஸ்தீனத்தில் தேசிய அரசு ஒன்று அமைக்கப் பட்டது. இவ்வாறு தேசியம் இந்நூற்றுண்டில் வளர்ச்சியுற்றது.

புதிதாய் எழுந்த தேசிய நாடுகள் ஒவ்வொன்றும், தங்களது வர்த்தகத்தையும், உணவுப் பொருள்களையும், அதிகரிக்கும் நோக்கத்துடன் அந்நிய நாடுகளிலிருந்து ஆலைச்சரக்குகள் வராவண்ணம் வர்த்தகத் தடைகளை ஏற்படுத்தின. அதனுல் உலக வர்த்தகம் சீர்குலைந்து பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. நாளடைவில் வர்த்தக மந்தம், வேலையில்லாத் திண்டாட்டம், பசிப்பிணி முதலியன அதிகரித்து மக்களை வாட்டின. மேலும் ஒரு நாட்டின் மக்கள் ஒரே இனத்தைச் சார்ந்திராது பல இனங்களாகப் பிரிந்திருந்தனர். பெரும்பான்மைக் கட்சியினர், சிறுபான்மை வகுப்பினர் என்னும் பேதங்கள் எழுந்தன. வெர்ஸேல்ஸ் உடன்படிக்கைக் கேற்ப அமைக்கப்பெற்ற சர்வதேச சங்கத்திற்கு மக்களின் உணர்ச்சியையும், அதன் விளைவுகளையும் மட்டுப்படுத்த முடியவில்லை. பிரிட்டன், பிரான்சு, முதலான வல்லரசுகள் அச்சங்கத்தை ஒரு கருவியாக உபயோகித்தனவே யன்றிப் பொது நன்மைக்காகச் சிறிதளவும் அவைகள் தமது சுதந்திரத்தை இழக்க விரும்பவில்லை. இராணுவத்தைக் குறைப்பதற்குப் பதிலாக அதைப் பெருக்கின. 1931-ல் ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றவே, சீனு அதோடு போர் தொடுத்தது. 1935-ல் அபிஸீனியாவை இத்தாலி கைப்பற்றியது. 1938-ல் ஜெர்மனி ஸெக்கோஸ்லோவாக்கியா, ஆஸ்திரியா முதலிய நாடுகளைக் கைப்பற்றி யுத்தத்திற்குத் தயாரானது.

ஜெர்மன் சர்வாதிகாரியான ஹிட்லர் 1939-ல் போலந்து தேசத்தைத் தாக்கவும், இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. 1945-ல் அந்த யுத்தம் முடிவுற்றது. இம் மகாயுத்தங்களின் கோரத்தைக் கண்ணுற்ற அறிவாளிகள் உலக அமைதியைப் பாதுகாப்பதின் பொருட்டு ஐக்கிய தேசீய நாடுகளின் கூட்டுறவுச் சங்கமொன்றை நிறுவினர். மேலும், யுத்தத்தின்போது சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் அட்லான்டிக் சமுத்திரத்தில் சந்தித்துச் சாசனம் ஒன்றை வெளியிட்டனர். தங்களுக்கேற்ற அரசியலை மக்கள் நிர்ண யித்துக்கொள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டென்று, இருவரும் கூறினர். தேசீயம் இவ்வாறு வலுவுற்றது.

ஐரோப்பா கண்டத்தில் இவ்வாறு மக்களிடையில் வளர்ந்தோங்கிய தேசீய உணர்ச்சி ஆசியா, ஆப்பிரிக்கா பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள் முதலியவைகளில், பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து வேகமாகப் பரவியது. அடுத்த இரண்டத்தியாயங்களில் அதன் வளர்ச்சியை ஆராய்வோம்.

---

# அத்தியாயம் 3

# ஆசியாவில் தேசீய வளர்ச்சி வரலாறு

## I. ஜப்பான்

ஆசியா கண்டத்தில் முதற்கண் தேசீய உணர்ச்சி யைப் பெற்ற நாடு ஜப்பானாகும். 1853-ல் ஜப்பானுக் கும், மேனாட்டாருக்கும் தொடர்பு ஏற்பட்டது. ஆங்கிலே யர், அமெரிக்கர் முதலானோர் ஜப்பான் சக்கரவர்த்தியிட மிருந்து வர்த்தகச் சலுகைகளைப்பெற்றனர். ஜப்பானியர் மேனாட்டாரின் வலிமையை உணர்ந்து அங்ஙனம் தாமும் வலிமையுறுவிடின் தம் சுதந்திரத்தை இழக்க நேரிடுமெனக் கருதி ஐரோப்பிய இராணுவ முறைகளைப் பின்பற்றத்

தொடங்கினர். முட்ஸிஹிடோ எனும் ஜப்பானியச் சக்கர வர்த்தியின் ஆட்சியில் நாடு பலதுறைகளிலும் உலக மக்கள் வியப்புறுமாறு வளர்ந்தோங்கியது. பண்டைய நிலமானிய முறை அழிவுற்றது. இருப்புப் பாதைகளும், எந்திரசாலை களும் அமைக்கப்பட்டன; தபால், தந்தி முதலிய வசதிகள் ஏற்பட்டன. ரஸ்தாக்கள் அமைக்கப்பட்டன. சட்டசபை நிறுவப்பட்டது. கட்டாய இராணுவச் சேவைச் சட்டம் இயற்றப்பட்டது. கைத்தொழில்கள் பெருகிற்று. பிறநாடு களுடன் தொடர்பு கொள்ளும்பொருட்டு அநேக ஜப்பானிய மக்கள் ஆங்கில மொழியில் பயிற்சி பெற்றனர். தேசீய உணர்ச்சி மக்களிடையில் அதிவிரைவாய் வளர்வுற்றது. மெய்ஜிடென்னோ (முட்ஸி ஹிடோ) ஆட்சியில் ஜப்பான் ஒரு புதிய நாடாக விளங்கிற்று.

கொரியா நாட்டில் தனது ஆதிக்கத்தை நிறுவ ஜப் பானிய அரசு முயற்சிக்கவே அண்டையிலுள்ள சீனு 1895-ல் ஜப்பானுடன் போர் தொடங்கிற்று. சீனத் துருப் புகளைத் தோற்கடித்து ஜப்பானியர் மஞ்சூரியாவையும், போர்ட் ஆர்தர் கோட்டையையும் கைப்பற்றி, சீன அரசை சமாதானம் கோரும்படிச் செய்தனர். பார்மோசா தீவை யும், போர்ட் ஆர்தரையும் பெற்று கொரியாவில் தன் ஆதிக்கத்தை ஸ்தாபித்தனர். ரஷ்யா, ஜெர்மனி இவ்விரு ஐரோப்பிய வல்லரசுகளும், ஜப்பானியரைப் பயமுறுத்தி போர்ட் ஆர்தரை சீனுவுக்குத் திரும்ப அளிக்கும்படி செய்தன. பின்னர் ரஷ்யா அதை சீனுவிடமிருந்து பெற் றது. ஜெர்மனி, கியாச்சோவைக் கைப்பற்றியது. ஜப்பான் வெகுண்டு ரஷ்ய ஆதிக்கத்தைத் தொலைப்பதில் ஈடுபட்டது. 1904-ல் இரு நாடுகளும் போரில் இறங்கின. ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்முகிய ரஷ்யாவுடன் சிறு தேசமாகிய ஜப்பான் போர் தொடுப்பதை மடமை எனக் கருதினர் பலர். ஆனல் உலக மக்கள் வியப்புறுமாறு ரஷ்யக் கப்பற் படையை சுஷீமா ஜலசந்தியில், ஜப்பானியர் முறியடித்து போர்ட் ஆர்தரைக் கைப்பற்றித் தங்கள் வீரத்தை வெளிக் காட்டினர். ஆசியாக் கண்டத்தில் முதற்கண் ஐரோப்பிய

வல்லரசு ஒன்றை முறியடித்த பெருமை ஜப்பானியருக் குரியது. அவர்களது வெற்றியின் விளைவாக ஆசியா மக்கள் விழிப்புற்று ஐரோப்பிய ஆதிக்கத்தை வெறுக்கத் தொடங்கினர். 1910-ல் கொரியா ஜப்பானிய சாம்ராஜ்யத் துடன் இணைக்கப்பட்டது. ஐரோப்பிய வல்லரசுகள் ஜப்பானைத் தங்களுக்குச் சரிசமமாகஅங்கீகரித்தன. மேனாடு களைப் போல ஜப்பானும், தேசிய உணர்ச்சியின் விளைவாக மண்ணாசையால் பீடிக்கப்பட்டது; சாம்ராஜ்ய மோகத்தில் வீழ்ந்தது. கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள் களைப் பெறவும், வர்த்தக வசதிகளை அடையவும், ஜப்பான் எவ்வாறு 1894-ல் சீனாவுடன் போரிலிறங்கியது என்ப தைப் பார்த்தோம். 1914-ல் எழுந்த முதல் உலக மகா யுத்தத்தில் நேசக் கட்சியினருடன் சேர்ந்து யுத்தம் செய்து, ஜப்பான் தனது சாம்ராஜ்யத்தை வலுவுறச் செய் தது. பின்னர் 1931-ல் மஞ்சூரியாவை, சீனாவிடமிருந்து பறித்துக்கொண்டது. 1937-ல் சீனாவுடன் இரண்டாவது முறை போரிலிறங்கி, அத்தேசத்தின் பெரும்பாகத்தை தன் வசப்படுத்தியது. 1939-ல் எழுந்த இரண்டாவது உலக மகா யுத்தத்தில் ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடு களுடன் சேர்ந்து, அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன், முதலிய நாடுகளுடன் யுத்தம் செய்து இறுதியில் தோல்வி யுற்று, ஜப்பான் தன் சாம்ராஜ்யத்தை இழந்தது. தேசிய உணர்ச்சியின் விளைவான மண்ணாசையே ஜப்பானியரின் நாசத்திற்குக் காரணமாகும்.

## II. சீனா

ஜப்பானுக் கண்மையிலுள்ள சீனதேசம், இந்நூற் றுண்டின் ஆரம்பத்தில்தான் தேசிய உணர்ச்சி பெற்றது. உலகிலுள்ள பெரிய தேசங்களில் ஒன்று சீனா. அத் தேசத்தில் சுமார் 45 கோடி மக்கள் வாழ்கின்றனர். முற் காலத்தில் மேம்பாடடைந்த மக்களில் சீனர்கள் தலைசிறந்த வர்கள்: உலகில் அச்சுவித்தையை முதன் முதலாகக்

கண்டுபிடித்தவர்கள் அவர்களே யாவர் : காகிதம், மாலுமி திசைகாட்டும் கருவி, முதலியவற்றை ஆதியில் செய்த பெருமையும் அவர்களுடையதே: பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் அவர்கள் அந்நிய நாட்டினருடன் நெருங்கிய தொடர்பு ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லை. 1839-ல் ஆங்கிலேயரும், இதர ஐரோப்பிய மக்களும், அமெரிக்க ஐக்கிய நாட்டினரும், சீனச் சக்கரவர்த்தியிடமிருந்து சில வர்த்தக வசதிகளைப் பெற்றனர். அதனல் மேனாட்டு நாகரீகமும், கல்வியும், கிறிஸ்தவ மதமும் தேசத்தில் சிறிது பரவத்தொடங்கின. பல சீனமக்கள் அந்நியநாடுகளுக்குச் சென்று கல்வி கற்றுத் திரும்பினர். அவர்களிடையில் கைத்தொழில், கல்வி, விஞ்ஞான ஆராய்ச்சி முதலியவைகளில் தங்களது நாட்டார் முன்னேற்றமடைந்து நாகரீகத்தில் சிறப்புற்று விளங்கவேண்டுமென்ற எண்ணம் உதித்தது. சீன அரசு சீர்குலைந்திருந்தமையால் அவ்வரசைத் தொலைத்துக் குடியரசொன்றை நிறுவவேண்டுமென்று அநேகர் முற்பட்டனர். அவ்வாறு உழைத்தவர்களில் மேன்மையானவர் **சுன்யாத்சன்** என்பவராவர். அவர் தென் சீனவில் 1866-ல் பிறந்தார். ஆங்கில அமெரிக்கப் பள்ளிகளில் கல்வி பயின்று காண்டன் நகரில் மருத்துவத் தொழிலைக் கைக்கொண்டார். தேசத்தில் கொடுங்கோன்மை தாண்டவமாடவே குடியாட்சியை நிறுவும் நோக்கத்துடன் **சீனப் புத்துயிர் சங்கம்** என்ற ஒரு சங்கத்தைத் ஸ்தாபித்தார். அரசியல் புரட்சியில் வெற்றி பெறுது 1895-ல் டாக்டர் சன் நாட்டைவிட்டு, அயல் நாடுகள் சென்ருர். சில ஆண்டுகளுக்குப் பின்னர், சீனவை யடைந்து **குமிங்டாங்** என்னும், மக்களின் தேசீயக் கட்சி ஒன்றை அமைத்தார். புரட்சி இயக்கம் மீண்டும், வெற்றியுருது போகவே டாக்டர் சன் 1905-ல் ஐரோப்பாவிற்குச் சென்ருர். சீன அரசு சீர்குலையவே 1911-ல் நாட்டில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. டாக்டர் சன் அப்பொழுது இங்கிலாந்திலிருந்தார். அவர் உடனே தன் தேசத்தை யடைந்து தேசீயக் கட்சியின் தலைமையை வகித்

தார். சக்கரவர்த்தி முடிதுறக்கவேண்டியதாயிற்று. சீனவில் குடியரசு நிறுவப்பட்டது. சன் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். குமிங்டாங் கட்சியை திருத்தியமைத்து தேசீயம், ஜனநாயகம், ஏழைமக்களின் நலன் ஆகிய மூன்று கொள்கைகளையும் அக்கட்சியின் குறிக்கோள்களாக்கினர். அவர் தலைமையில் சீன முன்னேற்றமடைந்தது. 1925-ல் அவர் மரணமடையவே அவரை நான்கிங் நகரில் அடக்கம் செய்தனர். சீனமக்களின் தேசீய உணர்ச்சியை தட்டி எழுப்பிய மகா புருஷர் அவரே யாவர்.

சன்னுக்குப் பின்னர் அவருடைய மனைவியின் தங்கை புருஷரான **சியாங்-கே-ஷேக்** என்பவர் அரசியல் தலைவரானர். ஜப்பானியரின் ஆக்ரமிப்பு சீன மக்களின் தேசீயத்தை வலுவுறச் செய்தது. 1931-ல் அவர்கள் மஞ்சூரியாவை சீனவிடமிருந்து பறித்துக் கொண்டது மன்றி 1937-ல் மீண்டும் போர் தொடுத்து சியாங்கே, நான்கிங், காண்டன் முதலிய நகரங்களைக் கைப்பற்றி சீனர்களை பசிபிக் சமுத்திரக் கரையிலிருந்து விரட்டித் தங்களது ஆதிக்கத்தை ஸ்தாபித்தனர். சியாங்-கே-ஷேக் தனது தலைநகரை **சுங்கிங்கிற்கு** மாற்றி, எதிரிகளுடன் கடுமையாகப் போர் தொடங்கினர். ஜப்பானியரின் மண்ணாசையும், அதனல் விளைந்த போரும் சீன மக்களைத் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடச் செய்தன. இன்று சீனவின் ஒப்பற்ற தலைவர் சியாங்-கே-ஷேக் ஆவர். அவருடைய மனைவியும் அவருடன் ஒத்துழைக்கின்றார். இரண்டாவது உலக மகா யுத்தத்தில் நேசக் கட்சியுடன் உழைத்து இருவரும் உலக மக்களின் மதிப்பைப் பெற்றிருக்கின்றனர். அவர்களுடைய அரிய சேவையினல் சீன இன்று நாகரீகமுற்ற நாடுகளில் ஒன்ருகத் திகழ்கின்றது.

## III. இந்தியா

இந்திய மக்களிடையில் தாங்கள் ஒரு நாட்டினரென்னும் ஒற்றுமை யுணர்ச்சியின் தோற்றமும் வளர்ச்சியும் பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவெனக் கூறுவது மிகையன்று. இந்திய தேசிய உணர்ச்சி பற்பல காரணங்களால் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தழைத்து வளர்ந்தோங்கியது.

முதன் முதலாக, இமாலயத்திலிருந்து குமரிமுனை வரையிலும் நாடு ஓர் ஆட்சிக்குட்பட்டதே அவ்வுணர்ச்சிக்கு வித்தாகும். இந்து தேச வரலாற்றில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னர் பரதகண்டம் முழுவதும், ஒரு குடையின்கீழ் இருந்ததேயில்லை. பிரிட்டிஷ் அரசு நாட்டைத் தன் ஆட்சிக்குட் படுத்தினதுமன்றி அதில் பெரும்பாலும் ஒரே ரீதியான நிர்வாக முறையை ஏற்படுத்தியது. குற்றச் சட்டம், குற்ற வழக்கு முறை, ஜில்லா நிர்வாக முறை, சொத்துரிமை, மத உரிமை முதலியன அவ்வாட்சியின் முக்கிய அம்சங்கள். இக்காரணத்தால் மக்களிடையில் ஒற்றுமை உணர்ச்சி தோன்றியது.

இரண்டாவதாக, இவ்வகண்ட பரதகண்டத்தில் மக்கள் பல்வேறு மொழிகளையும், பழக்கவழக்கங்களையும் உடையவர். அவர்களுக்கிடையில் ஒரு பொது மொழி இல்லையெனின் நெருங்கிய தொடர்பு உண்டாவதும், அதனால் ஒற்றுமை ஏற்படுவதும் சாத்தியமன்று. அத்தகைய பொது மொழி 1835-ல் மெக்காலே பிரபுவின் அறிக்கையின் விளைவாய் மக்களிடையில் பரவத் தொடங்கியது. அதனால் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அவர்கள் ஓர் இடத்திற்கூடி தங்கள் நலனையும், எதிர்காலத்தையும் பற்றித் தீர்மானம் செய்ய வசதி ஏற்பட்டது. ஆங்கில மொழியே இந்திய தேசியத்தை வலுவுறச் செய்ததெனின் அது முற்றிலும் உண்மையே.

மூன்றாவதாக, மேனாட்டு இலக்கியங்களில் ஜனநாயகம், தேசியம், பொறுப்பாட்சி, பிரஜா உரிமை, அரசியல் சுதந்

திரம் முதலிய கொள்கைகள் மலிந்து கிடக்கின்றன. பர்க், மில், ரூஸோ, மசீனி முதலிய மேனாட்டு அரசியல் அறிஞர்களின் நூல்களில் பயிற்சிபெற்ற இந்திய மக்கள் தாங்களும், அத்தகைய கொள்கைகளைப் பின்பற்ற வேண்டுமென்று கருதுவது இயல்பே. பிரிட்டிஷ் மக்களது வரலாற்றின் முக்கிய அம்சம் அரசியல் சுதந்திரமாகும். பிரிட்டனில் பதின்மூன்றும் நூற்றுண்டி ஞரம்பத்தில் மக்கள் கொடுங்கோல் மன்னனை ஜானுக்கெதிராக எங்ஙனம் கிளர்ச்சி செய்து வரம்பிற்குட்பட்ட ஆட்சியை குறிக்கோளாக உடைய மகாசாசனத்தைப் பெற்றனர் என்பதையும், பதினேழாவது நூற்றுண்டில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு எவ்வாறு எதேச்சாதிகாரத்தை மேற்கொண்ட ஸ்டூவர்ட் மன்னர்களை எதிர்த்துப் போராடி அவர்களில் ஒருவரைச் சிரச்சேதம் செய்து, வேறு ஒருவரை நாட்டைவிட்டு விரட்டி தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தியதென்பதையும், பதினெட்டாவது நூற்றுண்டில் வட அமெரிக்காவில் குடிபுகுந்திருந்த ஆங்கில மக்கள் தாய்நாட்டின் பொறுப்பற்ற ஆட்சியை எதிர்த்துப் போராடிக் குடியரசொன்றை ஸ்தாபித்தனர் என்பதையும் கற்றறிந்த இந்திய மக்கள், தங்களது தேசத்திலும் பொறுப்பாட்சியும் ஜனநாயகமும் நிலவவேண்டுமென விரும்புவது இயல்பன்றோ? ஆங்கிலேய மக்களின் வரலாற்றை நன்குணர்ந்த இந்திய அறிஞர்கள் தாங்களும் அத்தகைய சுதந்திரத்தை யடைய ஆர்வமுற்றனர்.

நான்காவதாக, போக்குவரவு வசதிகள் அதிகரிக்கவே தமிழ்நாடு, ஆந்திர தேசம், பாஞ்சாலம், மகாராஷ்டிரம், வங்காளம் முதலான பாகங்களிலிருந்து தலைவர்கள் ஓரிடத்தில் சந்தித்து நாட்டின் நலனைப்பற்றிப் பரிசீலனை செய்யப் போதிய வசதி ஏற்பட்டது. மேலும் பெண்டிங் பிரபு, எல்பின்ஸ்டன், மெட்காப் முதலிய பிரிட்டிஷ் அதிகாரிகள் சுய ஆட்சியே இந்திய மக்களின் குறிக்கோளாக இருக்கவேண்டுமென்றும், ஆங்கிலேயர் இந்தியாவை என்றும் தங்களுக்கடிமையாகக் கருதி ஆட்சி புரிய

முடியாதென்றும், இந்திய மக்களுக்குச் சுய ஆட்சித் துறையில் பயிற்சி அளிக்க வேண்டுமென்றும் பறை சாற்றி இந்திய மக்களை ஊக்கப்படுத்தினர். ஆனால் அவர்களுக்குப் பின்னர் வந்த சில ஆங்கில அதிபதிகள் இந்தியமக்களின் விருப்பத்தைப் புறக்கணித்து ஆட்சி புரிந்தமையால் அரசியற் கிளர்ச்சி பலபாகங்களிலும் எழுந்து தேசீய உணர்ச்சியை வலுவுறச் செய்தது. ராஜப் பிரதிநிதி லிட்டன் பிரபுவின் சட்டங்கள் இந்திய மக்களின் மனதைப் புண்படுத்தி அவர்களை ஒன்று சேரத் தூண்டின. அவருக்குப் பின்னர் ராஜப் பிரதிநிதியாக வந்த ரிப்பன் பிரபுவின் காலத்தில் **இல்பர்ட் மசோதாத்** தகராறு இந்திய மக்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குமுள்ள இனவேற்றுமையைப் பலப்படுத்தித் தேசீய உணர்ச்சியை வளர்த்தது. ரிப்பனுக்குப் பின்னர் ராஜப்பிரதிநிதியான டப்ரின் பிரபுவின் ஆட்சியில் இந்திய தேசீய காங்கிரஸ் 1885-ல் நிறுவப்பட்டது. அது மக்களின் ஒற்றுமை யுணர்ச்சியைப் பலமுறச் செய்தது.

**காங்கிரஸின் வரலாறு:** இந்திய தேசீயத்தின் வளர்ச்சியும், காங்கிரஸின் வரலாறும் இணைக்கப்பட்டிருப்பதால் காங்கிரஸின் வரலாற்றைச் சிறிது ஆராய்வோம். இந்தியன் சிவில் சர்வீஸிலிருந்து விலகி, உபகாரச் சம்பளம் பெற்று வந்த **ஆலன் அக்டேவியன் ஹியூம்** என்னும் ஆங்கிலேயர் முதன் முதலாக அதை ஸ்தாபித்தார். இந்தியமக்கள், பிரிட்டிஷ் நிர்வாகத்தில் அதிருப்தியுற்றிருப்பதைக் கண்டு அவர்களிடையில், அமைதியை நிலைநாட்டும் நோக்கத்துடன் ஹியூம், வங்காள மாணவர்கட்கு பகிரங்கக் கடிதம் ஒன்றை விடுத்தார். அதன் சாராம்சமாவது:—எந்நாட்டினரும், அவர்களுடைய தகுதிக்கேற்றவாறு அரசியலைப் பெறுவர். தியாக சிந்தையும், தன்னலமின்மையு முடைய ஐம்பது இளைஞர்கள் தேசத்திற்குத் தொண்டாற்ற கங்கணம் பூணுவரேல் நாடு முன்னேற்ற மடையுமென்பதில் ஐயமில்லை. இப்பொன் மொழிகளை நம் தேசத் தலைவர்கள் என்றும் கடைப்பிடித்து ஒழுகக் கடவுள் அருள் புரிவாராக.

ராஜப்பிரதிநிதி டப்ரின் பிரபுவை ஹியூம் சந்தித்து மக்களிடையில் வளர்ந்து வந்த கிளர்ச்சி மனப்பான்மையைத் தடுப்பதற்கு அவர்களின் தலைவர்களை ஓரிடத்தில் கூடச்செய்து சமுதாயச் சீர்திருத்தம், பொருளாதாரம் முதலிய விஷயங்களைப் பரிசீலனை செய்யுமாறு தூண்டினால் மக்களின் அதிருப்தி ஒருவாறு குறையுமென்றும், அரசியல் விஷயங்களை அவர்கள் வாதிக்க நேரிடின், வங்காளம், சென்னை, பம்பாய் முதலிய மாகாணங்களிலுள்ள அரசியல் சங்கங்களின் மதிப்புக் குறையுமென்றும் கூறினர். ஹியூமின் திட்டத்தைப் பாராட்டிய டப்ரின் பிரபு நிர்வாக விஷயங்களைப் பரிசீலனை செய்யுமாறு இந்தியத் தலைவர்களைத் தூண்டினர். ராஜப்பிரதிநிதியின் அனுமதியுடன் ஹியூம் தேசத்தலைவர்கள் பலருக்குக் கடிதம் வரைந்தார். அவருடைய முயற்சியால் இந்திய தேசீயக் காங்கிரஸ் 1885 டிசம்பரில் பம்பாயில் கூடியது. தேசத்தின் பல பாகங்களிலிருந்து சுமார் 450 பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். டப்ளியூ. ஸி. போனர்ஜி என்னும் வங்காளி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸின் நோக்கங்கள் விளக்கப்பட்டன. இந்தியாவில் வாழும் பல்வேறு மக்களை ஒன்று சேர்த்து அவர்களிடையில் தேசீய உணர்ச்சியை வளர்த்து அரசியல் நிர்வாகக் குறைகளை நீக்க வேண்டுமென்றும், அவர்களைக் கல்வி, பொருளாதாரம், விஞ்ஞானம், வர்த்தகம் முதலிய பல துறைகளிலும் முன்னேறச் செய்ய வேண்டுமென்றும், இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் சிநேக மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டுமென்றும், இந்த இலட்சியங்களை யடைவதற்காகவே காங்கிரஸ் கூட்டப்பட்டதென்றும் தலைவர் குறிப்பிட்டார்.

முதற் காங்கிரஸில் ஒன்பது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முதற் தீர்மானத்தைக் கொண்டு வந்த பெருமை சென்னை இந்து பத்திராதிபர் ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களுக் குரியது. இராணுவச் செலவு குறைக்கப்படவேண்டுமென்றும், இந்தியா மந்திரி சபையை எடுத்து

விடவேண்டுமென்றும், இந்திய நிர்வாகக் குறைகளை ஒரு கமிஷன் மூலம் பரிசீலனை செய்யவேண்டுமென்றும், இந்தியன் சிவில் சர்வீஸ் பரீட்சை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏககாலத்தில் நடத்தப்படவேண்டுமென்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சட்டசபையில் பாதிக்கு மேல் இருக்கவேண்டுமென்றும், அடுத்த காங்கிரஸ் கல்கத்தாவில் 1886 டிசம்பர் இறுதியில் கூடவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்தீர்மானங்களனைத்தும் ஆங்கில அரசாங்கத்தை இந்தியத் தலைவர்கள் இரங்கிக் கேட்கும் தன்மை வாய்ந்திருந்தன. அவர்கள் பிரிட்டிஷ் மக்கள் மீதும், பார்லிமெண்டு மீதும் மிக்க நம்பிக்கை கொண்டிருந்ததாக அவர்களுடைய சொற்பொழிவுகளிலிருந்து நாம் அறியக்கூடும்.

இரண்டாவது காங்கிரஸ் கல்கத்தாவில் **தாதாபாய் நௌரோஜி** என்னும் பார்ஸி பிரமுகர் தலைமையில் கூடியது. மூன்றாவது காங்கிரஸ் சென்னையில் **தயாப்ஜி** என்னும் பம்பாய் முஸ்லிம் பிரமுகர் தலைமையில் கூடியது. ஆண்டுதோறும் ஒரு முக்கியமான நகரத்தில் காங்கிரஸ் கூடுவது வழக்கமாயிற்று. இந்திய நாணயக் கொள்கை, கல்வி இலாகா, ராஜத்துவேஷக் குற்றச்சட்டம், நீதி வழங்குதலை நிர்வாகத்திலிருந்து பிரித்தல், தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களின் நிலைமை, பத்திரிகைத் தடைச் சட்டம் முதலிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அரசாங்க வரவு செலவுத் திட்டத்தைப் பரிசீலனை செய்யவும், நிர்வாக இலாகாத் தலைவர்களை அரசியல் நிர்வாகத்தைப்பற்றிக் கேள்வி கேட்கவும் சட்டசபைக்கு உரிமை வேண்டுமென்று கோரப்பட்டது.

1899-ல் ராஜப் பிரதிநிதியாக நியமிக்கப் பெற்ற கர்ஸன் பிரபு இந்திய தேசீய இயக்கத்தைத் தழைத்தோங்கும்படிச் செய்த ராஜப் பிரதிநிதிகளில் முதல்வராவார். ரிப்பன் பிரபுவைப்போல மக்களின் விருப்பத்தை ஆதரித்துத் தேசியத்தை வளர்த்தவரல்லர் கர்ஸன். அவைகளை எதிர்த்தே அவர் அவ்வியக்கத்தை வளர்த்தார்.

அவருடைய வங்காளப் பிரிவினையும், சர்வ கலாசாலைச் சட்டமும் இந்திய மக்களை ஒன்று சேரும்படி செய்தன. ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றாகிய ரஷ்யாவை ஜப்பான் எவ்வாறு ஒரு பெரும் போரில் 1905-ல் முறியடித்தது என்று பார்த்தோமல்லவா? ஜப்பானியரின் வெற்றி ஆசிய மக்களிடையில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. அவர்களின் மனத்தில் ஐரோப்பிய ஆதிக்கத்தைத் தொலைக்க முடியுமென்ற எண்ணம் வேரூன்றியது. இந்திய மக்களின் தேசீய உணர்ச்சி அதனால் வலுவுற்றது.

1909-ல் பிறந்த மின்டோ-மார்லி அரசியற் திட்டத்தின் குறைபாடுகள் தேசீய உணர்ச்சியைப் பலப்படுத்தின. 1914-ல் மூண்ட முதல் உலக மகாயுத்தம் இந்திய மக்களிடையில் ஒற்றுமை யுணர்ச்சியை வலுவுறச் செய்ய ஏதுவாயிருந்தது. ஜனநாயகத்திற்காகவே நேசக் கட்சியினர் ஜெர்மனிக் கெதிராகப் போர் தொடுத்தனர் எனப் பறைசாற்றப்பட்டது. அந்த யுத்தத்தின் வெற்றிக்காக அரும்பெரும் தியாகங்கள் செய்த இந்திய மக்கள், தாங்களும் அதைப் பெறவேண்டுமெனக் கருதினர். டொமினியனந்தஸ்தை யடைவதே தங்களது நோக்கம் என்று அவர்கள் கூறினர். ஆனால் யுத்தத்திற்குப் பின்னர் 1919-ல் பிறந்த ரௌலட் சட்டமும், பாஞ்சாலத்தில் அதிகார வர்க்கத்தினர் கையாண்ட இராணுவச் சட்டமும் ஜாலியன் வாலாபாக்கில் நேர்ந்த படுகொலையும், மக்களின் மனதைப் புண்படுத்தி அவர்களை ஒன்று சேரும்படி செய்தன.

இந்திய தேசீய உணர்ச்சியின் வளர்ச்சியை மதித்து பிரிட்டிஷ் அரசாங்கம் 1919-ல் மான்ட்போர்டு திட்டம் எனும் ஒரு புதிய அரசியற் திட்டத்தை வகுத்தது. அத்திட்டத்தின் குறைகளை நீக்கும் நோக்கத்துடன் இந்தியத் தலைவர்களில் புகழ்பெற்ற காந்தி என்பவர் மக்களை ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடச் செய்தார். அதுவரையிலும் தேசீய இயக்கத்தில் ஆங்கிலம் கற்ற இந்தியர்களே பெரும்பாலும் ஈடுபட்டிருந்தனர். காந்தி சாத்வீகச் சட்டமறுப்பு முறையைக் கையாண்டு பல்லாயிரக்

கணக்கான இந்திய மக்களை தேசீய இயக்கத்தில் பங்கெடுக்கும்படி செய்தார். 1927-ல் நியமிக்கப்பட்ட சைமன் கமிஷனும், தலைவர் காந்தியின் உப்பு வரி ரத்து சத்தியாக்கிரகமும், பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்த வகுப்புவாதத் தீர்மானமும், இந்திய தேசீய தீபத்தை மிக்க பிரகாசத்துடன் எரியச் செய்தன. இவ்வாறு ஒரு சிறு ஓடையிலிருந்து பல ஆறுகளின் சேர்க்கையினால் சமுத்திரம் போன்ற கங்கா நதி தோன்றுவது போலவும், சிறிய விதையிலிருந்து பிரம்மாண்டமான ஆலவிருட்சம் தழைத்தோங்குவது போலவும், 1885-ல் ஆரம்பிக்கப்பெற்ற காங்கிரஸ் ஸ்தாபனம் 1927-க்குள் நாடெங்கும் பல கிளைகளுடன் பரவியது. பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும், விஷயங்களைப் பரிசீலனை செய்வதற்கும் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி விஷயங்களை பரிசீலனை செய்து வந்தது. அதன் அங்கத்தினர் மாகாணவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதைவிடச் சிறிய கமிட்டி ஒன்றும், மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளும், ஜில்லா, தாலூகாக் கமிட்டிகளும் அமைக்கப்பட்டன. நன்மை பயக்கும் எத்தகைய ஆட்சியும் சுய ஆட்சிக்கு சமமன்று என்ற கொள்கையைக் காங்கிரஸ் தலைவர்கள் கடைப்பிடிக்கலாயினர். சுய ஆட்சியே நமது பிறப்புரிமை என்ற கொள்கையைப் பின்பற்றி நமக்குத் தேவையானவற்றை பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கெஞ்சிப் பிச்சைகேட்க வேண்டியதில்லை என்று தீவிர காங்கிரஸ் வாதிகள் முழங்கினர். முஸ்லிம்கள் தங்களது நலனைப் பேணுவதற்காக 1906-ல் நிறுவிய முஸ்லிம் லீக்கும் காங்கிரஸுடன் சேர்ந்தது. அரசாங்கம் அடக்குமுறையைக் கையாண்டு ஆயிரக்கணக்கான தலைவர்களைச் சிறையிலிட்டது.

1929-ல் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் லாகூரில் கூடிய காங்கிரஸ் டொமினியன் அந்தஸ்து என்கின்ற லட்சியத்தைப் புறக்கணித்து பூரண ஸ்வராஜ்யம் அல்லது சுதந்திரம் என்னும் அரசியல் லட்சியமே இந்திய மக்கள் விரும்புவதெனத் தீர்மானித்தது. ராஜப்பிரதிநிதி

வெல்லிங்டன் பிரபு காந்திஜீயையும், இதரத் தலைவர்களையும் சிறையிலிட்டு காங்கிரஸ் ஸ்தாபனம் சட்டத்திற்கு விரோத மானதென்று கூறி அதன் நிதியைப் பறிமுதல் செய்து அடக்கு முறையைக் கையாண்டார். இறுதியில் 1935-ல் பரதகண்டம் முழுமைக்கும் **சமஷ்டி** அரசியற் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. இக் கூட்டாட்சித் திட்டத்தின் குறைகளை காங்கிரஸ் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் கண்டித்தது. பின்னர் காந்திஜீயின் அனுமதியோடு காங்கிரஸ் 1935-ல் அரசியற் திட்டப்படி சட்டசபைத் தேர்தலில் ஈடுபட்டு எட்டு மாகாணங்களில் வெற்றிபெற்றது. 1939-ல் இரண்டாவது உலக மகா யுத்தம் தொடங்கினதும், இந்திய அரசாங்கத்தைக் கலக்காது நாட்டை அந்த யுத்தத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஈடுபடுத்தியது. அச்செய்கையைக் கண்டித்துக் காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் பதவிகளை ராஜீநாமாச் செய்தனர். கவர்னர்கள் நிர்வாகத்தைக் கைக்கொண்டனர்.

யுத்தம் வலுக்கவும் இந்திய அரசியற் கட்சிகள் தேசீய சர்க்கார் ஒன்று நாட்டில் உடனே அமைக்கப்படவேண்டும் என்று வாதாடின. 1940 ஆகஸ்டில் இந்தியா மந்திரியும் கவர்னர் ஜெனரலும் சேர்ந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அதன் சாராம்சமாவது :—யுத்தத்திற்குப் பின்னர் டொமினியன் அந்தஸ்தை இந்தியாவிற்கு அளிப்பதே பிரிட்டிஷ் பார்லிமென்டின் நோக்கமாகும். தங்களுக்குகந்த அரசியலை அமைத்துக்கொள்வது இந்தியத் தலைவர்களின் பொறுப்பாகும். அத்தகைய அமைப்பில் பிரிட்டிஷ் மக்களுக்கும் பெரும்பங்கு உண்டு என்பதை இந்திய மக்கள் மறக்கக்கூடாதென்பதாம். முஸ்லிம் லீக்கும் காங்கிரஸூம் ஒற்றுமையின்றித் தங்களுக்குள் சச்சரவுகளை ஆரம்பித்தன. ராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபை 1941-ல் அதிகரிக்கப்பட்டதெனினும், அரசியல் கட்சிகள் அதனால் சற்றேனும் திருப்தியடையவில்லை. ஜப்பானியர் பிரிட்டனுக்கெதிராகப் போரிலிறங்கவே, இந்திய மக்களின் ஒத்துழைப்பைப்பெறக் கருதி பிரிட்டிஷ் அரசாங்கம்

**சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ்** என்பவரை இந்திய அரசியல் பிரச்னையை பரிசிலனை செய்து திட்டம் ஒன்றை அமைக்க அனுப்பியது.

கிரிப்ஸின் தீர்மானங்கள் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. மகாத்மா காந்தி ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு வெளியேறும்படி ஓர் இயக்கத்தை 1942-ல் ஆரம்பித்தார். அரசாங்கத்தினர் காங்கிரஸ் கட்சித் தலைவர்களை சிறையிலிட்டனர். நாடெங்கும் குழப்பம் பரவியது. மகாத்மா காந்தி ஜெயிலில் உண்ணுவிரதத்தை அநுஷ்டித்தார். ஆனால் அரசாங்கம் அடக்கு முறையைக் கைவிடவில்லை. எதேச்சாதிகாரம் எங்கும் வியாபித்திருந்தது. 1945-ல் நேசக் கட்சியினர் வெற்றி பெற்றனர். பிரிட்டனில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. அதன்பயனாய்த் தொழிற் கட்சி அரசியலதிகாரத்தைக் கைப்பற்றியது. 1940-ல் வெளியிட்ட அறிக்கைக்கேற்ப இந்தியாவிற்குப் புதிய அரசியற் திட்டமொன்றை வகுப்பதில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஊக்கம் கொண்டது. காங்கிரஸ் கட்சியினர் விடுவிக்கப்பட்டனர். இந்தியத் தலைவர்களுடன் அரசியலமைப்பைப் பற்றிக் ஆலோசிக்க மூன்று பிரிட்டிஷ் மந்திரிகள் இந்தியாவிற்கு வந்தனர். முஸ்லிம் தலைவரான **ஜின்னா**, முஸ்லிம் மக்களுக்குத் தனி அரசு ஒன்று வேண்டுமென வாதாடினார். காங்கிரஸ் கட்சியினர் இனத்துவேஷமும், மதத்துவேஷமும் நாளடைவில் மாறும் என்றும், தற்கால நிலைமையில் பலம் பெற்ற மத்திய அரசாங்கம் ஒன்றை அமைப்பது அரிது என்றும் கூறினர். 1947 பிப்ரவரியில் பார்லிமெண்டு அரசியல் பிரச்னையைப் பற்றி ஒரு **வெள்ளை அறிக்கையை** வெளியிட்டது. இந்தியத் தலைவர்கள் ஒற்றுமைப் பட்டாலும் படாவிட்டாலும் மூன்ருவதுகட்சி என்று கூறப்பட்ட பிரிட்டிஷ் மக்கள் 1948 ஜூன் மாதத்திற்குள் நாட்டைவிட்டு வெளியேறவேண்டுமென்பதே அவ்வறிக்கையின் சாராம்சம். மவுன்ட்பேட்டன் பிரபு என்பவர், வேவல் பிரபுவுக்குப் பின்னர் ராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கு மிடையில்

வகுப்புக் கலவரங்கள் அதிகரித்தன. ராஜப்பிரதிநிதி தலைவர்களோடு பொறுமையுடன் இந்திய அரசியல் பிரச்னையை விவாதித்து தேசத்தில் அமைதி நிலவவேண்டுமெனில் முஸ்லிம் மாகாணங்கள் இதர மாகாணங்களிலிருந்தும் பிரிக்கப்பட வேண்டுமென்ற முடிவிற்குவந்தார். பார்லிமெண்டும் பேட்டன் திட்டத்தை அங்கீகரித்து ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியன்று இந்தியா, பாகிஸ்தான் என்ற இரு பிரதேசங்களுக்கும் கானடா, நியூஸிலாந்து முதலிய டொமினியன்களைப் போல பூரண சுதந்திரம் அளித்தது. அதன் அறிகுறியாக பிரிட்டிஷ் படை வீரர்களும் அதிகாரிகளும் நாட்டைவிட்டு வெளியேற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கராச்சி பாகிஸ்தான் தலைநகராகவும், டெல்லி இந்தியத் தலைநகராகவும், அங்கீகரிக்கப்பட்டன. ஆகஸ்டு 15-ல் சுதந்திர தினம் நாடெங்கும் மிக்க குதூகலத்துடன் கொண்டாடப்பட்டது. இத்தகைய சாத்விகப் போருக்கும், அதன் விளைவான சுதந்திரத்திற்கும் காரணகர்த்தா மகாத்மா காந்தியே யாவார். நாடு பிளவுற்றதெனினும் தேசீய வாதிகள் இரு டொமினியன்களும் ஒன்று சேர்ந்து கூட்டாட்சியை ஏற்படுத்துமென்று கருதுகின்றனர். கடவுள் அருள் புரிவாராக!

தேசீய உணர்ச்சியின் விளைவாக இந்தியர்களிடையே நன்மதிப்பும், இந்தியக்கலை, இலக்கியம், பழக்க வழக்கங்கள் முதலியவைகளில் அவர்களுக்குப் பற்றும், கிராமப் புனருத்தாரணம், பொதுமக்கள் கல்வி முதலிய துறைகளில் முன்னேற்றமும், ஜாதிக் கட்டுப்பாடுகளின் தளர்ச்சியும், மக்களிடையில் ஒற்றுமையும் செழித்தோங்கத் தொடங்கின. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் நாட்டிலெழுந்த மறுமலர்ச்சி தேசீய உணர்ச்சியின் விளைவேயாகும். அவ்வுணர்ச்சியை மேன்மேலும் வளர்க்க அது மிக்க துணை புரிந்தது. தேசியத்தின் பெயரால் இந்திய மக்களின் வேற்றுமைகளை ஒழித்து ஒரே நிலைமைக்குக் கொண்டுவர முயற்சிப்பதைவிட தமிழர், ஆந்திரர், கேரளீய மக்கள், வங்காளிகள், மராத்தியர், பாஞ்சால நாட்டினர் முதலிய

பல்வேறு கூட்ட மக்களும், தங்களுக்குத் தனி மாகாண அரசுகளை அமைத்துப் பின்னர் கூட்டரசு ஒன்றை நிறுவி அதன் பாதுகாப்பில் தங்கள் நாகரீகத்தையும், பண்பாட்டையும் வளர்ப்பது தகுந்த முறையாகும்.

## IV. தென்மேற்கு ஆசியா

இந்நூற்றாண்டில் எகிப்தியர், அரபியர், பாரசீகர் முதலிய மக்களிடையில் தேசீய உணர்ச்சி செழித்து வளரத் தொடங்கியது. சென்ற நூற்றாண்டினிறுதியில் எகிப்தியர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற் குட்படுத்தப் பட்டனர். **அரபி பாஷா** என்னும் எகிப்தியப் படைத்தலைவர் மக்களிடையில் தேசீய உணர்ச்சியை வளர்த்து, பிரிட்டிஷ்காரரையும், பிரெஞ்சுக்காரரையும் நாட்டை விட்டு விரட்ட முற்பட்டனர். ஆனால் பிரிட்டிஷ் தளபதி ஊல்ஸ்லி என்பவரால் முறியடிக்கப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப் பட்டார். ஆங்கிலேய கவர்னரான **குரோமர் பிரபு** நாட்டில் பல சீர்திருத்தங்களைச் செய்து மக்களை முன்னேற்றமடையும்படிச் செய்தார். எகிப்திற்குப் புத்துயிரளித்தவர் அவரே. ஆனால் தேசீய உணர்ச்சி அந்நியராட்சியை அது எத்தகைய நன்மை பயக்குமெனினும் வெறுக்கும் தன்மை யுடையதன்றோ? 1914-ல் முதல் உலக மகாயுத்தம் தொடங்கவே பிரிட்டிஷ் அரசு எகிப்தில் தன் ஆட்சியை வலுவுறச் செய்தது. **சாகுலுல்பாஷா** என்னும் எகிப்திய தேசாபிமானி, தன் நாட்டிற்கு சுதந்திரம் அளிக்கும்படி கிளர்ச்சி செய்யவே பிரிட்டிஷ் பிரதம மந்திரியான லாயிட் ஜார்ஜ் போர் முடிவுற்றதும் எகிப்தியர்களுக்குச் சுதந்திரம் அளிப்பதாக வாக்களித்தார். போர் முடிந்தபின்னர் நாட்டில் குழப்பங்கள் ஏற்படவே 1922-ல் மக்களுக்குப் பொறுப்பாட்சி அளிக்கப்பட்டது. ஆனால் சூயஸ் கால்வாயின் பாதுகாப்பையும், எகிப்தின் பாதுகாப்பையும் பிரிட்டிஷ் அரசாங்கம் தன் கைக்குள் வைத்திருந்ததனால் எகிப்தியர் கிளர்ச்சி செய்வதை விடவில்லை. 1936-ல் எகிப்திய அரசுக்கும், பிரிட்டிஷ் அரசுக்கும் உடன்படிக்கை

ஒன்று ஏற்பட்டது. தேசீய உணர்ச்சியின் பயனாக எகிப்து விடுதலை பெற்றது.

அரபியர்கள் வட ஆப்பிரிக்காவிலும், அரேபியாவிலும், சிரியாவிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய வறுமையும், வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மையும், அறியாமையும் தேசீய உணர்ச்சியின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாயிருக்கின்றன. எனினும் பாலஸ்தீனத்தில், அரபியர்களுக்கும் யூதர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் போட்டி அவ்வுணர்ச்சியை வளர்க்குமென்பதற்கையமில்லை.

பாரசீகத்தில் ரஷ்யாவும் பிரிட்டனும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டப் போட்டியிட்டன. அதன் விளைவாய் மக்களிடையில் தேசீய உணர்ச்சி பரவியது. ஷாப் பேல்வி என்பவரின் ஆட்சியில் பாரசீகம் மேம்பாடுற்றது.

## V. கிழக்காசியா

கிழக்கிந்தியத் தீவுக் கூட்டங்களிலும் மலேயா, பர்மா, இந்தோ-சீனா முதலிய நாடுகளிலும், இரண்டாவது உலக மகா யுத்தத்தின் விளைவாக தேசீய உணர்ச்சி வளர்ந்தோங்கியது. இந்நாடுகளில் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தை ஜப்பானியர் தகர்த்தெறிந்தனர். ஆனால், அவர்கள் வீழ்ச்சியுற்றதும் ஆங்கிலேயர் பர்மா, சிங்கப்பூர், மலேயா முதலிய பிரதேசங்களில் தங்களாதிக்கத்தை மீண்டும் நிறுவினர். டச்சுக்காரரும், பிரெஞ்சுக்காரரும் தங்கள் ஏகாதிபத்தியத்தை மீண்டும் நிறுவ முற்படவே ஆபத்துக் காலத்தில் தங்களைக் கைவிட்டோடிய ஐரோப்பியர்களுக்கு அடிமைகளாக இருக்க விரும்பாது இந்தோனேஷியரும், இந்தோ-சீனரும் சுதந்திரமடைய ஆர்வம் கொண்டனர். பிலிப்பைன் தீவுகளை ஜப்பானிடமிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டினர் மீட்டி 1946 ஜூலை மாதம் அங்கு குடியரசொன்றை ஸ்தாபித்தனர். ஐக்கிய நாட்டினரின் தாராள மனப்பான்மை அண்மையிலுள்ள அடிமை மக்களை விளிப்புறச் செய்தது. டச்சுக்காரருக் கெதிராக

ஜாவா மக்கள் சுதந்திர சர்க்கார் ஒன்றை அமைத்து டாக்டர் சுகர்ணுவை அதன் தலைவராகவும், ஷாரியரை மந்திரியாகவும் தேர்ந்தெடுத்தனர். ஏகாதிபத்திய மோகத்தி லீடுபட்ட டச்சுக்காரர், அமெரிக்க ஐக்கிய நாட்டினரைப் போல இந்தோனேஷியருக்கு அரசியற் சுதந்திரம் அளிக்காது அவர்களை நசுக்க முற்பட்டனர். இன்னும் டச்சு ஏகாதிபத்தியப் பிரச்னை முடிவுறவில்லை எனினும் இந்தோனேஷியா சுதந்திரமடைவது திண்ணம். இந்தோசீனர் பிரஞ்சு அரசுக் கெதிராகக் கிளர்ச்சி செய்தனர். அவர்களும் சுதந்திரமடைவார்க ளென்பதற் கையமில்லை. இவ்வாறு சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து ஆசியா மக்கள் தேசீய உணர்ச்சியின் விளைவாய் விழிப்புற்றனர். இந்தியப் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு ஆசியா மக்களின் மகாநாடு ஒன்றைக் கூட்டி இவ்வுணர்ச்சியை வளர்ப்பது போற்றத் தகுந்தது. ஐரோப்பிய மக்கள் தங்களைச் சுரண்டி வாழ்வதை ஆசியா மக்கள் இனிமேல் கிஞ்சித்தும் பொறுக்க மாட்டார்கள் என்பதற் கையமில்லை.

---

# அத்தியாயம் 4

# தேசீயமும் ஏகாதிபத்தியமும்

## I. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் தேசீய வளர்ச்சியும்

நவீன காலத்திலெழுந்த ஏகாதிபத்தியங்களை தேசீய உணர்ச்சி எவ்வாறு பாதித்ததென்பதை இவ்வத்தியாயத்திலாராய்வோம். ஏகாதிபத்தியத்தின் முக்கியத் தன்மை பிறரைச் சுரண்டி வாழ்தலாகும். தேசீயத்தின் முக்கியத் தன்மை ஒரு நாட்டின் மக்கள் அந்நியரின் பயமின்றி தங்களுடைய விஷயங்களைத் தாங்களே கவனித்துச் சிறப்புற விளங்குவதாகும். இவ்விரு கொள்கைகளும், நெருப்பையும் தண்ணீரையும் ஒத்தன. தேசீய உணர்ச்சி ஏகாதிபத்தியத்தைச் சிதைவுறச் செய்யும். ஏகாதிபத்தியம் தேசீய

உணர்ச்சியை நசுக்கி மக்களை அடிமை வாழ்வுக்குட் படுத்தும்.

சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில், உலகில் பிரிட்டன், பிரான்ஸ், ஆஸ்திரியா, ரஷ்யா, துருக்கி, ஸ்பெயின், போர்ச்சுகல், ஹாலந்து, முதலிய ஐரோப்பிய நாடுகள் ஏகாதிபத்திய அரசுகளாக விளங்கின. அவைகளனைத்திலும் மிகப்பெரிது பிரிட்டிஷ் சாம்ராஜ்யமாகும். சுமார் 200 கோடி மக்கள் வாழ்கின்ற இவ்வுலகில் கால் பாகத்திற்கு மேல் அச் சாம்ராஜ்யத்திற்கு உட்பட்டிருந்தார்கள். நாலில் ஒரு பங்கு பூமி அதில் அடங்கியிருந்தது. சூரியன் ஒரு பொழுதும் அச் சாம்ராஜ்யத்தில் அஸ்தமன மாகாதபடி உலகில் பல பாகங்களிலும் அது பரவியிருந்தது. இந்தியா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, கானடா, தென் ஆப்பிரிக்கா, பர்மா, மேற்கிந்தியத் தீவுகள், பசிபிக் தீவுகள், ஆப்பிரிக்காவில் பெரும்பாலான பகுதிகள், எகிப்து முதலியன சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் அதில் சேர்ந்திருந்தன. ஏகாதிபத்திய மக்களிடையில் மதம், மொழி, பழக்க வழக்கங்கள், இனம், நாகரீகம் முதலியவைகளில் இருந்த வேற்றுமைகள் எண்ணிறந்தவையாகும். காலஞ் செல்லச் செல்ல தேசிய உணர்ச்சி ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட மக்களிடையில் வளர்ச்சியடையவே, அவ் ஏகாதிபத்தியம் பெரும் மாறுதலடைந்தது. முதன் முதலாக ஆங்கிலேயரும் இதர ஐரோப்பிய மக்களும் குடியேறியிருந்த தேசங்களான கானடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, நியூஸிலாந்து முதலியவைகளில் தேசிய உணர்ச்சி தோன்றி மக்களைத் தங்களுடைய விஷயங்களைத் தாங்களே சுதந்திரத்துடன் கவனித்துக்கொள்ளுமாறு தூண்டிற்று. கானடாவில் பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கிடையில் கலகங்கள் உண்டாகவே, பிரிட்டன் அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போல கானடாவும், தன் கையை விட்டு நழுவுமென்று கருதி 1838-ல் டர்ஹாம் பிரபுவை ராஜப் பிரதிநிதியாக அந்நாட்டிற்கு அனுப்பியது. அவர் பிரிட்டிஷ் பார்லி

மெண்டினிடம் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார். பிரெஞ்சுக் காரரும் ஆங்கிலேயரும் வாழ்ந்து வந்த இரு கானடாப் பகுதிகளையும் ஒன்று சேர்த்து அவர்களுக்கு பொறுப் பாட்சி வழங்க வேண்டுமென்பதே டர்ஹாம் அறிக்கையின் முக்கிய அம்சமாகும். அவ்வறிக்கையின்படி கானடியர் களுக்குப் பொறுப்பாட்சி அளிக்கப்பட்டது. மந்திரிகள் சட்டசபையில் பெரும்பான்மைக் கட்சியினரின் தலைவர்க ளாக விளங்கினர். ராஜப் பிரதிநிதி உள்நாட்டு விஷயங்க ளில் அவர்களின் சொற்படி நடக்கவேண்டியதாயிற்று. 1867-ல் கானடியர் தங்களுடைய முன்னேற்றத்திற்காகக் கூட்டாட்சி அரசொன்றை அமைத்துக்கொண்டனர். ஜனத் தொகையிலும் செல்வத்திலும் கானடா வியப்புறுமாறு நாளடைவில் வளர்ச்சி யுற்றது. கால்வாய்களும் ரயில் பாதைகளும் அமைக்கப்பட்டன. அட்லான்டிக் சமுத்திரக் கரையும், பசிபிக் சமுத்திரக் கரையும், கானடியன் பசிபிக் ரயில்பாதையால் இணைக்கப்பெற்றன. இவ்வாறு சென்ற நூற்றாண்டினிறுதியில் முதன் முதலாக தேசீய உணர்ச்சி யின் விளைவாய்க் கானடா டொமினியன் அந்தஸ்தைப் பெற்றது.

## II. தேசீய வளர்ச்சியும் டொமினியன் அந்தஸ்தும்

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளும், நாளடைவில் கானடாவைப் போல டொமினியனந்தஸ்தை யடைந்தன. ஆஸ்திரேலியாவில் 1901-ல் கூட்டாட்சி அமைக்கப்பட்டது. தென் ஆப்பிரிக் காவில் ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் குடியேறி யிருந் தனர். அவர்களுக்குள் இரு பெரிய போர்கள் நிகழ்ந்தன. பிரிட்டன், போயர்களென்னும் டச்சுக்காரரை வென்று தன் ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டிய தெனினும் பொறுப் பாட்சியை பல்வேறு பகுதிகளுக்கும் அளித்தது. 1909-ல் ஐக்கிய அரசியற் திட்டம் ஒன்றை ஆங்கிலேயரும் போயர் களும் அங்கீகரித்துக் கொண்டனர். இந்தியாவில் தேசீய உணர்ச்சி மக்களிடையில் விரைவில் பரவத் தொடங்கியது.

பிரிட்டிஷ் அரசு குடியேற்ற நாடுகளின் நட்பை நிரந்தரமாகப் பெறும் நோக்கத்துடன், ஏகாதிபத்திய விஷயங்களை அவைகளின் பிரதிநிதிகளோடு பரிசீலனை செய்யத் தொடங்கியது. விக்டோரியா மகாராணியின் தங்க விழாவும், வைரவிழாவும், ஏழாவது எட்வர்டு மன்னரின் முடிசூட்டு விழாவும், பிரிட்டிஷ் மந்திரிகளுக்கும் டொமினியன் பிரதிநிதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட ஏதுவாயிருந்தன. 1907-ல் நான்கு வருஷங்களுக் கொருமுறையாவது டொமினியன் பிரதிநிதிகளும், பிரிட்டிஷ் மந்திரிகளும் சேர்ந்த ஏகாதிபத்திய மகாநாடு கூட்டப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 1914-ல் மூண்ட முதல் உலக மஹா யுத்தம் டொமினியன்களின் தேசீய உணர்ச்சியை விரைவில் வளரச் செய்தது. ஆசிரியர் **மேரியட்** கூறுவது போல பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் அவ் யுத்தத்தில் சாதாரண சார்பு நாடுகளாக இறங்கின. அதன் முடிவில் அவை சுதந்திரம் பெற்ற தேசிய நாடுகளாக வெளிவந்தன. அவைகளின் பிரதிநிதிகள் பாரிஸ் சமாதான மகாநாட்டிலும், சர்வதேச சங்கத்திலும் இடம் பெற்றனர்.

**பால்பர் அறிக்கை:** 1926-ல் கூடிய ஏகாதிபத்திய மகாநாட்டில் தலைவர் **பால்பர்** பிரபு டொமினியன் அந்தஸ்தை நன்கு விளக்கினர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பிரிட்டனும் டொமினியன்களும், ஒன்றிற்கொன்று ஏற்றம், தாழ்வு இல்லாததும், சம அந்தஸ்து உடையதுமான சுதந்திர நாடுகளென்றும், தங்களுடைய உள்நாட்டு விஷயங்களையும் வெளிநாட்டுத் தொடர்பையும் தங்களிஷ்டம் போலத் தீர்மானிக்கும் உரிமை அவைகளுக்குண்டென்றும் பால்பர் குறிப்பிட்டார். அவ்வறிக்கையினால் டொமினியனந்தஸ்தைப் பெற்ற குடியேற்ற நாடுகள் பூரண சுதந்திரமுள்ள தேசங்களாக மாறின. டொமினியன் கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் அரசின் காரியதரிசியோ, அல்லது கையாளோ அல்லது பிரதிநிதியோ அல்ல என்று விளக்கப்பட்டது. அவ்வறிக்கைக்கேற்ப ஆஸ்திரேலியா கவர்னர்

ஜெனரலை அந்நாட்டுப் பிரதம மந்திரியின் சிபார்சின் பேரில் பிரிட்டிஷ் அரசர் நியமித்தார்.

**வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம்:** 1931-ல் டொமினியன்களின் சுதந்திர நிலைமை, சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. அச்சட்டம், வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் என்று அழைக்கப்படுகின்றது. அதன்படி பிரிட்டிஷ் பார்லிமெண்டு விதிக்கும் எச்சட்டமும் டொமினியன்களை கட்டுப்படுத்தாது. பிரிட்டிஷ் சட்டத்திற்கு முரணாக டொமினியன் பார்லிமெண்டுகளுக்கு எத்தகைய சட்டத்தையும் இயற்றும் உரிமை உண்டு. டொமினியன் பார்லிமெண்டுகள் இயற்றும் சட்டங்களுக்கு பிரிட்டிஷ் அரசரின் அனுமதி அவசியமன்றென்று குறிப்பிடப்பட்டது. டொமினியன் கவர்னர் ஜெனரலின் சம்மதமொன்றே போதுமானது. டொமினியன் உயர்தர நீதிமன்றங்களே அங்கு எழும் வழக்குகளை இறுதியாகத் தீர்க்கும் உரிமையைப்பெற்றன. அவைகளின் அனுமதியுடன் பிரிட்டிஷ் பிரிவி கௌன்சில் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்துகொள்ளலாம். இதை ரத்துச் செய்யும் அதிகாரம் டொமினியன் சட்ட சபைக்கு உண்டு. பிரிட்டிஷ் அரசின் அந்தஸ்தையும் வாரீசு பாத்தியத்தையும் நிர்ணயிக்கும் சட்டத்தை பிரிட்டிஷ் பார்லிமெண்டும், டொமினியன் பார்லிமெண்டுகளும் சேர்ந்தே இயற்றவேண்டும். ஆகவே, வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மகத்தான சாஸனம் என்றழைப்பது மிகையாகாது. ஆஸ்திரேலியா, கானடா, தென் ஆப்பிரிக்க ஐக்கிய நாடு, நியூஸிலாந்து, ஐரிஷ்பிரீஸ்டேட், இவைகள் அச்சட்டத்தால் பூரண சுதந்திர நாடுகளாயின. பிரிட்டிஷ் முடியரசே அவற்றைப் பிணைக்கும் பொற்சங்கிலியாகும். அவ்வரசின்பாலுள்ள பக்தியே அவற்றின் ஒற்றுமைக்குக் காரணமாகும். 1947 ஆகஸ்டில் இந்தியாவில் இரு டொமினியன் நாடுகள் அமைக்கப்பட்டன. ஒன்று, இந்தியா; பிறிதொன்று பாகிஸ்தான்.

**வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின் முக்கியத்துவம்:** ஒரு சுதந்திரநாட்டின் அந்தஸ்து அதன் அயல்நாட்டுக் கொள்

கையைப் பொறுத்திருக்கின்றது. அதனிஷ்டம்போல பிறநாடுகளுடன் போர் தொடுக்கவும் அதை நிறுத்தி சமாதானம் செய்யவும் அதற்குரிமையுண்டல்லவா ? அத்தகைய உரிமையை வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் டொமினியன்களுக்கு அளித்ததா, இல்லையா ? என்ற பிரச்னையை அரசியல் வாதிகள் எழுப்பினர். டொமினியன்கள் தங்களுடைய வெளிநாட்டுத் தொடர்பை இஷ்டம்போல அமைத்துக் கொள்ளலாமென்றும், பிரிட்டன் ஒரு தேசத்துடன் போரிலிறங்கினால் டொமினியன்களும் அத்தேசத்துடன் பிரிட்டனைப் பின்பற்றி போர் தொடுக்கவேண்டுமென்ற நிபந்தனை சட்டப்படி இல்லையென்றும் அநேகர் கருதினர். சிலர் அக்கொள்கையைத் தவறென்றும், பிரிட்டிஷ் மன்னர் பிரிட்டனுக்கு மட்டுமின்றி டொமினியன்களுக்கும் மன்னராகையால் அவருடைய எதிரி பிரிட்டனுக்கு மட்டுமல்லாது டொமினியன்களுக்கும் விரோதியே யென்றும் அதனால் டொமினியன்களும் போர் தொடுக்கவேண்டு மென்றும் கூறினர். பிரிட்டிஷ் முடியரசு பாதிக்க முடியாத ஒரு தனிப் பொருளாகும். ஆகவே, அரசர் ஏகாதிபத்தியத்தின் ஒரு பகுதியின் நலனை உத்தேசித்து அந்நிய நாடுகளுடன் போர் தொடுத்தால் அவ்வேகாதிபத்தியத்தின் பிற பகுதிகள் அவர் சார்பாக எதிரிகளுடன் போர்புரிய வேண்டுவது சட்டத்திற்குட்பட்டதே. இப்பிரச்னை சென்ற உலக மகா யுத்தத்தில் முடிவு செய்யப்பட்டது. பிரிட்டிஷ் பார்லிமென்டு ஜெர்மனியுடன் அரசரின் அனுமதியோடு யுத்தம் தொடுத்தது. ஒவ்வொரு டொமினியன் சட்ட சபையிலும், அயல்நாட்டுக் கொள்கையும் ஜெர்மனியுடன் யுத்தம் தொடங்கவேண்டியதின் அவசியமும் வாதிக்கப்பட்டன. கானடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து இம்மூன்று டொனியன்களிலும், ஜெர்மனியுடன் போர் உடனே தொடங்க வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டது. தென் ஆப்பிரிக்க ஐக்கிய நாட்டில் தளபதி ஹெர்ட்ஸாக் நடுநிலைமை வகிக்க வேண்டுமென்று சட்ட சபையில் கூறினர். ஆனால் தளபதி ஸ்மட்ஸ் போர் தொடுக்க வேண்டுமென்று

வாதித்தார். சட்டசபையில் சற்றுப் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் ஸ்மட்சுக்கு சாதகமாய் வாக்களித்தார்கள். தென் ஆப்பிரிக்கா பிரிட்டனுடன் சேர்ந்து போரிலிறங்கியது. ஆனல் ஹெர்ட்ஸாக் அன்று சட்டசபையில் வெற்றியடைந்திருப்பரேல் அந்நாடு நடுநிலைமையை வகித்திருப்பது திண்ணம். அவ்வாறு அது செய்யின் அதைச் சட்டப்படி குறைகூற முடியாது. ஏனெனில் எத்தகைய சட்டத்தையும் இயற்றும் உரிமையை வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் அதற்கு அளித்திருக்கின்றதல்லவா?

அயர்லாந்து சட்டசபையிலும், ஜெர்மனியுடன் போர் தொடங்க வேண்டியதின் அவசியம் வாதிக்கப்பட்டது. பெரும்பான்மையான அங்கத்தினர்கள் பிரதம மந்திரி டிவல்ராவுடன் சேர்ந்து நடுநிலைமை வகிக்கவேண்டுமெனத் தீர்மானித்தனர். அதனல் அயர்லாந்து நடுநிலைமை வகிக்க நேர்ந்தது. பிரிட்டன் அந்நடுநிலைமையை ஒப்புக்கொண்டது. ஆகவே, வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் டொமினியன் அந்தஸ்தைப் பெற்ற நாடுகள் தங்களுடைய அந்நிய நாட்டுத் தொடர்பைத் தங்களிஷ்டம்போல அமைத்துக் கொள்ளலா மென்பதை நிரூபிக்கின்றதல்லவா?

## III. டொமினியன் அந்தஸ்தின் தன்மை

சட்டம் இயற்றுவதில் டொமினியனின் சுதந்திரம் எத்தன்மையது என்பதை ஆராய்வோம். எத்தகைய சட்டங்களையும் இயற்றும் உரிமை டொமினியன் சட்டசபைக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. 1865-ல் பிறந்த குடியேற்ற நாட்டுச் சட்டப்படி அரசரின் அனுமதி பெற்ற பின்னரே குடியேற்ற நாட்டுச் சட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்ற வழக்கம் ரத்து செய்யப்பட்டது. டொமினியனில் அமுலிலிருக்கும் எத்தகைய சட்டத்தையும் ரத்துச் செய்யும் உரிமையை டொமினியன் சட்டசபை பெற்றது.

டொமினியன் கவர்னர் ஜெனரலை நியமிக்கவும், நீக்கவும் பிரிட்டிஷ் அரசருக்கு அதிகாரமிருக்கின்றது. ஆனல்

அவர் அவ்வதிகாரத்தை டொமினியன் மந்திரிகளின் சொற்படி உபயோகிப்பதால் டொமினியனின் சுதந்திரம் இவ்வதிகாரத்தால் பாதிக்கப்படவில்லை. டொமினியன் கவர்னர் ஜெனரல் சில சட்டங்களுக்கு அரசரின் அனுமதி பெற வேண்டுமென்று கருதக்கூடும். டொமினியன் மந்திரிகளின் அபிப்பிராயப்படியே அரசர் அனுமதியளிக்க வேண்டுமாகையால், அவ்வதிகாரமும் டொமினியன் சுதந்திரத்தைப் பாதிக்கவில்லை. டொமினியன்களிலிருந்து பிரிவி கௌன்சில் நீதிமன்றத்திற்கு முக்கியமான தகராறுகளில் அப்பீல் செய்யலாம். ஆனால் அத்தகைய அதிகாரத்தை ரத்துச் செய்யும் உரிமை டொமினியன் சட்டசபைக்கு இருப்பதால், அதுவும் டொமினியன் சுதந்திரத்தைப் பாதிக்கவில்லை. கானடா, கிரிமினல் கேஸ்களில் பிரிவு கௌன்சிலுக்கு அப்பீல் செய்யும் உரிமையை ரத்துச் செய்துவிட்டது. ஐரிஷ் பிரிஸ்டேட்டின் அரசியல் சட்டங்களை ஆராயின் டொமினியன்களுக்கு எத்தகைய சுதந்திரத்தை வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் அளித்ததென்பது விளங்கும். 1937-ல் ஐரிஷ் சட்டசபை 1921-ல் ஏற்பட்ட அரசியற் திட்டத்தை அடியோடு திருத்தி அமைத்தது. பிரிஸ்டேட்டின் பெயர் **ஏரா** என்று மாற்றப்பட்டது. பிரிட்டிஷ் முடியரசைப் பற்றி புது திட்டத்தில் ஒன்றும் கூறப்படவில்லை. கவர்னர் ஜெனரலின் பெயர் தலைவரென மாற்றப்பட்டது. அவரை நியமிக்கும் உரிமை பிரிட்டிஷ் அரசரிடமிருந்து எடுக்கப்பட்டு ஐரிஷ் மக்களுக்கு அளிக்கப்பட்டது. புது அரசியற் திட்டத்தைக் குடியரசெனலாம். ஆனால் அதற்குப் அப்பெயர் கொடுக்கப்படவில்லை. பிறிதொரு சட்டத்தால் அயல்நாடுகளுடன் ஏரா நாடு தொடர்பு வைத்துக்கொள்ள பிரிட்டிஷ் முடியரசை ஒரு கருவியாக அது வைத்திருக்கின்றது.

டொமினியன் அந்தஸ்தைப் பூரண சுதந்திரமெனக் கொண்டால், டொமினியனுக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைவிட்டுத் தன்னிச்சைப்படி பிரிந்து போகும் உரிமை உண்டு அல்லவா? அமெரிக்க குடியேற்ற நாடுகளை பிரிட்

டன் தன் ஏகாதிபத்தியத்தை விட்டுப் பிரிந்து போகாது தடுக்க யுத்தம் புரிந்ததல்லவா? அவ்வண்ணம் இன்று பிரிந்து போக ஆசைப்படும் எந்த டொமினியனோடும், பிரிட்டன் போரிலிறங்காது என்பது உண்மையே. ஆனால் சட்டப்படி அவ்வுரிமை டொமினியன்களுக்கு இருக்கின்றதா என்பதைச் சற்று கவனிப்போம். அங்ஙனம் இல்லை என்றே கூறலாம். ஏனெனில் பிரிட்டிஷ் முடியரசின் பட்டத்தையும், கௌரவத்தையும் பாதிக்கக்கூடிய சட்டத்தை பிரிட்டிஷ் பார்லிமெண்டும், டொமினியன் பார்லிமெண்டுகளும், நன்கு பரிசீலனை செய்தே இயற்ற வேண்டும். தனிப்பட ஒரு நாடு அதைச் செய்தால் அதன் செய்கை வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்திற்கு விரோதமாகும். பிரிய வேண்டுமெனக் கருதினால் சட்டசபைகளெல்லாம் சேர்ந்தே பிரிவினைச் சட்டத்தைப் பிறப்பிக்க வேண்டும். இல்லையேல் அது செல்லாது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உயர்ந்த குறிக்கோள்களினாலும், பரந்த நோக்கங்களினாலும் நிலைபெற்றிருக்கின்றதே தவிர, மிருக பலத்தின் உதவியால் மட்டும் அது நிற்கவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பொதுநல அரசாக உருவானதற்கு முக்கிய காரணம் கானடா, ஆஸ்திரேலியா, இந்தியா முதலிய நாடுகளிற் தோன்றிய தேசிய உணர்ச்சியேயாகும். பிரிட்டன் அவ்வுணர்ச்சியை நன்கு மதித்ததினால் அதன் ஏகாதிபத்தியம் **தேசிய நாடுகளடங்கிய பொதுநல அரசாக** வளர்ந்துற்றிருக்கின்றது. காலஞ் செல்லச் செல்ல இதர ஏகாதிபத்தியப் பகுதிகளும் தேசிய உணர்ச்சி பெற்று டொமினியனந்தஸ்தைப் பெறுமெனக் கூறலாம்.

## IV. துருக்கி

தேசிய உணர்ச்சியை பொருட்படுத்தாத துருக்கி ஏகாதிபத்தியம், சென்ற நூற்றாண்டில் சீர்குலைந்து மங்கி மறைந்தது. துருக்கி சுல்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பால்கன் பிரதேசங்களை ஆட்சி புரிந்து வந்தார். பால்கன் மக்கள், தேசிய உணர்ச்சி

பெற்று, தங்களை சுல்தானின் ஆட்சியிலிருந்து விடுவிக்க முயன்றனர். 1820-க்குள் துருக்கி மாகாணங்களாகிய செர்பியாவும், மாண்டினிக்ரோவும் சுயஆட்சியை யடைந்தன. பின்னர் கிரேக்கர் சுதந்திரப் போர் ஒன்றைப் புரிந்து, 1829-ல் சுல்தானின் ஆட்சியிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டனர். 19-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ருமேனியா, செர்பியா, மாண்டிநிக்ரோ இம்மூன்றும், பூரண சுதந்திரமடைந்தன. பல்கேரியா சுல்தானின் கீழ் முதலில் சுயாட்சி பெற்று, பின்னர், பூரண சுதந்திரம் அடைந்தது. தேசிய உணர்ச்சியின் வளர்ச்சியாலும், ரஷ்யச் சக்கரவர்த்தினியின் ஆதரவினுலும் பால்கன் மக்கள் சுதந்திரம் பெற்றனர். துருக்கி சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றது.

## V. சாம்ராஜ்யங்களின் அழிவும் தேசியக் குடி அரசுகளும்

1914-ல் மூண்ட உலக மகா யுத்தத்தின்பயனுக ஆஸ்திரிய சாம்ராஜ்யமும், ரஷ்ய சாம்ராஜ்யமும் அழிவுற்றன. ஆஸ்திரியச் சக்கரவர்த்தியால் ஆட்சி புரியப்பட்ட பிரதேசங்கள் ஹங்கேரி, ஸெக்கோஸ்லோவாக்கியா, யூகோஸ்லாவியா, ஆஸ்திரியா என்னும் நான்கு தேசிய அரசுகளாக அமைக்கப்பட்டன. ரஷ்ய சாம்ராஜ்யத்திலிருந்து, பின்லந்து, எஸ்டோனியா, லட்வியா, லித்துவேனியா முதலிய தேசீயீ நாடுகள் எழுந்தன. தேசிய உணர்ச்சியின் வளர்ச்சியே இவ்விரு ஏகாதிபத்தியங்களின் அழிவிற்கு முக்கிய காரணமாகும்.

ஸ்பானிஷ் ஏகாதிபத்தியம் பதினும் நூற்றுண்டில் தென் அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்டது. வெனிசுலா, கொலம்பியா, ஈக்வேடர், பெரு, அர்ஜெண்டினு, சிலி முதலிய நாடுகள் பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் தாய்நாட்டிற் கெதிராகக் கிளர்ச்சி செய்து சுதந்திரமடைந்தன. வட அமெரிக்காவில் ஆங்கிலக் குடியேற்றங்கள் இங்கிலாந்துடன் போர் புரிந்து குடியரசை பதினெட்டாவது நூற்றுண்டி னிறுதியில் அமைத்துக்கொண்ட தீரச்செயல் ஸ்பானிஷ் குடியேற்றங்களின் கிளர்ச்சிக்கு ஒரு

காரணமாகும். மேலும் பிரெஞ்சு புரட்சியின் குறிக்கோள்களும், நெப்போலிய சக்கரவர்த்தியினது ஆக்ரமிப்பால் ஸ்பெயின் அடைந்த சீர்கேடும் ஸ்பானிய அமெரிக்கர்களுக்கு மிகவும் துணைபுரிந்தன. போலிவர் போன்ற ஸ்பானிஷ் அமெரிக்க தேசாபிமானிகள் பிரெஞ்சு புரட்சியில் கலந்து ஜனநாயகம், குடியரசு முதலிய கொள்கைகளை தென் அமெரிக்காவில் நிலைநாட்ட ஆர்வங் கொண்டனர். 1819-ல் வெனிசுலா, கொலம்பியா, ஈக்வேடார் முதலிய ஸ்பானிஷ் குடியேற்றங்கள் குடியரசாயின. ஸ்பானியத் துருப்புகள் முறியடிக்கப்பட்டன. 1824-ல் பெரு, சிலி, அர்ஜென்டினு முதலிய நாடுகள், போலிவர், ஜான்மார்ட்டின் முதலிய தளபதிகளின் வீரச்செயல்களினுல் குடியரசாயின. போர்ச்சுகீஸியரின் ஆதிக்கத்திற் குட்பட்ட பிரேசில் தேசமும் விடுதலை பெற்றது. லாட்டின், அமெரிக்கன் குடியரசுகள் தேசீய உணர்ச்சியினுல் மட்டுமே விடுதலை பெற்றதெனக் கூறுவது சரியன்று. தலைவர்களின் தூண்டுதலும், தாய்நாட்டின் சீர்கேடும் மிக்க துணைபுரிந்தது உண்மையே. ஆனுல் தேசீய உணர்ச்சி மக்களிடையில் எழவில்லை என்று கூறுவதும் சரியன்று. அவ்வுணர்ச்சியின் விளைவாகவே அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனுதிபதியான மன்ரூே ஐரோப்பிய மக்கள், அமெரிக்க விவகாரங்களில் தலையிடக்கூடாதென்று தனது கொள்கையைப் பிரகடனம் செய்தார். பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரியான கானிங்கு, தென் அமெரிக்க குடியரசுகளின் சுதந்திரத்தை, தேசியத்தைப் பொருட்படுத்தி அங்கீகரித்தார். இவ்வாறு தேசீய உணர்ச்சி ஏகாதிபத்தியங்களை பத்தொன்பதாவது நூற்ருண்டிலிருந்து சிதைவுறும்படிச் செய்தது.

தேசீய உணர்ச்சி பெற்ற ஒரு நாட்டு மக்கள், தங்களை அந்நியரின் அடிமைத் தளைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதுபோல தீவிர தேசீய உணர்ச்சி பெற்ற ஒரு நாட்டினர் அண்மையிலுள்ள பிரதேசங்களை ஜெயித்துத் தங்களுடைய ஏகாதிபத்தியத்தை நிறுவ முயற்சிக்கின்ற

னர். ஜப்பான் மஞ்சூரியாவை வென்றதும், இத்தாலி அபிஸீனியா, அல்பேனியா முதலிய நாடுகளைக் கைப் பற்றியதும், தீவிர தேசீய உணர்ச்சியின் விளைவேயாகும். இடைக்காலத்தில் ஆங்கிலேயர் முதன்முதலாக தேசீய உணர்ச்சியைப் பெற்றவுடன் அண்மையிலிருக்கும் பிரெஞ்சு மக்களுடன் நூற்றாண்டுப் போரைத் தொடுத்து பிரான்சில் தங்களது ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க முயன்றனர் அன்றோ? **ஜோன் ஆப் ஆர்க்** என்னும் பிரெஞ்சு வீர வனிதை தன் நாட்டினரின் தேசீய உணர்ச்சியை எழுப் பவே ஆங்கிலேயர் அத்தேசத்திலிருந்து பின்வாங்க நேரிட் டது. ஆகவே, தேசீய உணர்ச்சி ஏகாதிபத்தியத்தை சிதை வுறச் செய்யும் தன்மையுடையது. ஆனால் தீவிர தேசீய உணர்ச்சி ஒரு நாட்டு மக்களை ஏகாதிபத்திய மோகத்தில் ஈடுபடச் செய்யும் தன்மை வாய்ந்தது. தேசீய உணர்ச்சி மக்களிடையில் சுதந்திர தாகத்தை மூட்டும் தன்மை யுடையதெனின் தேசீயத்தை அடிப்படையாகக் கொண்டு உலகின்கண் அரசுகளைத் திருத்தி அமைக்கக்கூடுமா வென் றும், அவ்வாறு அமைத்திடின் உலக மக்கள் நாகரீகத்தில் முன்னேற்ற மடைவார்களா என்றும் அடுத்த அத்தியா யத்தில் ஆராய்வோம்.

---

# அத்தியாயம் 5

# அரசும் தேசீய உணர்ச்சியும்

## I. அரசு அமைப்பும் தேசீயமும்

முன் அத்தியாயங்களில் தேசீயம் எவ்வாறு ஐரோப் பிய மக்களிடையில் தோன்றி உலகம் முழுவதும் பரவிற் றென்பதைப் பார்த்தோம். இவ்வத்தியாயத்தில் உலக அரசுகளைத் தேசீயத்தை அடிப்படையாகக் கொண்டு அமைப்பது சாத்தியமா என்றும் அவ்வாறு அமைப்பின் மக்கள் பயனுறுவரா என்றும், ஓர் அரசின்கீழ் வாழும் சிறுபான்மை இனத்தோரின் உரிமைகள் என்ன என்றும்

ஆராய்வோம். ஜான் ஸ்டுவேர்ட் மில் என்னும் ஆங்கில அரசியல் அறிஞர் "பிரதிநிதித்துவ அரசியல்" என்னும் தமது நூலில் (Representative Government) சுதந்திர ஸ்தாபனங்கள் செழிப்புற்று வளர்ச்சியடைய வேண்டுமெனின் தேசீய உணர்ச்சி பெற்ற ஒவ்வொரு கூட்ட மக்களுக்கும் ஒரு தனி அரசு அமைக்கப்பட வேண்டுமென்று கூறுகின்றார். அவ்வாறு அரசு அமைக்கப்பெறின் சுதந்திர ஸ்தாபனங்கள் அந்நாட்டில் நிரந்தரமாக நிலைபெற்றிருக்குமென்றும், பல இனத்தவர் வாழும் ஒரு நாட்டில் அத்தகைய ஸ்தாபனங்கள் தலை சிறந்து விளங்குவது அரிதென்றும் கூறுகின்றார். பிலண்ட்ஷிலி என்னும் ஜெர்மானிய அரசியல் நூலாசிரியர் பல இனங்கள் சேர்ந்து வாழும் அரசே மக்களுக்கு நன்மை பயக்கும் என்றும், அது உலக நாகரீகத்தை முன்னேற்றமடையச் செய்யும் என்றும் கூறுகின்றார். தலை சிறந்த ஆங்கிலேய வரலாற்று ஆசிரியரான ஆக்டன் பிரபு தேசீயத்தைக் கடுமையாகக் கண்டித்து அது சமதர்மக் கொள்கையைவிட அர்த்தமற்றது என்று அறைகின்றார். பேரறிஞர்களான ஜே. எஸ். மில், பிலண்ட்ஷிலி, ஆக்டன் பிரபு முதலானோர் இத்தகைய முரண்பட்ட கொள்கைகளை வெளியிட்டிருக்கும்பொழுது அவைகளில் எம்மட்டும் உண்மை பதிந்து கிடக்கின்றது என்பதை ஆராய்வோம்.

அறிஞர் மில்லின் கூற்றுப்படி தேசீயத்தை அடிப்படையாகக்கொண்டு இற்றைய உலகை அமைத்திடின் முதற்கண் பற்பல அரசுகள் எழுவது திண்ணம். அவைகள் யாவும் மிகச் சிறியனவாயும், வலுவற்றதாயும் இருக்கும் என்பதற்கு ஐயமில்லை. இரண்டாவதாக, அவைகள் ஒவ்வொன்றும் தங்களது பலத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் இராணுவத்தையும், வர்த்தகத்தையும், கல்வியையும் தேசீய முறையில் அமைப்பதில் ஈடுபடும். மூன்றாவதாக, ஒவ்வொரு தேசீய நாடும் தனது ஆற்றலையும், நலனையும் பெருக்குவதைக் குறிக்கோள் எனக் கொள்ளின் மக்களிடையில் அமைதி நிலவுவது அரிதாகும். நான்காவதாக,

ஒரு தேசிய அரசு பிறநாட்டுச் சரக்குகளை நாட்டிற்குள் வர விடாது இறக்குமதி வரிகளை அதிகமாய் விதித்து மக்களின் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதில் கண்ணும் கருத்துமாய் இருக்கும். அத்தகைய முறையினால் உலக வர்த்தகம் மந்தமடையும். அதனால் பல நாடுகளிலும் மக்கள் வேலையில்லாது திண்டாடுவர். ஐந்தாவதாக, தேசிய அரசொன்று தனது இராணுவத்தைப் பெருக்குவதனால் காலக்கிரமத்தில் அதற்கு இராணுவச் செருக்கு ஏற்படுவது இயல்பே. பிறநாடுகளைத் தேசிய உணர்ச்சி பெற்ற ஜப்பானும், ஜெர்மனியும், இத்தாலியும் ஆக்ரமித்தது போல இராணுவச் செருக்குற்ற தேசிய நாடு அண்மையிலுள்ளவர்களுடன் போரில் இறங்கும். தேசியம் இவ்வாறு தீங்கு இழைக்கும் தன்மையதாகையால் அக்கொள்கையைப் பின்பற்றி அரசை அமைப்பது ஆபத்திற்கிடமாகும் என்பது திண்ணம்.

ஆக்டன் பிரபு, பிலண்ட்ஷிலி முதலியோரின் கொள்கைக்கு ஆதாரமாக ஆஸ்திரியாச் சக்கரவர்த்தி இரண்டாம் பிரான்சிஸ் பிரெஞ்சுத் தூதரிடம் கூறியதைக் கொள்ளலாம். அக்கூற்று என்னவெனில், பிரான்சில் தொத்து நோய் பரவினால் அந்நோய் மக்கள் அனைவரையும் பாதிக்கும். ஏன் எனில் அவர்கள் அனைவரும் ஒரே இனத்தைச் சார்ந்தவர். ஆனால் தமது சாம்ராஜ்யத்தில் பல இனத்தவர் வாழ்வதின் விளைவாய் அவர்களிடையில் ஒற்றுமை உணர்ச்சி தோன்றவில்லை. ஒரு இனத்திற்கும், மற்றொரு இனத்திற்கும் சிநேக மனப்பான்மைக்குப் பதிலாக வெறுப்பு வேரூன்றி இருப்பதால் பொது அமைதி நிலவுகின்றது. மேலும் மக்கள் கூட்டமாக வாழ்ந்து நாகரீகத்தில் முன்னேறுவதுபோல பல இனத்தவர் ஒன்றுசேர்ந்து ஓர் அரசின் கீழ் வாழ்வரெனின் நாகரீகம் மென்மேலும் வளர்ச்சியடையும். அவ்வாறு வாழும் இனங்களில் சிற்சில இனங்கள் புத்தி நுட்பமும், அமைப்பு ஆற்றலும், சாமர்த்தியமுமற்று இருக்கக்கூடும். அவை இதர இனங்களின் சேர்க்கையினால் நாகரீகத்திலும், அறிவிலும் வளர்ச்சி

பெறக்கூடும். மங்கி மறைந்து போகும் நிலைமையிலிருக்கும் இனங்கள் அவ்விதச் சேர்க்கையினால் வலுவுறக்கூடும். தங்களைத் தாங்களே பரிபாலித்துக்கொள்ளச் சக்தியற்றிருக்கும் இனங்கள் அத்தகைய சேர்க்கையினால் அரசியலில் அனுபவம் அடைய ஏதுவிருக்கின்றது. ஆக்டன் பிரபு கூறுவதைப்போல அரசு என்னும் பரந்த பாத்திரத்தில் பல இனங்கள் இருந்திடின் அறிவும் ஆற்றலும் உடைய இனங்களின் சேர்க்கையால் இதர இனங்கள் முன்னேறும் என்பது திண்ணம். உலக வரலாற்றில் முன்னேற்றம் அடைந்த இனங்களின் சரித்திரத்தைப் பரிசீலனை செய்யுங்கால் அவ்வினங்களெல்லாம் பல இனங்களின் கலப்பினால் ஏற்பட்டவைகள் என்பது விளங்கும். ஸ்விஸ் மக்களும், பிரிட்டிஷ் மக்களும், அமெரிக்க ஐக்கிய நாட்டினரும், புராதன ரோமாபுரி மக்களும், கலப்பு இனத்தைச் சார்ந்தவரன்றோ? இனங்களின் சேர்க்கையால் மேற்குறிப்பிட்ட நன்மைகள் உளதெனினும், ஆக்டன் பிரபு அவைகளை ஒருதலைப் பட்சமாய்க் கூறுகின்றார் என்பதை மறுக்க முடியாது.

ஒரு சாம்ராஜ்யத்தின் கீழ் தேசிய உணர்ச்சி பெற்ற இனமொன்று பலவந்தமாக வாழ நேரிடின், ஆக்டன் பிரபு குறிப்பிட்டிருக்கும் நன்மைகள் விளைவது அரிது. அமைதியற்று, நாகரீகம் குன்றி இரு இனங்களும் கேடுறும் என்பதில் ஐயமில்லை.

பொது மக்களில் பெரும்பான்மையோர் பிரிந்து வாழ ஆர்வமுற்றிடின் அவர்களை அவ்வாறு வாழுமாறு அனுமதிப்பதே அவர்களுடைய அரசுக்கு ஏற்ற முறையாகும். ஐரிஷ் மக்கள், போலந்து மக்கள், ஸெக் மக்கள், தென் ஸ்லாவ்கள், பால்கன் வாசிகள் முதலானோர் தாங்கள் வாழ நேர்ந்த சாம்ராஜ்யங்களிலிருந்து பிரிவுற்றதினால் மானிடவர்க்கமே பயன் பெற்றதெனக் கூறலாகும். 1947 ஆகஸ்டு 15ம் தேதியில் பிரிட்டிஷ் அரசு இந்திய மக்களுக்கும், பாகிஸ்தான் மக்களுக்கும் சுதந்திரம் வழங்கி நாட்டை விட்டகன்றது மிகவும் நன்றே. இந்தியத்

தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் ஒத்துழைத்து முஸ்லிம் மக்களின் மதத்தையும் நாகரீகத்தையும் பாதுகாப்பதற்காகப் பாகிஸ்தான் என்னும் தனி நாடொன்றை அமைத்தது சாலவும் நன்றே. முஸ்லிம்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களை இந்துக்களுடன் கூடிவாழப் பலவந்தப் படுத்துவதினால் இருதரத்தாரும் நன்மையுறார் என்பது திண்ணம். தேசிய உணர்ச்சி பெற்ற இனத்தவர், ஒரு நாட்டில் பெரும் கூட்டமாயிருப்பரேனின் ஆக்டன் பிரபுவின் கொள்கையைப் புறக்கணித்து அறிஞர் மில்லின் கொள்கைப்படி அவர்களுக்குச் சுதந்திரம் வழங்குவது முறையாகும். ஆனால் அத்தகைய இனத்தவர் மொத்த ஜனத்தொகையில் மிகவும் குறைவாக இருந்திடின் அவர்களுக்குச் சுதந்திரம் அளிப்பது அபாயத்திற்கிடமாகும். அவர்கள் விஷயத்தில் மில்லின் கொள்கையை அங்கீகரிப்பதால் அவர்களும் நன்மையுறார்; உலகமக்களும் நலனுறார் என்பது திண்ணம். ஆகவே, எண்ணிக்கையில் குறைந்த இனத்தவர் தேசிய உணர்ச்சியை அடைந்திடினும் அவர்கள் பழைய அரசின்கீழ் வாழ்வதே நன்று.

## II. அரசும் சிறுபான்மை இனங்களும்

பாதுகாப்பு: ஓர் அரசின் கீழ் வாழும் சிறுபான்மை இனத்தோரின் உரிமைகள் யாவை? பெரும்பான்மையினத்தவரால் நடத்தப்படும் அவ்வரசு அவ்வுரிமைகளை எம்மட்டும் பொருட்படுத்த வேண்டும்? அவைகளை மதிக்காது புறக்கணிப்பது முறைதானே? என்ற இத்தகைய பிரச்னைகள் எழுவது இயல்பே. ஜெர்மானிய வரலாற்று ஆசிரியராகிய டிரியஸ்கி என்பவர் பெரும்பான்மை இனத்தவர் தங்களது மொழியையும், பழக்க வழக்கங்களையும், நாகரீகத்தையும் சிறுபான்மை இனங்களின்மீது சுமத்துவது முறையென்கின்றார். ஏன் எனில் ஆற்றலற்ற சிறுபான்மை இனத்தவர் பெரும்பான்மை மக்களுடைய சக்தியையும், புத்தி நுட்பத்தையும் அரசியல் சேர்க்கையால் அடையக்கூடுமெனக் கருதுகின்றனர். சிறுபான்மை இனத்

தவர் ஜனத்தொகையில் மிகவும் குறைந்திருந்தா ரெனின் அவர்கள் ஒரு வேளை பெரும்பான்மை யினத்தவரோடு சேரக்கூடும். ஆனால் ஜனத்தொகையில் அவர்கள் அதிகமாக இருந்தனரெனின் அரசாளும் இனத்தவருடன் ஒற்றுமைப் படுவார்கள் என்று கருத ஏதுவில்லை. அவர்கள் தங்களு டைய பழக்க வழக்கங்களையும், மொழியையும் மிக்க பிடி வாதத்துடன் வளர்த்து வேற்றுமையை அதிகரிப்பார்களே யன்றி ஒன்று சேர்ந்து வாழச் சிறிதும் இசையார்கள். சிறு பான்மை யினத்தவர் தங்களது உயிருக்கும் பொருளுக்கும் தக்க பாதுகாப்பைப் பொது அரசிடம் எதிர்பார்க்கும் உரிமையை அறிஞர்களனைவரும் ஆமோதிப்பார்கள். அதி கார வர்க்கத்தினர் அவ்வினத்தவரை நசுக்கி அவர்களை வாழவிடாது துரத்துவது அநீதியாகும். சிறுபான்மை யினத்தவருக்குப் பாதுகாப்பளிப்பது அரசின் முதற் கடமையாகும்.

**மொழி உரிமை:** சிறுபான்மை இனத்தோரின் மிக முக்கியமான உரிமை தங்களது மொழியை வளர்ப்பதா கும். ஏனெனில் மொழியைப் போல ஒரு கூட்ட மக்களை ஒன்று சேர்த்துப் பிணைக்கும் சங்கிலி யாதொன்றுமில்லை. தங்களுடைய மொழியை உபயோகிக்கவும், அதைத் தங்க ளுடைய குழந்தைகளுக்குக் கற்பிக்கவும், அதில் இலங்கியங் களை ஆக்கவும் அவர்களுக்கு உரிய உரிமையை அரசு புறக் கணிப்பது தகுதியன்று. ஆனால் அவ்வரசு சிறுபான்மை யினத்தோரின் மொழியைத் தான் வழங்கும் மொழிக்குச் சரிசமமாக மதிக்கவேண்டும் என்று கூறுவது தகுதியன்று. சட்டசபையிலும், நீதிமன்றங்களிலும், நிர்வாகத்திலும், இராணுவத்திலும் அரசாளும் இனத்தவரின் மொழி உப யோகப்படுத்தப்படுவது இயல்பே. வெல்ஷ் மக்களும், பிரிட்டானிய மக்களும் முறையே பிரிட்டிஷ் பார்லிமென் டிலும், பிரெஞ்சு பார்லிமென்டிலும் தங்களுடைய மொழி கள் உபயோகப்படுத்த வேண்டுமென்று வாதிப்பது தகுதி யாகுமோ? ஆகாது. ஏனெனில் அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். ஸ்விட்ஸர்லாந்தில் பிரெஞ்சு, ஜெர்மன்,

இத்தாலியன் மொழிகள் அரசாங்க விஷயங்களிலெல்லாம் சமமாக உபயோகப்படுத்தப்படுகின்றன. காரணம், பிரெஞ்சு மக்களின் எண்ணிக்கையும், இத்தாலிய இனத்தோரின் தொகையும் மொத்த ஜனத்தொகையில் ஏறக்குறைய முப்பது சதவிகிதமாயுள்ளன. எஞ்சிய எழுபது சதவிகித மக்கள் ஜெர்மன் மொழியை உபயோகிக்கின்றனர். ஆனால், உலகில் இத்தகைய தாராள மனப்பான்மையை அநேக அரசுகளிடம் காண்பதரிது. சென்ற நூற்றுண்டினிறுதில் ஜெர்மன் அரசு பிரான்ஸ், போலந்து, டென்மார்க் முதலிய நாடுகளிலிருந்து பலவந்தமாய்க் கைப்பற்றிக் கொண்ட அல்சேஸ், லொரைன், ஷீலஸ்விக், போலிஷ் பகுதி முதலிய பிரதேசங்களில் பிரெஞ்சு, டானிஷ், போலிஷ் மொழிகளை மக்கள் உபயோகிக்கக் கூடாதென்றும், தெருப் பெயர், கடை விலாசம், சமாதிக் கல்லெழுத்துக்கள் முதலியவைகள் ஜெர்மன் மொழியில் ஆக்கப்பட வேண்டுமென்றும், பொதுக் கூட்டங்களிலும், பள்ளிகூடங்களிலும், ஆலயங்களிலும் ஜெர்மன் மொழியை மக்கள் உபயோகப்படுத்த வேண்டுமென்றும், தேசிய கீதங்களைக்கூட தாய்மொழியில் பாடக் கூடாதென்றும் அதிகார வர்க்கத்தினர் கட்டளையிட்டனர். அவர்களுடைய நோக்கம், அப்பிரதேச மக்களை ஜெர்மானியர்களாக்குவதே யாகும். பெல்ஜியத்தில் அரசாங்க மொழி, பிரெஞ்சு மொழியாகும். ஆனால் பிளீமிஷ் மக்கள் பழங்கால டச்சு மொழியை அரசு உபயோகப்படுத்த வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். ஜென்ட் சர்வகலாசாலையில் பிளீமிஷ் மொழியை உபயோகப்படுத்தவேண்டுமென்றும், சர்க்கார் நடவடிக்கைகள் அனைத்தும் அம்மொழியில் இருக்கவேண்டுமென்றும் கோரினர். அதிகார வர்க்கத்தினர் அம்மொழி உபயோகப்படுத்தப் பெறின் இதர ஐரோப்பிய மக்களுடன் நெருங்கிப் பழக முடியாதென்று வாதித்தனர். பிளீமிஷ் மொழி, பிரெஞ்சு மொழியைப் போல சரிசமமாகச் சட்டப்படி பாவிக்கப்பட்டிருக்கின்றதெனினும், அதிகாரவர்க்கத்தினர் பெரும்பாலும் பிரெஞ்சு மொழியையே உபயோகித்து வருகின்றனர்.

நம் தேசத்தில் இன்று சுமார் 180 மொழிகள் வழங்கப்படுகின்றன. நாட்டுத் தலைவர்கள் ஹிந்தியைப் பொது மொழியாக்க வேண்டுகின்றனர். இந்திய டொமினியனில் வாழும் முப்பது கோடி மக்களில் ஏறக்குறைய பன்னிரண்டு கோடி மக்கள் அம்மொழியை உபயோகிக்கின்றனர். தமிழ், தெலுங்கு, மலையாளம், மராத்தி, வங்காளி, பஞ்சாபி, குஜராத்தி முதலிய மொழிகளை ஒன்று இரண்டு அல்லது மூன்று கோடி மக்களே தனித்தனியாக வழங்குகின்றனர். ஆங்கிலத்தை ஏறக்குறைய அரைக் கோடி மக்கள் உபயோகிக்கின்றனர். ஆகவே, ஒவ்வொரு இனத்தவருக்குரிய தாய் மொழியையும், இந்திய அரசியல் வியவகாரங்களுக்கு ஹிந்தி மொழியையும், உலக வியவகாரங்களை அறிந்துகொள்ள ஆங்கிலத்தையும் இந்திய மக்கள் கற்பது தகுதியாகும். இலக்கியம், விஞ்ஞானம் முதலியவைகளுக்குப் பொருந்தாத மொழியையும், மிகவும் குறைந்த கூட்டத்தினர் உபயோகப்படுத்தும் மொழியையும் உலக வியவகாரங்களைத் தெரிந்து கொள்ளப் பயன்படாத மொழியையும் ஓர் அரசு தன் மொழிக்குச் சரி சமமாக மதிக்க வேண்டுமென்று கூறுவது தகுதியன்று. ஜனத்தொகை அதிகமாயிருக்கும் இனத்தவரின் மொழியைப் புறக்கணிப்பதும் தகுதியன்று. அம்மொழியை அம்மக்கள் வளர்ப்பதை அரசு தடை செய்வதும் நீதியன்று.

**சட்டங்களும் பழக்கவழக்கங்களும்:** மானிட வர்க்கத்தினரின் ஒழுக்கத்திற்கும், அரசின் கொள்கைக்கும் முரண்படாதிருக்கும் பழக்க வழக்கங்களை சிறுபான்மையினத்தவர் பின்பற்ற அவர்களுக்கு உரிமை யுண்டு. நம் தேசத்தில் சில மக்களிடம் கொடுமையான **சதி** என்னும் வழக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. ஆங்கில அரசு ஒழுக்கத்தின் பெயரால் அதை நிறுத்தியது. விதவைகளை அவர்கள் மணாளர்களின் பிணங்களோடு சேர்த்துக் கொளுத்தும் அக்கெட்ட வழக்கம் சட்டத்திற்கு முரண்பட்டதென்று அறிவிக்கப்பட்டது. அவ்வாறே சிசுவதை நிறுத்தப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன் சாரதா சட்டப்படி

பால்ய விவாகம் தடை செய்யப்பட்டது. ஸ்காத்லாந்தில் ஹைலந்து மக்கள் தங்கள் இன உடையை அணியக்கூடாது என்று தடுக்கப்பட்டனர். அரசு அவ்வாறு செய்தது பொது அமைதியைக் கருதியே. ஆனால் நாட்டுச் சட்டங்களுக்கு எதிராக சிறுபான்மையினத்தவர் அவர்களுடைய இனச் சட்டங்களை அனுஷ்டிப்பது முறையன்று. நேர்மைக்கு முரண்படாத பழக்கவழக்கங்களை சிறுபான்மையினத்தவர் அனுஷ்டிப்பதை அவ்வினத்தவர் வாழும் அரசு அங்கீகரிப்பது மிகவும் பொருத்தமாகும். தென் ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் சட்டத்துடன் டச்சு சட்டத்தையும், கானடாவில் பிரிட்டிஷ் சட்டத்தோடு பிரெஞ்சு சட்டத்தையும் சிறுபான்மையினத்தவரின் பொருட்டு பிரிட்டிஷ் அரசு அங்கீகரித்தது மிகவும் நன்றே.

முதலாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் தேசியத்தை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப் பெற்ற பல புதிய அரசுகளின் கீழ் பற்பல சிறுபான்மை இனத்தவர் வாழநேர்ந்தது. யூகோஸ்லேவியாவில் நாலில் ஒரு பங்கு மக்கள் அந்நியர். ருமேனியாவில் இதர இனத்தவர்களின் தொகை மூன்றில் ஒரு பங்கு. ஸெக்கோஸ்லோவாக்கியாவிலும், போலந்திலும், ஏறக்குறைய பேர்பாதி மக்கள் அந்நியர்கள். இனம், மதம், மொழி, பழக்க வழக்கங்கள் முதலியவைகளில் சிறுபான்மை யினத்தவர் பொது மக்களிலிருந்து வேறுபட்டிருந்தமையால் சர்வதேச சங்கம் சிறுபான்மை யினத்தோரின் நலனைப் பேணும் கருத்துடன், ஆஸ்திரியா, பல்கேரியா, ஹங்கேரி, துருக்கி முதலிய நாடுகளுடன் சில உடன்படிக்கைகளைச் செய்தது. அவ் வுடன்படிக்கைகளின் சாராம்சமாவது :—1. ஓர் அரசின் கீழ் வாழும் குடிகள் அனைவரும் பிறப்பு, இனம், மொழி, மதம் முதலியவைகளைப் பொருட்படுத்தாது சம உரிமைகளை அனுபவித்தல். 2. சட்ட சமத்வமும், அரசியல் சமத்வமும் உடையவர்களாக இருத்தல். 3. பொதுக் கூட்டங்களிலும், தெய்வ வழிபாடுகளிலும், சமுதாயம், வர்த்தகம் முதலியவைகளிலும், சிறுபான்மை யினத்தவர்

தங்களுடைய தாய் மொழியைத் தடையின்றி உபயோகப் படுத்துதல். 4. தர்ம ஸ்தாபனங்கள், கல்வி நிலையங்கள், ஆலயங்கள் முதலியவைகளைத் தங்களுடைய சொந்தச் செலவில் அமைத்துக்கொள்ளுதல். 5. சிறுபான்மை யினத்தவர் ஜனத்தொகையில் அதிகமாயிருக்கும் பிர தேசங்களிலுள்ள சர்க்கார் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் தங்களுடைய மொழியை உபயோகப்படுத்துதலும், சர்க் கார் அளிக்கும் உதவித் தொகையில் நியாயமான பங்கைப் பெறுதலும். சர்வ தேச சங்கத்தின் அங்கத்தினர் ஒருவர் மேற்கூறப்பட்ட உரிமைகளை சிறுபான்மை யினத்தவர் அனுபவிக்க இயலாது போயின் அதைப்பற்றிச் சங்கத் திற்கு தெரிவித்துக் கொள்ளலாம் என்ற ஷரத்தும், சிறுபான்மை இனத்தவரின் உடன்படிக்கைகளைப் பற்றி அவர்களுக்கும், அவர்களுடைய அரசுகளுக்கும் ஏற்படும் வாதங்களை சர்வதேச நீதிபதிகள் தீர்த்துவைக்க வேண்டு மென்ற ஷரத்தும் பாராட்டுதற்குரியன. சங்க அங்கத் தினர்களனைவரும், சங்கத்தில் சேர விரும்பும் அரசுகளும், சிறுபான்மை உடன்படிக்கை ஷரத்துக்களை அங்கீகரிக்க வேண்டுமென்ற நிபந்தனையும் போற்றுதற்குரியதே. அல்பேனியா, பின்லாந்து, எஸ்டோனியா, லட்வியா, லித்துவேனியா முதலிய நாடுகள் அவ்வுடன்படிக்கைகளை ஒப்புக்கொண்டன.

## III. இனம், மதம், மொழி வேறுபாடும் ஜனமாற்றமும்

சர்வதேச சங்கம் சிறுபான்மையினத்தவரின் நலனைப் பேண எடுத்துக் கொண்ட முயற்சியில் அதிகமாக வெற்றி யுறவில்லை. போலந்து தேசத்தில் ஜெர்மன் மக்களின் உரிமைகள் மறுதலிக்கப்பட்டன. ஹங்கேரியில் யூதர்கள் துன்பத்திற் குள்ளாயினர். துருக்கியில் கிரேக்கர்கள் இன்னலுற்றனர். கிரீஸில் பல்கேரியரும், ருமேனியாவில் ஹங்கேரியரும் மிகுந்த கஷ்டமடைய நேரிட்டது. ஆகவே, சிறுபான்மை யினத்தவர், தங்கள் இனத்தவர் பெரும் பான்மையராய் அரசு புரியும் தேசங்களில் குடியேற நேர்ந்

தது. அவ்வாறு செல்லாதிருப்பவர்களை அரசாங்கங்கள் பல்வகையிலும் துன்புறுத்தின. இத்தாலிய அரசு தென் டைரோலிலிருந்த ஜெர்மன் மக்களை இன்னலுறச் செய்தது. ஜெர்மானிய ஆசிரியர்கள், நிர்வாக அதிகாரிகள், நீதிபதிகள் முதலானோர் அவர்களுடைய பதவிகளை இழந்தனர். ஜெர்மன் மொழியை மக்கள் உபயோகிக்கக் கூடாதென்று இத்தாலிய அரசாங்கம் கட்டளையிட்டது. அதனால் பல பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன. நகரங்கள், கிராமங்கள், ரஸ்தாக்கள், தெருக்கள் முதலியவைகளின் ஜெர்மன் பெயர்கள் இத்தாலியப் பெயர்களாக மாற்றப்பட்டன. ஜெர்மானிய சரித்திரச் சின்னங்களும், ஜெர்மானிய வீரர்களின் படங்களும் அழிக்கப் பட்டன. இவ்வாறு பல நாடுகளிலும் சிறுபான்மையினத்தவருக்கும், பெரும்பான்மை யினத்தவருக்கும் பொருமையும் விரோதமும் எழவே, ஐரோப்பிய அறிஞர்களில் பலர் சிறுபான்மை யினத்தவரை நாட்டைவிட்டு அவர்களுக்குரிய தேசத்திற்கு அனுப்பி அத்தேசத்தில் சிறுபான்மை யினத்தவராயிருக்கும் தங்கள் மக்களை தமது நாட்டிற்கழைத்துக் கொள்வதே ஓர் அரசிற் குகந்த முறையென்று கருதினர். துருக்கிக்கும் கிரீஸுக்குமிடையில் 1925-ல் அவ்வாறு மக்கள் மாற்றப் பட்டனர். அகதிகள் தங்களுக்குரிய பொருள்களைக் கொண்டேகவும், எடுத்துச் செல்ல முடியாத பொருள்களுக்கு அரசாங்கத்திடமிருந்து நியாயமான மதிப்புக் கிரையம் பெறவும் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் பல கிரேக்கர்கள் துருக்கியிலிருந்து வெளியேற மறுக்கவே அவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். ஜனமாற்ற ஒப்பந்தம் கிரீஸுக்கும் பல்கேரியாவிற்கும் ஏற்பட்டது. சிறுபான்மை இனத்தவர்களை இவ்வாறு குடியேறும் வண்ணம் செய்வது சாலவும் நன்று. ஆனால் இந்திய டொமினியனிலிருக்கும் முஸ்லிம்களை பாகிஸ்தானுக்கும், பாகிஸ்தானிலிருக்கும் இந்துக்களை இந்திய டொமினியனிலும் குடிபுகச் செய்வது சாத்யமாகுமா என்பது நம் நாட்டுத் தலைவர்கள் பரிசீலனை செய்யவேண்டிய விஷயமாகும். வட இந்தியாவில் ஜன

மாற்றக் கொள்கையை அனுஷ்டிக்க வேண்டியது அவசியமே. தென் இந்தியாவில் அவ்வாறு செய்வது சாத்தியமன்று. சர்வதேச சங்கத்தினால் ஏற்பட்ட சிறுபான்மையினத்தவரின் உடன்படிக்கைச் ஷரத்துக்களைத் தாராள மனப்பான்மையுடன் இரு டொமினியனரசுகளும் பின்பற்றுவதே தகுந்தமுறையாகும்.

சர்வதேச சங்கத்தை அமைப்பதில் பெரும் பங்கு எடுத்துக்கொண்ட அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாதிபதியான **வில்சன்** என்பவர் தேசிய உணர்ச்சி பெற்ற ஒவ்வொரு இனத்திற்கும் தனது அரசியலை நிர்ணயிக்கும் உரிமை உண்டென்று மொழிந்தார். அவருடைய கொள்கையை அனுஷ்டிப்பின் பிரிட்டனில் ஸ்காத்லாந்து, இங்கிலாந்து, வேல்ஸ் என்ற மூன்று அரசுகள் ஏற்படுமன்றோ? தென் ஆப்ரிக்கா ஐக்கிய நாட்டிலிருக்கும் டச்சு மக்களும், கானடாவிலிருக்கும் பிரெஞ்சு மக்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து பிரிந்து தனி அரசுகளை அமைக்க நேரிடும். பெல்ஜியத்தில் வலூன், பிளீமிஷ் இனங்கள் இரு அரசுகளையும், ஸ்விஸ் மக்கள் மூன்று அரசுகளையும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஜெர்மானியர், இத்தாலியர், ஆங்கிலேயர் முதலிய இனத்தவர் வெவ்வேறு அரசுகளையும் அமைக்க நேரிடுமன்றோ? ஐரோப்பா கண்டத்தில் மட்டும் 68 தேசிய இனங்கள் உள்ளன. இன்றிருக்கும் முப்பது நாடுகளுக்குப் பதிலாக 68 அரசுகள் அமைக்கப்பட வேண்டுமன்றோ? ஜனாதிபதி வில்சனின் கொள்கை ஆங்கிலேய அரசியல் அறிஞர், ஜே. எஸ். மில்லின் கொள்கையை ஒத்திருக்கின்றதல்லவா? ஒவ்வொரு இனத்தவற்கும் தனி அரசு அமைக்கப்படவேண்டுமென்ற கொள்கையை அனுஷ்டித்தால் உலகில் அமைதி என்பது குதிரைக் கொம்பாகுமென்பதற்கு ஐயமில்லை. நம் நாட்டில் மராத்தியர், தமிழர், ஆந்திரர், கன்னடர், வங்காளிகள், பஞ்சாபிகள், குஜராத்திகள், உரியா மக்கள் முதலிய பல்வேறு இனங்களுக்கும் தனி அரசுகள் அமைக்கப்படவேண்டுமன்றோ? அவ்வாறு அமைத்திடின் சென்ற நூற்றைம்பது வருஷங்களாக இந்தி

யாவில் நிலவிவரும் அமைதி குன்றும் என்று கூசாது கூறலாம். இந்திய நாகரீகமும், வர்த்தகமும், சமுதாய முன்னேற்றமும் நசிப்பது திண்ணம்.

## IV. சுய அரசியல் நிர்ணயத்திற்குரிய அம்சங்கள்

ஓர் இனத்திற்கு அரசியல் சுயநிர்ணய உரிமையை, வில்சன், மில் முதலியோர் கூற்றிற்கேற்ப அளிக்கவேண்டுமா என்பதை ஆராய்வோம். 1918 லும் 1919 லும் ஆலந்து தீவுகளின் வாசிகள் தாங்கள் பின்லந்து அரசிலிருந்து பிரிந்து ஸ்வீடன் அரசுடன் சேரவேண்டுமென்று ஏகோபித்துத் தீர்மானித்தனர்; சர்வதேச சங்கத் திடம்முறையிட்டனர். அச்சங்கம் உலக நீதிபதிகளின் அபிப்பிராயத்தைக் கோரியது. அவர்களுடைய தீர்ப்பின் சாராம்சமாவது:— பின்லாந்து ஓர் சுதந்திர நாடென்று உலக மக்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வரசின் கீழ் வாழும் ஓர் இனம் அவ்வரசைவிட்டுப் பிரிந்து போகவேண்டுமென்று தீர்மானிப்பதை சர்வதேச சங்கம் ஒப்புக்கொள்ளுமெனின் பின்லாந்தின் சுதந்திரம் பாதிக்கப்படுமன்றோ? இதர சிறுபான்மை யினத்தவரும், அவ்வாறு தீர்மானிப்பரேல் அவர்களும், தாங்கள் வாழ்ந்துவரும் அரசுகளின் ஆதிபத்தியத்திலிருந்து பிரிந்துகொள்வார்கள். ஆகவே, உலகில் ஓர் அரசும் நிலைபெற்று நிரந்தரமாய் விளங்கமுடியாது. அக் காரணத்தால் சர்வதேச நீதிபதிகள், ஆலந்து மக்களின் தீர்மானத்தை நிராகரித்தனர்.

அரசுரிமையை அடைய வேண்டுமெனின் ஓர் இனத்திற்குக் கீழே குறிப்பிடப்படும் அம்சங்கள் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். முதற்கண், நாட்டின் மூலப் பொருள்களை அபிவிருத்தி செய்யும் ஆற்றல் அதற்கு வேண்டும். இரண்டாவதாக, நேர்மையான சட்டங்களை இயற்றவும், திருப்திகரமாக அரசை அமைக்கவும், அதற்கு சாமர்த்தியம் வேண்டும். மூன்றாவதாக, இதர நாட்டினர் தன்னோடு வர்த்தகம் புரியவும், அவர்கள் பயமின்றி தன் நாட்டில் யாத்திரை செய்யவும், தான் பெற்ற கடன்களை

நிவர்த்திக்கவும், அந்நிய நாடுகளிலிருந்து வரும் தூதர்களைப் பாதுகாக்கவும், அந்நாடுகளுக்குத் தனது தூதர்களை அனுப்பவும், தான் இதர நாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளின் ஷரத்துக்களை நிறைவேற்றவும் உலக வியவகாரங்களைக் கௌரவத்துடன் தீர்த்துக்கொள்ளும் ஆற்றலும் அதற்கிருக்கவேண்டும். புத்தி நுட்பத்துடன் அரசியல், பொருளாதாரம், சமுதாயம் முதலிய துறைகளில் ஏற்படும் பிரச்னைகளைத் தீர்க்கக் கூடிய தீர புருஷர்களையும், நாரீமணிகளையும் அவ்வினம் பெற்றிருக்கவேண்டும். இறுதியாக அயலாரின் ஆக்கிரமிப்பிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தியும் உள்நாட்டுக் கலகங்களை அடக்கும் ஆற்றலும், மக்களைப் பசி, பிணி, மடமை முதலியவைகளி லிருந்து விடுவிக்கும் திறனும் அவ்வினத்திற்கு இருக்கவேண்டும். இத்தகைய அம்சங்கள் இருக்குமெனின் அவ்வினத்திற்கு அரசியல் சுயநிர்ணய உரிமை உண்டென்று கூறலாம். ஆனால் அத்தகைய ஆற்றல் இருக்கின்றதென்று தீர்மானிப்பவர் யார்? என்னும் பிரச்னை எழுவது இயல்பே. தீர்மானிக்கும் உரிமையை அவ்வினத்திற் களிப்பது முறையன்று. சுயநலத்தால் தூண்டப் பெற்றுத் தன்னிடம் அத்தகைய ஆற்றல் உண்டென்று, அவ்வினம் பறைசாற்றுவது திண்ணம். இதர தனிப்பட்ட இனங்களுக்கும், அவ்வுரிமையை அளிக்கமுடியாது. பாரபட்சமின்றி, நேர்மையாகத் தீர்ப்பு அளிக்கப்படவேண்டுமாகையால், உலக நீதிமன்றமே இப்பிரச்னையை தீர்மானிக்கத் தகுந்த ஸ்தாபனமாகும். தேசீய உணர்ச்சி உச்சநிலையடையாத இனத்தவர் உலக பாதுகாப்புக் கவுன்சிலின் கண்காணிப்பில் இருப்பது நன்று. காலச் சுழலில் அநேக இனங்கள் தேசீய உணர்ச்சியைப் பெறக்கூடும். அவ்வாறு அவைகள் பெறுமுன் அவைகளுக்கு அரசுரிமை அளிப்பது முறையன்று. அரசும் தேசீயமும் நெருப்பையும் உஷ்ணத்தையும், நீரையும் குளிர்ச்சியையும், மலரையும் மணத்தையும் போல இணைபிரியாதவை யன்று. ஒரே இனத்தினர், பல அரசுகளின் கீழ் வாழுகின்றனர். பல

இனங்கள் ஓர் அரசின்கீழ் வாழ்கின்றன. ஓர் இனத்திற்கு இன்றியமையாததென்னவெனின் சமுதாய வாழ்க்கையும் தனது நாகரீகத்தையும் அது தடையின்றி அனுபவிக்க உரிய சுதந்திரமாகும். ஆகவே, தேசீய உணர்ச்சி உச்ச நிலையை அடையுமுன்னர் எந்த இனத்திற்கும் தனி அரசு வழங்குவது தவருகும். ஒவ்வொரு இனமும் அரசுரிமையைப் பெறப் போதிய ஊக்கமும், ஆற்றலும் அடைந்திருக்க வேண்டும். அவ்வாறு இருப்பின் அதுவும் பயனுறும்; உலக மக்களும் நலனுறுவர்.

---

# அத்தியாயம் 6

# தேசீயத்தின் நன்மை தீமைகள்

## I. தேசீயத்தின் நன்மைகள்

உலகில் இன்று தேசியம் மக்களிடையில் தழைத்துச் செழிப்புற்று இருக்கின்றதென்று முன் அத்தியாயங்களில் படித்தோம். நன்மை பயக்குமென்று அதை நாம் போற்றினாலும் அல்லது தீமை விளைவிக்கும் என்று அதைத் தூற்றினாலும் அது பாதிக்கப்படமாட்டாது. பூமி சூரியனைச் சுற்றி வருவதை நம்மால் தடுக்க இயலாதன்றே? அவ்வாறே தீவிரமாய் இன்று உலகில் பரவிவரும் தேசீய உணர்ச்சியை நாம் குறைகூறின் அது மங்கி மறையாது; போற்றிடின் அது தீவிரமாகப் பரவுமென்று கூறுவதற்கும் இயலாது. ஆகவே, நன்மையையும் தீமையையும் விளைவிக்கக் கூடிய இக்குறிக்கோளை மக்கள் ஆழ்ந்து பரிசிலனை செய்து தீமையை விலக்கி நன்மையை அனுபவிப்பதே தகுந்த முறையாகும்.

இத்தாலிய இளைஞர் சங்கக் குறிக்கோள்களை தேசியத்தின் பெரும் நன்மை எனக் கொள்ளலாம். அவைகளாவன :—(1) அந்நியர் ஆதிக்கத்திலிருந்து மக்களின் விடு

தலை, (2) அவர்களின் ஒற்றுமை உணர்ச்சி, (3) அவர்களின் சுதந்திரம். மக்களிடையில் தேசீய உணர்ச்சி தோன்றிடின் அவர்கள் அந்நியராட்சியை வெறுத்து, தாங்கள் விடுதலையடைவதில் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். இதர இனத்தவர் தங்களைச் சுரண்டி வாழ்வதைக் கண்ணுற்று அவர்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதில் அவர்கள் ஈடுபடுகின்றனர். தேசீயத்தின் வளர்ச்சி வரலாற்றில் எவ்வாறு அந்நியராட்சி ஜெர்மனியிலும், இத்தாலியிலும், பால்கன் பிரதேசத்திலும் ஒழிக்கப்பட்டதென்பதைப் பார்த்தோம். நம் தேசத்திலிருந்து ஆங்கிலேயர் வெளியேறினதற்கு முதன்மையான காரணம் நம் மக்களிடையே வளர்ந்தோங்கிய தேசீய உணர்ச்சியேயாகும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், பிரிட்டிஷ் பொதுநல அரசாக மாற்றமடைவதற்குக் காரணமும் தேசீய உணர்ச்சியேயாகும். பிலிப்பைன் மக்கள் சுதந்திரம் பெற்றதற்கும், இந்தோனேஷியர் சுதந்திரம் பெற ஆர்வமுற்றதற்கும், தென் அமெரிக்காவில், ஸ்பானிஷ் குடியேற்றங்கள் விடுதலை பெற்றதற்கும் காரணம் தேசீய உணர்ச்சியேயாகும்.

ஓரினத்தவர் பல்வேறு அரசுகளின்கீழ் வாழ்ந்த போதும் தேசீய உணர்ச்சி பரவவே அவர்கள் ஒற்றுமையடைந்து ஒரு தனியரசின் கீழ் வாழ ஆர்வம் கொள்கின்றனர். பத்தொன்பதாம் நூற்றுண்டினாரம்பத்தில் இத்தாலியும் ஜெர்மனியும் எத்தகைய அவல நிலைமையில் இருந்தன என்பதைப் பார்த்தோமல்லவா? தேசீய உணர்ச்சியின் விளைவாக முப்பத்தொன்பது சிற்றரசுகளுக் குட்பட்ட ஜெர்மன் மக்கள் ஒற்றுமை யடைந்து பத்தொன்பதாம் நூற்றுண்டினிறுதியில் ஒரு தனியரசின் கீழ் வாழத் தொடங்கினர். ஒன்பது சிற்றரசுகளுக்குட்பட்ட இத்தாலிய மக்களும் ஒற்றுமையடைந்து, ஓர் அரசின்கீழ் சென்ற நூற்றுண்டினிறுதியில் வாழத்தொடங்கினர். பல்வேறு பகுதிகளில் வாழும் நம் தேசமக்களின் ஒற்றுமைக்குக் காரணம் தேசீயமன்றோ? அந்நியராட்சியினின்றும் விடுதலை பெற்ற ஓரினத்தவர் ஒற்றுமையுடனும், சுதந்திரத்துடனும் வாழ்

வது இயல்பே. ஆகவே, தேசியத்தின் பெரும் நன்மை யாதெனில், ஒற்றுமை உணர்ச்சியும், சுதந்திரமுமாகும்.

இரண்டாவதாக, நாகரீகம் இவ்வுணர்ச்சியின் பயனுய்த் தழைத்தோங்க வழியிருக்கின்றது. ஒவ்வொரு இனத்தவரும் தங்கள் தங்கள் குணத்திற்கும் சாமர்த்தியத்திற்கு மேற்ப சங்கீதம், நடனம், இலக்கியம், ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை முதலிய பல்வேறு துறைகளில் வளர்ச்சியுறுகின்றனர். வேற்றுமையின் காரணமாக நாகரீகம் சிறப்புற்று விளங்க ஏதுவிருக்கின்றது. அமெரிக்காவிலிருந்து சிங்கப்பூர் வரையிலும் மக்கள் ஒரேவிதமான ஆடையை அணிந்தனரெனின், பார்ப்பவர் மனம் சலிப்படையுமன்ரூே? தொழிற்புரட்சி மக்களின் வாழ்க்கையில் வேற்றுமைகளை அகற்றி அவர்களை ஒரே நிலைமைக்குக் கொண்டுவரும் இயல்புடையது. காலையில் எழுந்ததும் முக க்ஷவரம்; முகத்திற் தடவ பரிமளப் பொடி; பல் துலக்கப் பசை; தலை வார வாசனைத் தைலம், தந்தச் சீப்பு முதலியன அமெரிக்காவிலிருந்து ஜப்பான் வரையிலும் இன்றியமையாதவைகளாயிருக்கின்றன. இவ்வாறு மக்களனைவரும் ஒரே நிலைக்கு வந்தனரெனின் நாகரீகம் வளர்ச்சியுறாது என்பது திண்ணம். ஒரேவிதமான வாழ்க்கை மனதிற்கு எவ்வாறு திருப்தியளிக்கக்கூடும்? ஓர் அழகான பூஞ்சோலையில் மல்லிகை, முல்லை, ரோஜா முதலான நல்ல வாசனை கமழும் மலர்கள் அதை அழகுறச் செய்கின்றன. அவ்வாறின்றி முல்லையோ, ரோஜாவோ அல்லது மல்லிகையோ இருந்திடின், அவ்வனத்தின் அழகு குன்றுமன்ரூே? மக்களும் ஒரேவிதமான வாழ்க்கையை மேற்கொள்ள நேரிடின் நாகரீகம் வளங் குன்றி சிறப்பை இழக்குமென்பதில் ஐயமில்லை. ஆனல் தேசிய உணர்ச்சி அவர்களை, அவர்களது பழக்க வழக்கங்களைக் கைவிடாது அனுஷ்டிக்கத் தூண்டுவதனுல் நாகரீகம் பல நறு மலர்கள் நிறைந்த பூஞ்சோலையைப்போல பொலிவுற்றிருக்க ஏதுவிருக்கின்றது. மக்கள் கையில் தேசீயம், தன் மதிப்பிற்கு

வித்தாக விளங்குகின்றது; நாகரீக வளர்ச்சிக்கு அதுவே மூல காரணமாகும்.

மூன்றாவதாக, தேசீயம் மக்களிடையில் சுதந்திரத் தாகத்தை எழுப்பி அவர்களை ஜனநாயகப் பாதையில் முன்னேறும்படிச் செய்கின்றது. தேசீயமும் ஜனநாயகமும் இணைபிரியாத் தோழர்கள். ஆங்கில அரசியலறிஞர் ஜே. எஸ். மில் கூறுவதுபோல தேசீயம் சுதந்திர ஸ்தாபனங்களுக்கு ஒரு பெரும் தாயகமாகும். ஜனநாயக ஆட்சி வளம் பெறவேண்டுமெனின் மக்களனைவர்க்கும் கல்விப் பயிற்சி அளிக்கப்படவேண்டும். பல இனங்கள் சேர்ந்து வாழின் எவ்வினத்தின் மொழியில் கல்வி அளிக்கப் படவேண்டும் என்ற பிரச்னை எழ ஏதுவிருக்கின்றது. ஆனால் மக்கள் ஒரே இனத்தைச் சார்ந்தவராய் இருப்பரேல், அவர்களிடம் தேசீய உணர்ச்சி வளம் பெற்றிருக்குமெனின், கல்வி அவர்களுடைய தாய்மொழியில் அளிக்கப் படும். ஆகவே, தேசீயம் மக்களை இறுதியில் ஜனநாயகப் பாதையில் முன்னேறும்படித் தூண்டும் தன்மை வாய்ந்தது.

நான்காவதாக, ஓரினமும் அதன் ஜனத்தொகையையும் தேசத்தையும் பொறுத்து மட்டும் உயர்ந்ததெனக் கருதப் படமாட்டாது. அதன் குறிக்கோள்களும், வாழ்க்கை இலட்சியங்களும், இவைகளைக் கொண்ட அதன் கலையுமே அதற்கு உயர்ந்த ஸ்தானத்தை அளிக்கின்றன. ஒவ்வொரு இனமும் தனது குறிக்கோள்களையும், நாகரீகத்தையும் போற்றி வளர்ப்பதில் ஆர்வம் கொண்டுள்ளமையால் தேசீயம் மக்களுக்கு நன்மை பயக்குமென உறுதியாகக் கூறலாம். சர்வ தேசீய உணர்ச்சி, மானிட நாகரீகத்தில் பற்று, உலக அமைதியில் விருப்பம் முதலியன பண்படுத்தப் பெற்ற தேசீயத்திலிருந்து எழவேண்டுமேயன்றி, திடீரென் மக்களிடையிற் தோன்ற முடியாது. அவ்வாறு தோன்றிடினும் அவ்வுணர்ச்சி நிரந்தரமாக நிலைத்திராது. ஆகவே, ஜனநாயகப் பற்றும், நாகரீக வளர்ச்சியும், சுதந்-

திரத் தாகமும், ஏகாதிபத்திய வெறுப்பும், ஒற்றுமையும் தேசியத்தின் சிறந்த நன்மைகளாகும்.

தேசிய உணர்ச்சியின் அதி முக்கியமான நன்மையாவது மக்களின் பொருளாதார நிலைமை பல வழிகளிலும் உயர்வதாகும். ஜப்பானியர் தேசிய உணர்ச்சி பெற்று எவ்வாறு தங்களது வர்த்தகத்தையும் விவசாயத்தையும் அபிவிருத்தி செய்தனரென்று பார்த்தோமல்லவா? ஜெர்மானியரும் இத்தாலியரும் தேசிய உணர்ச்சி பெற்ற பின்னரே தொழிற் புரட்சியின் பயனை பூரணமாக அனுபவிக்க ஆரம்பித்தனர். தேசிய உணர்ச்சி பெற்ற மக்கள் தங்களுடைய பொருளாதார நிலையை மேம்பாடடையச் செய்யும் நோக்கத்துடன் தொழிற்சாலைகளை அமைப்பார்கள்; போக்கு வரவு வசதிகளை அதிகரிப்பார்கள்; அவர்களுடைய அரசு எவ்வகையாலும் தேசத்தை சுபிட்சமடையச்செய்வதில் ஆர்வமும் ஊக்கமும் எடுத்துக்கொள்ளும். பசி, பிணி, அறியாமை முதலியவைகளை வேரறுப்பதில் அவ்வரசின் முயற்சி வியப்பை எழச் செய்யுமென்பதில் ஐயமில்லை. மக்களின் மொழிக்கும் கலைக்கும் புத்துயிர் அளிப்பது மட்டுமன்றி அவர்களின் பொருளாதார நிலையை தேசியம் சிறப்புறச் செய்யும்.

## II. தீமைகள்

மேற்குறிப்பிடப்பட்ட நன்மைகளை தேசியம் விளைவிக்கின்றதெனினும், தீவிர தேசிய உணர்ச்சி பற்பல தீமைகளுக்கு மூல காரணமாகின்றது. தேசியத்தின், முதற் தீமையாவது, மக்களிடையில் தாராள சிந்தையும் பரந்த நோக்கமும் மங்குவதாகும். ஓர் இனத்தவரை அயல் நாட்டார்களுடன் அளவளாவிப் பழகவிடாது, பிரிந்து நிற்கச் செய்யும் இயல்புள்ளது தேசியம். தம் மொழியே சிறந்தது: தம் கலையே உயர்ந்தது: தாங்களே உலக மக்களுக்கு வழிகாட்டும் அறிஞர்கள்: தாங்களே ஆளப் பிறந்தோர்: ஏனையோர் தாழ்ந்தோர் என்ற குறுகிய மனப்

பான்மையைத் தேசீயம் எழச் செய்யும் இயல்புடையது. கல்வி முறையாலும், இராணுவப் பயிற்சியாலும், பத்திரிகையின் மூலமாகவும் தேசத் தலைவர்கள் மக்களிடையில் நாட்டுப்பற்றை எழுப்பித் தங்கள் நாடு ஒரு மணி நாடென்றும், பூமிக்கு அது ஒரு திலகம் போன்றதென்றும், தங்கள் இனம் ஒரு தனி இனமென்றும், இதர இனங்களைவிடத் தலை சிறந்ததென்றும், தங்கள் கலையும் பழக்க வழக்கங்களும் புனிதமானவை என்றும், அவைகளுக்காக எத்தகைய தியாகமும் செய்யத் தயங்கக் கூடாதென்றும் ஒரு தனி மனப்பான்மையை உற்பத்தி செய்கின்றனர்.

இரண்டாவதாக, தேசீயம் சில குறிக்கோள்களை அமைத்து கலை, சிந்தனை, ஒழுக்கம் முதலியவைகளை அவ்விலட்சியங்களால் நிர்ணயிக்கும் இயல்புடையது. அக்குறிக்கோள்களுக்கு உட்பட்டவைகளே சிறந்தவை; புறம்பானவைகள் கலைக்கும், சிந்தனைக்கும் புறம்பானவையே என்னும் எண்ணத்தை உண்டாக்குகின்றது.

மூன்றாவதாக, சாதாரண மக்களிடையில் தேசீயத்தின் பெயரால் வெளிவரும் சட்ட திட்டங்களை ஆராய்ச்சி செய்யாது அங்கீகரிக்கும் மனப்பான்மையை தேசீயம் எழச் செய்கின்றது. நாட்டின் உரிமை, நலன், கௌரவம் முதலியவற்றைப் பாதுகாக்கத் தங்களுடைய உரிமைகளையும் நலனையும் தியாகம் செய்ய அவர்கள் முற்படுகின்றனர். ஆனால் உண்மையில் அவர்களுடைய தியாகம் நாட்டின் நலனுக்கன்று; முதலாளி வகுப்பினரின் நலனுக்காகும். இவ்வியல்பை நன்குணர்ந்த சுயநல வாதிகளான தலைவர்கள் போரைப் போற்றிப் புகழ்ந்து அவர்களை அதில் ஈடுபடச் செய்கின்றனர்.

நான்காவதாக, தேசீய அரசு, அக்கம் பக்கங்களிலுள்ள இனத்தவரின்மீது சந்தேகமுற்றுத் தன்னை வலுவுறச் செய்யும் எண்ணத்துடன் இராணுவத்தைத் திருத்தி அமைக்கின்றது. இத்தனை வயதிற்கு மேற்பட்டு, இத்தனை வயது வரையிலுமுள்ள ஆடவரனைவரும், இராணுவப்

பயிற்சிபெற வேண்டுமென்று அது கட்டளையிடுகின்றது; அவர்களைக் கட்டாயப்படுத்துகின்றது. தன் அச்சம் ஒரு பால் வளரவே, ஒற்றரால் இதர நாடுகளின் இராணுவ பலத்தை யறிந்து தான் அப்படையினும் மிக்க பல முறவேண்டும் என்று கருதி, காலாட் படையையும், கப்பற் படையையும், ஆகாய விமானங்களையும் அதிகரிப்பதில் அவ் வரசு ஆர்வங்கொள்கின்றது. அண்டை அரசு 5000 பவுன் யுத்த தளவாடங்களுக்காகச் செலவு செய்திடின், தேசீய அரசு அவ்விஷயத்திற்கு இரட்டிப்புத் தொகையைச் செலவு செய்யத் தயங்குவதில்லை. ஜெர்மனி, 1934-லிருந்து 1939 வரை மொத்தத்தில் 500 கோடி பவுனை இராணுவத் திற்காகச் செலவு செய்தது. ஜப்பானும், இத்தாலியும் தங்களது வருவாயில் ஏறக்குறைய பாதிப் பாகத்தை இராணுவத்திற்காகச் செலவு செய்தன. தீவிர தேசீய உணர்ச்சி வகை வகையாக வந்த பொருளைப் புகை புகை யாய்ப் போக்கடித்துத் தொலைக்கும்படி மக்களைத் தூண்டு கின்றது. பிறர் துன்பத்தைக் கண்ணுற்று இரங்கிக் கண்ணீர் வடிக்கக்கூடிய மானிட இயல்பு, தேசீயத்தால் அவர்களின் பசி, நோய் முதலிய இன்னல்களைக் கண்டு மகிழ்ச்சியடையும் தன்மையதாகின்றது. பக்கத்து வீடு எரிவதைப் பார்த்து மனம் மகிழும் நிலைக்குத் தேசீயம் மனிதர்களைக் கொண்டுவந்து விடுகின்றது. கவி ரவீந்திர நாத் தாகூர் கூறியபடி எவ்வினத்தவர் எத்தகைய துன்ப மடையினும் வெற்றி ஒன்றே போற்றத் தகுந்தது என்னும் எண்ணத்தைத் தேசீயம் எழச் செய்கின்றது.

அண்டை அயலார்களின் எளிமையையும், வலிமையின் மையையும் கண்ணுற்றுத் தேசீயம் மக்களை ஆனந்தமடை யச் செய்கின்றது. அவர்களின் அந்தரங்கங்களை அறிவதற் காகப்பாதாளம் வரையில் துருவும் இயல்பையுடைய ஒற்றர் களை அனுப்பி அறிந்த பின்னர், அவர்கள்பால் சந்தேகமும் பொறாமையும் தேசீய அரசு கொள்கின்றது. தேசீயம் சுயநலத் திரளேயன்றி வேறில்லை. சந்தேகப் பேயால் பீடிக்கப்பட்டு கப்பற்படையையும், ஆகாய விமானங்களை

யும், எந்திர பீரங்கிகளையும், விஷ வாயுக்களையும், அணுக் குண்டுகளையும், மரணக் கதிர்களையும் தேசிய அரசுகள் உற்பத்தி செய்கின்றன. தேசிய உணர்ச்சியிலீடுபட்டு மனிதத் தன்மையை யிழந்து சுயநலத்தையே சன்மார்க்கமாகக் கொண்டலையும் மக்களின் மதியீனத்தை என்னென்று கூறுவது! கடவுள் சிருஷ்டியில் சிரேஷ்டம் வாய்ந்த மனிதன் தேசியம் என்னும் தொழிற்சாலையிலிருந்து பொருளீட்டும் எந்திரமாகவும், சலிப்புறாது போர் புரியும் மிருகமாகவும் வெளியேறுகின்றான். அரிய மானிட ஜென்மத்தைத் தேசியம் இவ்வாறு அலங்கோலப் படுத்துகின்றது. வெறுப்பு, பேராசை, சந்தேகம், நயவஞ்சகம், கொடுமை, பீதி இவைகளே தீவிர தேசியத்தின் இணை பிரியாத் தோழர்கள். கவி ரவீந்திரநாத் தாகூர் கூறுவது போல தேசியம் மனிதனை நர மாமிச பக்ஷிணியாகச் செய்கின்றது. அன்பை அறவே ஒழிக்கின்றது.

முற்காலங்களில் மதத்தின் பொருட்டு போர்கள் நிகழ்ந்தன. அமைதியே உருவான இயேசுநாதரின் பெயரால் கோரக் கொலைகளும் போர்களும் கிறிஸ்தவர்களாற் புரியப்பட்டன. அல்லாவின்பேரில் விளைந்த போர்கள் எண்ணிறந்தன. இன்று மனிதன் உள்ளத்தில், கிறிஸ்து நாதருக்கோ அல்லது அல்லாவிற்கோ இடமில்லை. தேசியம் என்னும் தெய்வம் அவ்விடத்தைப் பறித்துக்கொண்டது. கிறிஸ்தவமும், இஸ்லாமும், இதர மதங்களும் போற்றும் வீரர்களனைவரும் சாத்வீகம் நிறைந்த மகான்கள்; அன்பை அணிகலமாகக் கொண்டவர்கள். ஆனால் தேசிய மதம் போற்றும் வீரர்கள், ஈவிரக்கமின்றி மக்களை எமன் வசம் ஒப்படைக்கும் தளபதிகள். நவீனப் போர்கள், முற்காலத்துப் போர்களைவிட மிகுந்த கோரம் வாய்ந்தவை. தொழிற் புரட்சியையும், விஞ்ஞான வளர்ச்சியையும் இக் குரூரத் தன்மைக்கு காரணம் என்பர் பலர். பொருளாதாரப் போட்டியே காரணம் என்பர் ஒரு சாரார். இவைகள் நவீனப்போர்களின் கொடூரத்திற்கும், அழிக்கும் தன்மைக்கும் ஒருவாறு காரணமாகின்றன என்பது

உண்மையே. ஆனால் மக்கள் தேசியமென்னும் நோயால் பீடிக்கப்படவில்லையெனின் இந்நூற்றாண்டில் உலக மக்களனைவரும் அஞ்சவும், அறிஞர்கள் மானிட நாகரீகம் நிலைக்குமோ என்று ஐயுறவும் நிகழ்ந்த இரு உலக மகா யுத்தங்களும் மூண்டிராதென்று நிச்சயமாய்க் கூறலாம்.

தேசியத்தின் காரணமாகச் சென்ற இரு நூற்றாண்டுகளிலும், விளைந்த போர்களும் கலகங்களும் எண்ணிறந்தவை. 1798-ல் ஐரிஷ் மக்கள் ஆங்கிலேய ஆதிக்கத்தினின்று விடுதலை பெறக் கலகம் செய்தனர். 1808-ல் நேர்ந்த தீபகற்ப போரும், 1813-ல் எழுந்த ஜெர்மன் சுதந்திரப் போரும், 1821-ல் தொடங்கிய கிரேக்க சுதந்திரப் போரும், 1830-ல் முடிவுற்ற செர்பியச் சுதந்திரப் போரும், தேசியத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். அமெரிக்காவில் ஸ்பானிஷ் குடியேற்ற நாடுகள் 1830-க்குள் தாய்நாட்டின் ஆதிக்கத்தை ஒழித்தன என்று படித்தோமல்லவா. ஐக்கிய இத்தாலியப் போர்களும், ஐக்கிய ஜெர்மானியப் போர்களும், பல்கேரியரின் கிளர்ச்சியும், போயர் யுத்தங்களும், தேசியத்தால் எழுந்தவையாகும். 1905-ல் முடிவுற்ற ரஷ்ய ஜப்பானியப்போரும், பால்கன் யுத்தங்களும், இரு உலக மகா யுத்தங்களும் தேசியத்தால் நேர்ந்தவையே. இவ் யுத்தங்கள் அந்நிய ஆட்சியை ஒழிக்க நேர்ந்தவையே எனினும் கோடிக்கணக்கில் மக்கள் மடிந்ததையும், காலையும் கையையும் இழந்ததையும் மறக்கமுடியாது. புகையாய்ப் போன செல்வத்திரள் என்னே? தேசிய உணர்ச்சியன்றோ, அவைகளுக்கெல்லாம் காரணம்? அக்கம் பக்கங்களில் வாழும் தங்கள் இனத்தவரை ஒன்று சேர்ப்பதற்காக எத்தகைய யுத்தங்கள் புரியப்பட்டன? எச்சமயத்திலும் போர் மூளலாம் எனச் சந்தேகமுற்று தேசிய நாடுகள் தங்கள் இராணுவத்தை பெருக்குகின்றன. தேசியம் மக்களை ஒன்று சேர்ப்பதற்குப் பதிலாக பிரிக்கும் இயல்பு வாய்ந்தது. இந்நோக்கத்தோடு, ஜெர்மன் சர்வாதிகாரியான ஹிட்லர் அண்டையிலுள்ள பிரதேசங்களைக் கைப்பற்றினார். தேசிய உணர்ச்சி உச்சநிலையை அடைந்

திருக்கும் இந்நூற்றாண்டில், அமைதியும் நீதியும் எவ்வாறு இருக்கமுடியும்? நாகரீகம்தான் சிறப்புற்று விளங்குமோ? தேசீயம் போர் ஒன்றையே தலைசிறந்தது என்று கருதும் மனப்பான்மையை மக்களிடம் விளைவிப்பதால் அவர்கள் இராணுவ வீரர்களையே போற்றுகின்றனர். இலக்கிய கர்த்தாக்களையும், கலைஞர்களையும், விஞ்ஞானிகளையும் அவ்வாறு பாராட்டுவதில்லை; போர்வீரர்களையே அறிஞர்களைவிடத் தலைசிறந்தவர்களெனக் கருதுகின்றனர்.

தேசீயத்தின் அதி முக்கியமான தீமையாவது படைப் பெருக்காகும். தேசீய உணர்ச்சி பெற்ற ஒரு நாட்டு மக்கள் அடிமைத் தளையிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்ட பின்னர் தற்காப்பின் நிமித்தம் தங்களுடைய நிலப்படை, கப்பற்படை, ஆகாயப்படை முதலியவைகளை அதிகரிக்கின்றனர். அயல் நாட்டார் தங்கள் பலத்தைக் கண்ணுற்றுப் பீதியடைந்து தங்களைக் கௌரவமாக நடத்த வேண்டுமென்று ஆசைகொள்கின்றனர்.

## III. பொருளாதாரக் கொள்கை

படைப் பெருக்கை யொத்த ஒரு பெருந்தீமை தேசீயப் பொருளாதாரக் கொள்கையாகும். உலகின் கண்ணுள்ள மூலப் பொருள்களை போதுமான அளவு தாங்கள் பெறவேண்டுமென்று தேசீய மக்கள் கருதுகின்றனர். அவர்களுடைய தேசபற்று அயல் நாட்டார் மீது வெறுப்பாகத் திகழ்கின்றது. தேசீய அரசு கட்டாய இராணுவ சேவையை மக்களுக்களித்து கல்வி நிலையங்கள் மூலம் அவர்களுடைய தேசீய உணர்ச்சியை அதிகரிப்பதுமன்றி இறக்குமதி வரிகளாலும், சலுகைகளாலும், உதவித் தொகைகளாலும் அயல்நாட்டுச் சரக்குகள் நாட்டிற்குள் புகுவதை அரிதாக்கி தனது வர்த்தகத்தை வளர்ப்பதிலீடுபடுகின்றது. நாட்டின் நலன் பல வகுப்பினரின் நலனேயன்றி வேறன்று. தேசீய உணர்ச்சியின் விளைவாக மக்களனைவரும் பற்பல வகுப்பினரின் நலன்களை தங்கள்

நலனென மதித்துப் பூரிப்பு கொள்கின்றனர். லண்டனி லிருக்கும் ஓர் எளிய தொழிலாளி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மகிமையையும் செல்வத்தையும் கேள்வியுற்று தேகம் பூரித்துப் பரவச மடைகின்றானெனின், தேசிய உணர்ச்சி யின் வலிமைதானென்னே! நாட்டின் தொழிற்சாலைகளை யும், கப்பல்களையும், ரெயில் பாதைகளையும் அவன் தனதெனக் கருதிக் களிப்புறுகின்றான்; அண்மையில் முளைத்த கைத்தொழிலைப் பாதுகாக்கும் பொருட்டு அந்நிய நாட்டுச் சரக்குகள் தன் நாட்டில் புகாவண்ணம், இறக்குமதி வரிகளை இடவேண்டுமென்று முழங்குகின்றான். என்னே தேசியத்தின் சக்தி!

ஜெர்மானியர் ஒற்றுமை அடைந்தவுடன் அவர்கள், நாட்டில் புதிதாய் எழுந்த கைத்தொழில்களை பாதுகாக்கும் பொருட்டு பிரிட்டிஷ் சரக்குகளின் மீது மிகப் பளுவான இறக்குமதி வரிகளை இடவேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். ஜெர்மன் நிலச் சுவான்கள் ரஷ்யாவிலிருந்தும், அமெரிக்காவி லிருந்தும் உணவுப் பொருள்கள் வருவதை தடுப்பதற்காக அவைகளின்மீது இறக்குமதி வரிகள் இடவேண்டுமென்றனர். அதனால் அமெரிக்க ஆலை முதலாளி களும், நிலச்சுவான்களும் தங்களரசை அத்தகைய இறக்குமதி வரிகளை ஜெர்மன் சரக்குகளின்மீது யிடுமாறு தூண்டினர். சீன ஜப்பானியக் கூலிகள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியேறுவதை தடுக்கவேண்டுமென்று அமெரிக்கப் பாட்டாளிமக்கள் கிளர்ச்சி செய்து அத்தகைய சட்டம் ஒன்றைப் பெற்றனர்.

மேற்கூறப் பெற்ற செய்கைகளினால் தேசியம் மக்களிடையில் குரோதத்தையும், பொறாமையையும், தகராறுகளையும் எழச்செய்யு மியல்புடையதென்பது விளங்கும். ஜப்பானும், அமெரிக்க ஐக்கிய நாடும், ஜெர்மனியும், ரஷ்யாவும், சென்ற நூற்றாண்டின் பிற் பகுதியில் நட்புடன் இருந்தன. தேசிய உணர்ச்சியின் விளைவாய் ஜெர்மன் நிலச்சுவான்கள் ரஷ்ய மக்களுக் கெதிராக அறிக்கைகளை வெளியிட்டு அவர்களை அநாகரீகர்களென்றும், கீழ்நாட்

டினரென்றும் தூற்றினர். ரஷ்ய நிலச்சுவான்கள் ஆலைமுதலாளிகளுடன் சேர்ந்து, ஜெர்மன் சரக்குகள் தங்கள் நாட்டிற்குள் நுழையாதபடி இறக்குமதி வரிகளை விதித்தனர். அமெரிக்க ஐக்கிய நாட்டினர் ஜப்பானியரை மிலேச்சர்களென்று பிரசாரம் செய்யவே, ஜப்பானியர் அவர்கள்மீது துவேஷங் கொண்டனர். இறக்குமதி வரிகளால் எழும் தகராறுகள் மக்களை இறுதியில் போர் புரியச் செய்கின்றன. 1914-ல் எழுந்த முதல் உலக மகாயுத்தத்தின் காரணம் செர்பியாவுக்கும், ஹங்கேரிக்கும், ஆஸ்திரியாவிற்கும் இடையிலெழுந்த பன்றி இறக்குமதித் தகராறு அன்றோ? அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஜப்பானியர், இத்தாலியர் முதலியோர் குடியேறுவதைத் தடுத்தல் ஐக்கிய நாட்டினர் தங்களது நலன் எனக் கருதுவதைப் போல, ஜப்பானும் இத்தாலியும் தங்கள் மக்களை அங்கு குடியேறச் செய்வது தங்களது நலனெனக் கொள்கின்றன. மேலும், நாட்டின் நலனுக்காகப் போலந்து மக்கள் 1918ல் ஜெர்மன் நகரமாகிய டான்ஸிக்கையும், போலந்து காரிடோர் என்னும் ஜெர்மன் பிரதேசத்தையும் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கைப் படி பெற்றனர். அவ்வாறு பெற வில்லையெனின் அவர்களால் பால்டிக் கடலை யடைந்து தங்களுடைய வர்த்தகத்தை வளர்க்க முடியாது. அக்காரணத்தினாலேயே எட்ரியாடிக் கடற்கரைத் துறைமுகங்களை இத்தாலியர் பெற்றனர். அல்சேஸ் லொரைனேயும், சார் பிரதேசத்தையும் பிரெஞ்சு அரசு பெற்றது. இரும்புச் சுரங்கங்களும், நிலக்கரிச் சுரங்கங்களும் நிறைந்துள்ள அப்பிரதேசங்களை பிரெஞ்சு அரசு தன் நலனைப் பேண அவசியமெனக் கருதி ஜெர்மன் அரசிடமிருந்து அவைகளைப் பறித்தது. அவைகளை மீண்டும் பெற ஜெர்மானியர் ஆசை கொள்வது இயல்பே. அமெரிக்க ஐக்கிய நாட்டினர் கரீபியன் கடலில் தங்களது ஆதிக்கத்தை தென் அமெரிக்க அரசுகளுக்கு விரோதமாக நிறுவ அவாக் கொண்டுள்ளனர். இவ்வாறு நாட்டின் நலனைப் பாதுகாப்பதற்காகத் தேசீய அரசுகள் தங்களது இராணுவத்தைப் பெருக்குகின்றன; வர்த்தகத்தை வளர்க்

கின்றன. அவைகளின் கொள்கை சுய நலத்தை அடிப்படையாகக்கொண்டு அமைந்திருப்பதால் மக்களிடையில் பொறாமையும், சகிப்பின்மையும், துவேஷமும் தோன்றி அவர்களைப் போரி லீடுபடச் செய்கின்றன.

## IV. தேசியத்தின் சுயநல விளைவுகள்

தேசிய உணர்ச்சியைப் பெற்ற மக்கள் தங்களுடைய தேவைகளை அயல்நாட்டாரை எதிர்பார்க்காது தாங்களே பூர்த்திசெய்து கொள்ளும் நோக்கத்துடன் தங்களுடைய விவசாயத்தையும் கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்வதில் ஈடுபடுகின்றனர். தங்களுக்குத் தேவையான அளவு உணவுப் பொருள்களையும் துணி மணிகளையும் உற்பத்தி செய்வதில் மிகுந்த ஆர்வங்கொண்டு அயல் நாட்டிலிருந்து இறக்குமதியாகும் உணவுப் பொருள்கள் ஆலைச் சரக்குகள் முதலியவைகளின் மீது மிகப் பளுவான வரிகளை விதிக்கின்றனர்; அவைகளில் சிலவற்றை இறக்குமதி செய்யக் கூடாதென்று சட்டங்களை இயற்றுகின்றனர். தேசிய அரசு ஒவ்வொன்றும் இத்தகைய சுயநல வர்த்தக முறையைக் கையாளுகின்றமையால் உலக வர்த்தகம் மந்தம் அடைந்து சீர்குலைகின்றது. ஆலை முதலாளிகள், நாட்டு மக்களின் தேவைக்கு அதிகமாக சிற்சில சமயங்களில் சரக்குகளை உற்பத்தி செய்கின்றனர். அவ்வகளை உலகில் இதர நாடுகளில் விற்க வசதியில்லாமல் தங்களுடைய ஆலைகளில் வேலை நிறுத்தம் செய்கின்றனர். அதனால் பாட்டாளி மக்கள் வேலையில்லாது திண்டாடுகின்றனர். முதலாளிகளுக்கும், அவர்களுக்கும் துவேஷம் ஏற்படுகின்றது. ஆலை அடைப்பும், வேலை நிறுத்தமும் நாட்டின் அமைதியை குலைக்கின்றன. சுயநல வர்த்தக முறையை கைவிட்டு யதேச்சாவர்த்தகக் கொள்கையைக் கடைபிடிப்பாரெனின் உலகில் மக்கள் செழிப்புற்று அமைதியுடனும் திருப்தியுடனும் வாழ்வாரென்பது திண்ணம். ஆனால் தேசியத்தின் பெயரால் சில வகுப்பினர் மக்கள் யதேச்சா வர்த்தகத்தை மேற்கொள்ளாதிருக்கும்படி அவர்களைத்

தூண்டுகின்றனர். அவர்களது சுயநலத்தையும் பேராசையையும் தேசிய மென்னும் போர்வை மக்களின் கண்களிற் படாது மறைக்கின்றது.

தேசியம், இராணுவம், கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் முதலியவைகளை அதிகரிப்பதில் மக்களை ஈடுபடச் செய்வதுமன்றி ஏகாதிபத்திய கொள்கையையும் அவர்களை பின்பற்றும்படி செய்கின்றது. தங்களுடைய ஆலைகளுக்கு போதுமான மூலப்பொருள்களை பெறுவதிலும் ஆலைச் சரக்குகளை தகுந்த லாபத்துடன் எளிதில் விற்பதிலும் நோக்கங் கொண்டு அவர்கள் அயல் நாடுகளைக் கைப்பற்ற முற்படுகின்றனர். ஜப்பானியர், மஞ்சூரியாவையும் கொரியாவையும் ஆக்கிரமித்ததின் காரணம் தன்னல வர்த்தகக் கொள்கையன்றோ? சீனுவுடன் அண்மையில் அவர்கள் போர் புரிந்ததற்கும் அதுவே காரணமன்றோ? ஜெர்மானியர் பிரிட்டிஷ் மக்களின்மீது துவேஷங் கொண்டு இந்நூற்றாண்டில் இருபெரும் யுத்தங்களில் இறங்கியதின் காரணமென்ன? தங்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களைப் பெறுவதற்கும் தங்களுடைய ஆலைச் சரக்குகளை விற்பதற்கும் தகுந்த வசதிகள் இன்மையால் அவர்கள் பிரிட்டிஷ் மக்களுடன் யுத்தம் தொடுத்தனர். ஏனெனில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழித்தாலன்றி தங்களுடைய வர்த்தகத்தை அதிகரிக்க முடியாதென்று அவர்கள் கருதினர். இத்தாலியர் அபிஸீனியாவைக் கொள்ளையிட்டதற்கும் அல்பேனியா தேசத்தை கைப்பற்றியதற்கும் காரணம் தன்னல வர்த்தகக் கொள்கையே ஆகும். தேசியத்தினுற் தூண்டப்பெற்று சாம்ராஜ்ய படுகுழியில் வீழ்ந்து உழலும் அரசுகள் தங்களுடைய இராணுவத்தை அதிகரிப்பதற்குப் பெருவாரியாக பொருளைச் சிலவுசெய்கின்றன. ஒவ்வோர் அரசும் அவ்வாறு செலவு செய்வதினுல் மக்கள் வரிப் பழுவை தாங்காது தயங்கு கின்றனர். இராணுவத்திற்காகச் செலவுசெய்யப்படும் பொருளை மக்களின் அறிவையும், சுகாதாரத்தையும் பேணுவதில் செலவு செய்திடின் உலகம் சுபிட்சமாய் இருக்குமன்றோ?

தேசியவாதிகள் தம் மக்களிடையில் அயல்நாட்டாரின் மீது வெறுப்பையும், பொறுமையையும் எழச் செய்கின்றனர். அந்நிய மொழி, பழக்கவழக்கங்கள், நாகரீகம் முதலியவைகளைப் பற்றி மக்களுக்கு வெறுப்பு உண்டாகும்படி செய்கின்றனர். சகிப்பின்மையை வளர்க்கின்றனர். இடைக்காலத்தில் மதம் மக்களிடை சகிப்பின்மையை எழச்செய்து அவர்களை போரில் இறங்கும்படி செய்தது. கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் தொடுத்த போர்கள்தான் என்னே! கத்தோலிக்கர்களும், பிராட்டெஸ்டன்டுகளும் மதவெறி கொண்டு எத்தகைய கோரமான போர்களை புரிந்தனர். இன்று மதத்திற்குப் பதிலாக தேசியம் மக்கள் மனதைக் கவர்ந்து சகிப்பின்மையை எழச் செய்கின்றது; அவர்களைப் போர்புரியும்படி தூண்டுகின்றது. ஆகவே, இராணுவப் பெருக்கு, சகிப்பின்மை, குறுகிய மனப்பான்மை, சுயநல வர்த்தகக் கொள்கை, நன்மை தீமைகளைப் பகுத்தறியப் பயப்படுதல், யுத்தவெறி, அகந்தை, ஏகாதிபத்திய மோகம் இவைகள் யாவும் தேசியத்தின் தீமைகளாகும்.

---

# அத்தியாயம் 7

# தேசீயத்தின் எதிர்காலம்

## I. தேசீயத்தின் தன்மை

தேசிய உணர்ச்சியின் நன்மைகளையும் தீமைகளையும் முன் அத்தியாயத்தில் படித்தோமல்லவா? மானிட வர்க்கத்திற்கு பெரும்பாலும் தீமையையே தேசியம் விளைவிக்கும் இயல்புடையதென்று நாம் கருதலாகும். இவ்வியக்கம் உலகில் நிரந்தரமாய் நிலைத்து நிற்குமா, அல்லது உளுத்துச் சிதைந்துபோன பற்பல கொள்கைகளைப் போல இதுவும் மங்கி மறைந்து விடுமா? இதன் எதிர்காலமென்ன என்பதை இவ்வத்தியாயத்தில் ஆராய்வோம்.

மக்களிடையில் இன்று தேசிய உணர்ச்சி செழிப்புற்றிருக்கின்றது. அதை நாம் போற்றினாலும், அல்லது தூற்றி

னும் அது பாதிக்கப்படாதென்பது திண்ணம். பொங்கி எழும் தேசிய உணர்ச்சியை நம்மால் மட்டுப்படுத்தி மங்கி மறையச் செய்வதியலாததாகும். தேசீயம் அண்மைக் காலத்தில் தோன்றிய ஓர் இயக்கமே ஆயினும், அதன் ஆணிவேர் மக்களிடையில் ஆதிமுதலே பலம் பெற்றிருந்ததென்பதை மறுக்கமுடியாது. தேசீயத்தின் அடிப்படையான இன உணர்ச்சி உலகில் தோன்றுதொட்டே இருந்து வருகின்றது. மனிதர் தமது உடைகள், அரசியல், தத்துவ ஞானம், மதம் முதலியவைகளைப் பற்றித் தாங்கள் கொண்ட கொள்கைகளை மாற்றிக்கொள்ளக் கூடும். ஆனால் அவர்களுக்கு, அவர்களுடைய மூதாதையர்களையும், தந்தையையும், தாயையும், மாற்றமுடியாதன்றோ? ஆதலால் இன உணர்ச்சியை மூலாதாரமாகக் கொண்ட தேசீயம் மங்கி மறையுமென்று கருதுவது மானிட இயற்கைக்கு முற்றிலும் முரணாயிருக்கின்றது. மனிதர்களிடையில் இன வேற்றுமைகளையும், வித்தியாசங்களையும் வலுவுறச் செய்து நாகரீகத்தை அழகுபடுத்தி தேசீயம் பலம் பெறுவதால், அது நாளடைவில் வளர்ச்சியுறுமேயன்றி சிதைந்துவிடாது; சர்வதேசங்களின் ஐக்கியத்தால் அதை அழித்துவிடலாமென்று கருதுவது சரியன்று. தேசீய அரசியலமைப்பு பலமாயிருப்பதால் சர்வதேச சங்கத்தால் அதைச் சிதைக்க முடியாது. மக்களின் பொருளாதார நிலைமையை அழிக்கவோ, அல்லது சிறப்புற ஆக்கவோ அரசே சிறந்த கருவியாதலால், தேசீய மக்கள் அதை ஆதரித்து அதற்காக பெரும் தியாகங்கள் செய்யத் துணிகின்றனர். தொழிலாளர் இயக்கம் ஒவ்வொரு தேசத்திலும், தேசீயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. காதலைப்போல தேசீயமும் மக்களை வரம்பு மீறி நேர்மையற்ற செயல்களைச் செய்யும்படித் தூண்டக்கூடும். ஆனால் தேசீயத்தால் தூண்டப் பெற்று அரும் பெரும் செயல்களை அவர்கள் ஆற்றுகின்றனரென்பது மறக்கற்பாலது. ஆகவே இன உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட தேசீயத்தை ஒழிக்கமுடியுமென்று கருதுவது முற்றிலும் தவறேயாகும். அங்ஙனமாயின் தேசீயத்தால் விளையும் அகங்

காரம், பேராசை, சுயநலம், அதிகார மோகம், போரிற் பற்று, மிருகத் தன்மை, பிறரைச் சுரண்டி வாழும் சுபாவம் முதலிய தீமைகளால், மானிட வர்க்கம் நிரந்தரமாய் என்றும், எப்பொழுதும் பாதிக்கப்பட வேண்டியது தானே என்ற பிரச்னை எழுவது இயல்பே. கூர்ந்து ஆராய்ந்திடின் உலகின்கண் ஒன்றும் தனி நன்மையையே தரக்கூடிய தன்மை வாய்ந்தது மன்று; அல்லது முற்றிலும், தீமையையே அது விளைவிப்பதுவுமன்று. நல்ல பாம்பின் விஷம் பொதுவாக உயிருக்கு உலையே எனினும், சிற்சில சமயங்களில் சில உயிர்களைக் காப்பாற்றும் சக்தி அதற்குண்டு. தீராத சில பிணிகள் பாம்பின் விஷத்தால் மாறும் இயல்புடையன. தீமையிலும் நன்மையிருப்பதால் தீயவைகளை விலக்கி நன்மையைக் கிரகித்துக் கொள்வது அறிவுள்ள மக்களின் கடமையாகும். தேசீயம் தீமையை விளைவிக்கக் கூடியதெனினும், அதிற் பல நன்மைகள் பொதிந்து கிடக்கின்றன வென்பதை நாம் மறக்கக்கூடாது. நாம் அதை ஒழிக்கத் துணிந்தாலும், அது ஒழியும் இயல்புடையதன்று. ஆகவே, அறிவுடைய மக்களுக்குகந்த முறை, அதன் தீமைகளை விலக்கி நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்வதாகும்.

## II. உலக ஒற்றுமைக் கருவிகள், போக்குவரவு வசதிகள்

தேசீயத்தினால் விளையும் தீமையை அகற்றுவிடில் மானிடவர்க்கமும், உலக நாகரீகமும் பாழாகுமென்று நாம் தயங்காது கூறலாம். ஆனால் இன்று மனிதர்களிடையிற் தோன்றியுள்ள சில இயக்கங்கள் தேசீயத்தின் தீமைகளை மட்டுப்படுத்தும் இயல்புள்ளன. அவைகள் சுயமாகவே தூண்டுதலின்றி தேசீயத்தைக் கட்டுப்படுத்துமென்று நாம் கருதுவது தவறாகும். அறிஞர்கள் தேசீயத்தின் தீமையை ஒழிப்பதற்கு விடா முயற்சி செய்யவேண்டும். முதற்கண் தொழிற்புரட்சியின் சாதனங்களான நீராவிக் கப்பல், ரெயில்ப் பாதை, மின்சார மோட்டார், தந்தி, டெலிபோன், வானொலி முதலியவைகள் மனித வர்க்கத்தை ஒன்று சேர்க்கும் தன்மை உடையன.

ஆழி சூழ் இவ்வுலகு இச் சாதனங்களின் விளைவாக இன்று ஒரு சிறிய நாட்டைப்போல சுருங்கிவிட்டதாகத் தோன்றுகின்றது. விஞ்ஞான ஆராய்ச்சி வளர்ச்சியால் வாயுவேக, மனோவேகத்தில் செல்லக்கூடிய போக்குவரவு சாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அட்லாண்டிக் சமுத்திரத்தை இன்று ஒருவர் சில மணி நேரங்களில் கடந்து செல்லக்கூடும். காலையில் சிற்றுண்டி அருந்தி, சென்னையிலிருந்து கல்கத்தா, கராச்சி, டில்லி, பம்பாய் முதலிய நகரங்களுக்கு ஆகாய மார்க்கமாய்ச் சென்று விஷயங்களைக் கவனித்துப் பின்னர் இரவில் விமான மூலம் சென்னைக்குத் திரும்பவும் நமக்கு வசதிகள் இருக்கின்றன. தன் வீட்டை விட்டகலாமல் உலக விஷயங்களை வானொலி மூலமாக ஒருவர்க்கு அறியமுடியும். கம்பியில்லாத் தந்தி, டெலிபோன், டெலிவிஷன், சினிமா முதலிய நவீன சாதனங்கள் காலத்தையும், தூரத்தையும் அர்த்தமற்றவைகளாகச் செய்கின்றன. ஆகாய விமானங்களும் நீராவிக் கப்பல்களும் இப்பொழுது செல்வதைவிட பன்மடங்கு அதிக வேகத்துடன் எதிர்காலத்தில் செல்லக்கூடும். இத்துணை வசதிகள் ஏற்பட்ட இந்நாளில் இவ்வகண்ட பூமியில் வாழும் மக்கள் பிரிந்து சம்பந்தமற்று தனித்திருக்க முடியுமா? ஒரு நாட்டில் ஏற்படும் புரட்சி, விஞ்ஞான முன்னேற்றம், பொருளாதார நெருக்கடி, வர்த்தக மந்தம், தொற்றுநோய் முதலியன போக்குவரவு வசதிகளினால், இதர தேசங்களுக்கும் பரவும் தன்மை உடையன. ஆகையால் மக்கள் தமக்குள் அந்நியோந்நியமாய் இருக்கும் மனப்பான்மையை அறிஞர்கள் வளர்ப்பதே தகுந்தது. மேலும், உலக வர்த்தகத்தையும், ஏராளமாகப் பொருள் உற்பத்தியையும் தொழிற்புரட்சி விளைவிக்கும் இயல்புடையது. ஆகையால் எப்பாகமும் தனித்து நின்று தனக்கு வேண்டும் பொருள்களை உற்பத்தி செய்து கொள்ளக் கூடுமென்று கருதுவது சரியன்று. இரும்புத் தண்டவாளங்களாலும், செப்புக் கம்பிகளாலும், மின்சார சக்தியினும் பிணைக்கப்பெற்ற இற்றைய உலகில் கலிபோர்னியாவாசி ஒருவருக்கு, ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா,

ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களோடு எளிதில் வர்த்தகம் செய்ய வசதிகள் உள்ளன. ஆனால் இருநூற்றாண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வடக்கிலிருக்கும் நியூயார்க் நகரிலிருந்து தெற்கிலிருக்கும் வெர்ஜீனியா நகரத்திற்கு செல்வது எளிதன்று.

## III. கருத்துகளும் விஞ்ஞான வளர்ச்சியும்

பொருளாதாரத் துறையைப்போல கருத்துகளும், மக்களை பிணைக்கும் இயல்பு உடையன. ஒரு தேசத்தில் தோன்றும் கருத்துக்கள் விரைவில் உலகெங்கும் பரவும் தன்மை வாய்ந்தன. ஜனநாயகம் ஆங்கிலேயரிடையில் முதலில் வளர்ச்சியுற்றதெனினும், அது இன்று உலகெங்கும் பரவியிருக்கிறதன்றோ? சுதந்திரம், சமத்வம், குடியரசு முதலிய கொள்கைகள், முதலில் அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ் முதலிய நாடுகளில் தோன்றினதெனினும், இன்று உலகில் பல பாகங்களிலும் பரவியிருக்கின்றதன்றோ? விஞ்ஞான ஆராய்ச்சியின் பயன் ஒரு தேசத்தோடு மட்டும் நிற்காது உலகெங்கும் பரவுகின்றது. நீராவிக் கப்பலை வெற்றிகரமாக முதற்கண் செய்தவர் ஐரிஷ் இனத்தைச் சார்ந்த அமெரிக்க ஐக்கிய நாட்டினர் ஒருவர். டெலிபோனை முதலில் அமைத்தவர் ஸ்காட்ச் இனத்தைச் சார்ந்த அமெரிக்க ஐக்கிய நாட்டினர். ஆகாய விமானத்தை வெற்றிகரமாகச் செய்தவர்கள் ஆங்கில இனத்தைச் சார்ந்த ரைட் என்னும் இரு அமெரிக்கச் சகோதரர்கள். ஆனால் இன்று நீராவிக் கப்பலும், டெலிபோனும், ஆகாய விமானமும் உலகில் எப்பாகத்திலும், உபயோகப் படுத்தப்படுகின்றன அன்றோ? வாயுவால் இயக்கப்படும் எந்திரம் முதன்முதலாக ஜெர்மனியில் செய்யப்பட்டது. பிரெஞ்சு மக்கள் அதை உபயோகித்தனர். ஆனால் இன்று அமெரிக்க ஐக்கிய நாட்டில் பல்லாயிரக் கணக்கில் அவ்வியந்திரங்கள் செய்யப்பட்டு மோட்டார்களுக்கு உபயோகப் படுத்தப்படுகின்றன. வானொலியை இன்று நாம் அனுபவிக்கின்றோம். ஆனால் அதை முதன் முதலாக உலகிற்களித்தவர் மார்க்கோனி என்னும் இத்தாலிய

விஞ்ஞானி யாவார். இரணம் ஆறுதிருப்பதற்கும் பல நோய்கள் உண்டாவதற்கும் காரணம் கிருமி என்று நாம் அறிவோம். ஆனால் இவ்வறிவை உலகுக்கு முதன்முதலாய் ஈந்தவர் பாஸ்டியர் என்னும் பிரெஞ்சு வைத்திய நிபுணர். மதிப்பற்ற விலையுடைய ரேடியம் என்னும் வஸ்துவை மானிட வர்க்கத்தின் நலனுக்காக ஈந்தவர் மேடம் க்யூரி என்னும் போலந்து விஞ்ஞான நாரீமணி யாவர். விஞ்ஞானஅறிவு அணுகுண்டு, மரணக் கதிர்கள், முதலிய பயங்கரக் கொலைக் கருவிகளை உலகிற்களித்திருக்கின்றதெனினும், மானிட வர்க்கத்தின் நலனுக்காக பற்பல சாதனங்களை ஈந்திருக்கின்றதென்பதை மறுக்கற்பாலது. மேற்கூறியவைகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளக் கூடியது என்னவெனில், எவ்வினமும், எப்பாகமும் உலகில் தனித்து நிற்க இயலாதென்பதே யாகும். மேலும் தீவிர தேசீய உணர்ச்சியை மட்டுப்படுத்த வேண்டியதின் அவசியத்தை அவை நன்கு விளக்குகின்றன.

## III. உலக மக்களின் ஒத்துழைப்பு

சென்ற நூறு வருஷங்களாக உலக மக்களில் அநேகர் பல்வேறு துறைகளில் ஒத்துழைத்து நன்மை பயன்று வருகின்றனர். 1875-ல் முப்பது தேசீய நாடுகள் ஒன்று சேர்ந்து உலகத் தந்திச் சங்கம் ஒன்றை அமைத்தன. 23 நாடுகள் ஒரேவிதமான நிறைகளையும் அளவுகளையும் உபயோகிக்க தங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டன. 1878-ல் 60 நாடுகள் ஒன்று சேர்ந்து உலகத் தபால் சங்கம் ஒன்றை நிறுவின. 1883-ல் பத்தொன்பது நாடுகள் பதிப்புரிமைச் சட்டங்களை ஒரே மாதிரி சீர்திருத்தி அமைத்தன. வர்த்தகம், குடியேற்றம், குற்றவாளிகளைக் கைது செய்தல் முதலிய விஷயங்களில் பல நாடுகள் ஒத்துழைக்க இசைந்தன. ஐரோப்பிய வல்லரசுகள் கான்சர்ட் என்னும் பொது ஸ்தாபனம் ஒன்றை நிறுவி தங்களுக்குள் ஏற்படும் சச்சரவுகளையும், வாதங்களையும், சமாதானமாக முடிவு செய்ய ஒப்புக்கொண்டன. 1856-ல் நடந்த பாரிஸ் உடன்படிக்கையை ஐரோப்பிய வல்லரசுகளும், துருக்கியும்

செய்துகொண்டன. 1864-ல் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் பல நாடுகளின் ஒத்துழைப்பால் அமைக்கப்பெற்றது. மத்திய ஆப்பிரிக்காவிலும் சீனுவிலும் எத்தேசத்தவரும் தடையின்றி வர்த்தகம் செய்து கொள்ளலாம் என்று ஐரோப்பிய கான்சர்ட்டே தீர்மானித்தது. மேலும், ஐரோப்பிய வல்லரசுகளும், அமெரிக்க ஐக்கிய நாடும், ஜப்பானும் ஒத்துழைத்து சீனுவில் ஏற்பட்ட பாக்சர் கலகத்தை அடக்கின. 1881-ல் அமெரிக்கா கண்டத்தில் யுத்தத்தை எவ்வாறு தடுப்பது என்ற பிரச்னை வாஷிங்டனில் கூடிய அமெரிக்க பிரதிநிதிகளால் பரிசீலனை செய்யப்பட்டது. அதன் பின்னர் மெக்ஸிகோ, ரியோடிஜெனிரோ, பியூனஸ்அயர்ஸ் முதலிய நகரங்களில் அகில அமெரிக்க பிரதிநிதிகள் கூடி அமெரிக்காவின் பாதுகாப்பிற்காக நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டனர்.

ஹேக் நகரில் இரண்டு மகாநாடுகள் 1899-லும், 1907-லும் கூடின. இரண்டாவது மகாநாட்டில் 44 தேசங்கள் கலந்துகொண்டதனுல் அதை ஒரு சர்வதேச மகாநாடு எனக் கூறலாம். இராணுவத்தைக் குறைப்பதற்கு அம் மகாநாடுகள் அரும்பாடுபட்டனவெனினும், அவை வெற்றி பெறவில்லை. ஆனுல், உலக நீதிமன்றம் ஒன்றை அவைகள் ஸ்தாபித்தன. இருநாடுகள் போரிலிறங்குமுன் தங்களுக்குள் ஏற்பட்ட தகராறுகளை அந் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கவேண்டுமென்று அங்கத்தினர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

**சர்வதேச சங்கம்:**—சர்வதேச சங்கம் அகில அமெரிக்க மகாநாடுகளையும், ஐரோப்பிய கான்சர்ட்டையும் விட மிகவும் மகத்துவம் வாய்ந்ததாகும். அது முதல் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் ஸ்தாபிக்கப்பெற்றது. அதன் தலைநகர் ஜினிவா. தீவிர தேசீயத்தை மட்டுப்படுத்தி உலக மக்களின் நன்மைக்காக உழைக்க அச்சங்கம் நிறுவப்பட்டது. வல்லரசுகள் தங்கள் படைகளைக் குறைக்கவில்லையெனினும், அவைகள் பிறரைச் சுரண்டி வாழும் கொள்கையைக் கைவிடவில்லையெனினும்,

சர்வதேச சங்கம் இவ்விஷயங்களில் தான் எடுத்துக் கொண்ட முயற்சியில் வெற்றியடையவில்லை யெனினும், அது உலக நாகரீகத்தைப் பாதுகாக்கப் பலதுறைகளிலும் உழைத்து வந்தது. இவ் வரசியல் சங்கத்தைத் தவிர உலக மக்கள் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைக்கத் தொடங்கினர். சமதர்மக் கொள்கையினரின் சர்வதேச மகாநாடென்ன! கூட்டுறவு இயக்கத்தினரின் மகாநாடுக ளென்ன! மாதர்கள் மகாநாடுகளென்ன! மதத் தலை வர்களின் மகாநாடுகளென்ன! இவைகளனைத்தும் தீவிர தேசிய உணர்ச்சியைப் புறக்கணித்துப் பேரறிஞர்களால் உலக மக்களின் நலனுக்காகக் கூட்டப்பட்டவைகளா கும். உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள், வரலாற்று ஆசிரியர்கள், பொருளாதார நிபுணர்கள், மருத்து வர்கள், வழக்கறிஞர்கள் முதலியோர் மகாநாடுகளைக் கூட்டி மக்களின் நலனைப் பேண முன்வந்தனர். ஆகவே, மானிடருள்ளத்தில் வளரும் இச்சர்வதேச உணர்ச்சியைப் பெருக்கித் தீவிர தேசியத்தை ஒழித்து உலக மக்களை சுபிட்சமாய் வாழச் செய்வது நடைமுறையில் இயலாத பிரச்னையன்று. உலக மக்கள் மேற்கூறிய துறைகளில் எல்லாம் ஒத்துழைக்கின்றனரன்றோ? அவர்களுடைய ஒத் துழைப்பை உலக சமாதானத்தின் பொருட்டுப் பெறுவது அரிதன்று.

## IV. சர்வதேச உணர்ச்சியும் உலகப் பொது உணர்ச்சியும்

சர்வதேச உணர்ச்சி உலகப் பொது உணர்ச்சியி லிருந்து, பலவிஷயங்களில் வேறுபட்டிருக்கின்றது. சர்வ தேச உணர்ச்சியைப்போல உலகப் பொது உணர்ச்சியும், உலக அரசு ஒன்றையே குறிக்கோளாக உடையதென்பது உண்மையே. ஆனால் உலகப் பொது உணர்ச்சியுள்ள மக்கள் ஒவ்வொரு தனி நபரையும், சமுதாய வகுப்புகளை யும் உலக அரசின் குடிகளாகக் கொள்கின்றனர். சர்வ தேச உணர்ச்சி அதை அங்கீகரிக்கவில்லை. அது ஒவ் வொரு இனத்தரசையும் அடிப்படையாகக் கொண்டாக் கப்படவேண்டியதாகும். பொதுமொழி, பழக்க வழக்கங்

கள் முதலியவை ஒவ்வொரு இனத்திற்கும் இன்றியமை யாதவைகளாகக் கருதப்படும். ஒவ்வொரு தனி நபரின் அரசியல் பக்தியும், விஸ்வாசமும் முதற்கண் இன அரசுக் கும், பின்னர் உலக அரசுக்கும் பாத்தியப்படும். சர்வ தேச அரசு தேசிய அரசுக் கற்களால் அமைக்கப்பட வேண்டும். ஆனால் உலகப் பொது அரசு தேசியத்தை நசுக்கும் இயல்பு வாய்ந்தது. மக்களை இனம், மொழி, பழக்க வழக்கங்கள், மதம் இவைகளிற் பேதமின்றி ஒரே நிலைமைக்குக் கொண்டுவருவதில் அது ஈடுபடும். அது தேசி யத்தை விஷம் என வெறுக்கும் தன்மை வாய்ந்தது. நடை முறையில் அத்தகைய அரசு எழுமென்பது ஐயமே. ஏனெ னில் சர்வதேச அரசின்கீழ் தேசியமொழி, நாட்டுப் பழக்க வழக்கங்கள், மக்களின் குறிக்கோள்கள் முதலியவை சிறப் புற்று விளங்க வசதியுண்டு. சர்வதேச அங்கத்தினர்கள் ஒவ் வொருவரும் இதர தேசிய மக்களுடன் இசைந்து வாழவும், மானிடவர்க்கத்தின்மீதும், தாய் நாட்டின்மீதும் அன்பு கூரவும் வழியிருக்கின்றது. சுயநல தேசியத்தாலோ, அல்லது உலகப் பொது உணர்ச்சியினாலோ மக்கள் முன் னேற்றமடைவார்களென்று கருதுவது தவறாகும். தாய் நாட்டின்மீது அன்பும், மக்களின்மீது அன்புங் கலந்த உயரிய உணர்ச்சி உலகப் பொது உணர்ச்சிபெற்ற மக்க ளிடம் எழுவது அரிதாகும்.

## V. சர்வதேச உணர்ச்சியும் கல்வி முறையும்

சர்வதேச உணர்ச்சியை மக்களிடையில் வளர்ப்பதற்கு கல்வி முறையை சீர்திருத்தி அமைக்கவேண்டும். பள்ளிக் கூடங்களிலும், பத்திரிகைகளிலும் சர்வதேசப் பற்று ஒன்றே மக்களுக்கு நன்மை பயக்கும் என்று பறைசாற்றப் படவேண்டும். குறுகிய நோக்கத்தை அறவே ஒழித்துத் தாராள மனதுடன் உலக மக்களோடு பழகும்படி பொது மக்களைத் தூண்டவேண்டும். சுய சிந்தனையையும், ஆராய்ச்சி மனப்பான்மையையும் அதிகரிக்கும் விதத்தில் நவீன கல்விமுறையைச் சீர்திருத்தி அமைக்கவேண்டும்.

கல்வி ஒன்றே சர்வதேச உணர்ச்சியை ஊட்டும் மருந்து. சாஸ்திரங்கள் பொதுப்படையாய் மானிடரின் இயல்பைக் கூறுகின்றதேயன்றி ஆங்கிலேயர், டச்சு மக்கள், ஜெர்மானியர் முதலிய தேசிய இனங்களின் இயல்பைக் கூறவில்லை. உதாரணமாகத் தர்க்க சாஸ்திரம் மானிடரின் தர்க்கமுறைகளை விவரிக்கின்றனவே யன்றி ஆங்கிலேயர், பிரெஞ்சு மக்கள் முதலியவர்களின் தர்க்க முறையை விவரிக்கவில்லை. அரசியல், பொருளாதாரம் இவைகளைக் குறிக்கும் நூல்கள், தர்க்க சாஸ்திரத்தைப் போல பொதுப்படையாக மானிட வர்க்கத்தின் இயல்பை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் இவர்களின் பொருளாதாரத்தைப் பற்றி அவைகள் கூறவில்லை. விஞ்ஞானம், கலைஅறிவு, உயரிய குறிக்கோள்கள் முதலியன ஒரு கூட்டத்திற்கும் தனியாகச் சார்ந்தவையல்ல. அவைகள் மானிட வர்க்கத்திற்கு பொதுவானவைகள். சுயநல தேசியத்தையும், இனப்பற்றையும் மக்களிடையில் பள்ளிகளின் மூலமாகப் பரப்புவதைவிட, அப்பள்ளிகளையே மூடிவிடுவது நன்று. வெறுப்பையும், நாசத்தையும் போதிக்கும் கல்வி முறை உகந்ததன்று. அத்தகைய கல்வியைவிட அறியாமையே மிகவும் நன்று.

இன்று உலகில் சர்வதேச உணர்ச்சிக்கும், தீவிர தேசியத்திற்கும் போட்டிப் பந்தயம் ஒன்று நடைபெறுகின்றது. சர்வதேச உணர்ச்சி வெற்றி பெற்றாலன்றி நாகரீகமும் அமைதியும் நிரந்தரமாயிராதெனத் திண்ணமாய்க் கூறலாம். அவ்வுணர்ச்சி வெற்றி பெறவேண்டுமெனின் கல்விமுறையைத் திருத்தியமைப்பதே நன்று. தம் இனமே சிறந்தது; தமது நாகரீகமே போற்றுதற்குரியது என்ற குறுகிய மனப்பான்மை ஒழிவதற்காக மக்கள் ஒவ்வொரு நாட்டின் சரித்திரத்தைத் தெரிந்து கொள்வதற்குப் பதிலாக உலக வரலாற்றைப் பொதுப்படையாகக் கற்கவேண்டியது இன்றியமையாததாகும். உண்மையான தேசாபிமானத்தை உடையோர் அடக்கத்துடனும்,

அமைதியுடனும் தம் நாடு பல்வேறு துறைகளிலும் மேம்பாடடையும்படி உழைப்பர். இத்தகைய தேசியம் உலக மக்களுக்கு தீமையை விளைவிக்காது.

## VI. சர்வதேச சங்கத்தின் அவசியமும் அதன் தன்மையும்

ஒவ்வொரு இனத்திற்கும், அந்நியரின் ஆக்கிரமிப்பின் பயமின்றி அரசு அமையப்படுமெனின், அவ்வினம் நாகரீகத்தில் சிறந்து உலக மக்களின் அமைதியையும், ஆனந்தத்தையும் அதிகரிக்கச் செய்யுமென்று கூறலாகும். இன அரசு அமைக்கப்பட வேண்டுமென்று கருதுவது ஒரு விஷயம். ஆனால் அவ்வரசு ஆதிபத்தியத்துடன் அமைக்கப்பட வேண்டுமென்று கொள்வது பிறிதொரு விஷயம் ஆகும். ஆதிபத்தியம் உரிய அரசு அந்நியரின் ஆக்கிரமிப்பைத் தடுக்கும் நோக்கத்துடன் தனது இராணுவத்தை அதிகரிக்கின்றது. சக்தியைப் பெருக்கும் எண்ணத்துடன் சக்தியைப் போற்றுகின்றது. தேசிய அரசின் சுயநலமே 1914-லும், 1939-லும் இரு உலக மகா யுத்தங்களை மூட்டியது. தனது எல்லைகளைத் தீர்மானிக்கும் உரிமை ஒரு சுதந்திர நாட்டிற்கு அளிக்கப்படுமெனின் அந்நாடு தன் எல்லைகளை நிர்ணயிக்கும் பொழுது, அண்மையிலுள்ள பிற நாடுகளின் எல்லைகளையும் தீர்மானிக்கும்படி நேர்கின்றது. ஆதலால் ஒரு தேசிய நாட்டின் ஆதிபத்தியத்தை வெளி விஷயங்களில் கட்டுப்படுத்துவது இன்றியமையாததாகின்றது. மேலும், தேசிய அரசு ஒன்று தன் இஷ்டம் போல தனது இராணுவத்தைப் பெருக்குமெனின் இதர அரசுகள் அச்செய்கையால் பீதியடைந்து, அவைகளும் தங்களது படைகளைப் பெருக்குவதில் ஈடுபடுகின்றன. தனது வர்த்தகத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் பிற அரசுகளுடன் ஒரு தேசீய நாடு பொருளாதார உடன்படிக்கைகளைச் செய்கின்றது. தனது ஆலைச் சரக்குகளை விற்பதற்கும், அவைகளை உற்பத்தி செய்யும் பொருட்டு கச்சாப் பொருள்களைப் பெறுவதற்கும், உலகில் பல பிரதேசங்களில் குடியேற்றங்களை அமைப்பதற்கும், அது சாத்யப்படவில்லை யெனின் அப்பிரதேசங்களில் தன் ஆதிக்

கத்தை ஸ்தாபிப்பதற்கும் முயற்சிக்கின்றது. ஆப்பிரிக்கா கண்டம், ஐரோப்பிய மக்களால் அவ்வாறு தங்களுக்குள் பங்கிடப்பட்டது. தேசீய நாடுகள் இவ்வாறு போட்டியிடுமெனின், கோரமான போர்கள் யெழுமென்பதில் ஐயமில்லை. மானிட நாகரீகமே இத்தகைய போர்களினுல் பாழடைவது திண்ணம். ஆகவே, பதின்மூன்ருவது நூற்ருண்டில் சைமன்டிமான்ட்பார்ட் என்னும் ராஜதந்திரி, ஆங்கில மக்களிடம், பார்லிமென்டைக் கூட்டுவதற்குமுன் கூறிய பொன் மொழி இன்று உலகம் முழுமைக்கும் தகுந்ததென்று கொள்ளலாகும். உலகமக்களைப் பாதிக்கக் கூடிய விஷயங்களை அவர்களே தீர்மானிக்க வேண்டுமேயன்றி அவர்களுக்காக ஒன்றிரண்டு வல்லரசுகள் தீர்மானிப்பது சரியன்று. அவ்வாறு தீர்மானிப்பதற்கு சர்வதேச அரசு ஒன்றை அமைத்தல் நன்று. தேசீய அரசுகளை அவ்வரசின் பகுதிகளாக அமைத்தல் வேண்டும். குடியேற்றப் பிரச்னையை நியாயமாகத் தீர்ப்பதற்கும், நாகரீகமடையாத மக்களைத் தன் பாதுகாப்பில் வைத்துக்கொள்வதற்கும் அவ்வரசுக்கு உரிமை யளிக்கப்பட வேண்டும்.

தேசீய நாடுகள் தங்களது ஆதிபத்தியத்தை இழக்க இசையுமோ என்று ஐயுறலாம். சென்ற நூற்ருண்டில் அந்நாடுகளின் ஆதிபத்தியத்திற்கு உலக நிலைமை பொருத்தமாயிருந்தது. நியூயார்க் நகரிலிருந்து லண்டனுக்கு ஒருவர் அக்காலத்தில் செல்ல வேண்டுமெனின் குறைந்த பக்ஷம் ஆறு வாரங்கள் ஆகும். இன்று ஒரே நாளில் லண்டனிலிருந்து விமானத்தில் புறப்பட்டு நியூயார்க்கை அடையலாம். உலகில் பல பாகங்களிலிருந்தும் மணி தவருமல் உணவுப் பொருள்கள் பிரிட்டிஷ் மக்களுக்குக் கிடைத்தாலன்றி அவர்கள் பசிப் பிணியால் துன்புறுவர். உலகின் பகுதிகள், இவ்வாறு ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருப்பதால் சென்ற நூற்ருண்டில் பாராட்டப் பெற்ற தேசீய நாட்டினுதிபத்தியம் இந்நூற்ருண்டில் திருத்தியமைக்கப்படவேண்டும். இன்றேல் மானிட நாகரீகம் மங்கி மறையுமென்று கூறலாம்.

நவீன உலகத்தில் போர் என்பது படைவீரர்களை மட்டுமின்றி சாதரண மக்களையும் வெகுவாய்ப் பாதிக்கக் கூடியதாகும். காலத்திற் கேற்ப நமது சட்டங்களையும், ஸ்தாபனங்களையும் திருத்தியமைக்க வேண்டும். அவ்வாறு அமைக்கத் தயங்கிடின் நாகரீகம் நசித்து மானிட வர்க்கமே கேடுறும்.

சென்ற நூற்ருண்டில் பொதுமக்கள் சுகாதாரம், ஆலைச் சட்டங்கள், பாட்டாளி மக்களின் நலனைப் பேணும் சட்டங்கள், கல்விச் சட்டங்கள் முதலியன இயற்றப்பட்டன அன்ரே? பதினெட்டாவது நூற்ருண்டில் இத்தகைய சட்டங்களை இயற்றும் அதிகாரம் அரசுக்குரியது என்று கருதப்படவில்லையல்லவா? தங்களுடைய நலனைத் தனி நபர்களே நிர்ணயிக்கும் ஆற்றல் உடையவர்களென்றும், இதர மக்கள் அந்நலனை சரிவர நிர்ணயிக்க முடியாதென்றும், ஆகவே, தனி நபர்களின் சுதந்திரத்திற்கு பங்கம் வராது அதைப் பாதுகாப்பதே அரசின் கடமை என்று கருதப்பட்டதல்லவா? அன்று போலீஸ் அதிகாரிகளைப் போல மக்களைப் பாதுகாத்து வந்த அரசு இன்று ஆலைச் சட்டங்கள், இரவலர் சட்டங்கள், வயோதிகர்களுக்கு உதவித் தொகையளிக்கச் சட்டங்கள், முதலாளிகளின் பொறுப்பைக் குறிப்பிடும் சட்டங்கள், பாட்டாளி மக்களின் கூலியை நிர்ணயிக்கும் ஸ்தாபனங்கள், அவர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்த போர்டுகள் முதலியவைகளை மக்களுக்கு அளித்திருக்கின்றதல்லவா? காலத்திற் கேற்ப அரசு தன் கொள்கையை உள்நாட்டு விஷயங்களில் திருத்தியமைத்துக் கொண்டதுபோல வெளிநாட்டு விஷயங்களிலும் தன் கொள்கையை மாற்றவேண்டும். பதினெட்டாவது நூற்ருண்டிலிருந்த போலீஸ் இலாகா அரசு, சென்ற நூற்ருண்டிலிருந்து மக்களின் நலனைப் பேணும் அரசாக மாறியதன்ரே? அவ்விதமே வெளிநாட்டு விஷயங்களில் பூரண சுதந்திரமுடைய அரசு, அச் சுதந்திரத்தை தன்னையும், உலக மக்களையும் பாதுகாப்பதற்காக இழக்கவேண்டியதே.

முதலாவது உலகமகாயுத்தத்திற்குப் பின்னர் நிறுவப்பட்ட சர்வதேச சங்கம் எத்தகைய குறைபாடுகள் உடைத்தாயினும், அது உலக மக்களின் ஒற்றுமை உணர்ச்சியை நன்கு விளக்கியது. அதை பூரண ஆதிபத்திய அரசுகளின் சங்கமாக அமைத்தது ஒரு பெருங்குறையே. அதன் நடவடிக்கைகளுக்கு அங்கத்தினர்கள் வேற்றுமையின்றி ஏகோபித்து மக்களின் வியவகாரங்களைத் தீர்மானிக்கவேண்டுமென்ற நிபந்தனை பிறிதொரு பெருங்குறையே. அமெரிக்க ஐக்கிய நாடு ஆதியிலிருந்து அச்சங்கத்தினின்று விலகி நின்றதும், ஜெர்மனியும், ரஷ்யாவும் அதிற் சேர்க்கப்படாததும் குறைகளேயாகும். இத்தகைய குறைகளை நீக்கி, உலக அரசு ஒன்றை அமைப்பது மக்களின் கடமை. தீவிர தேசியத்தைக் கட்டுப்படுத்த முடியாதெனக் கருதுவது முறையன்று. **ஆதிபத்தியமின்றி தேசீய உணர்ச்சியை அமைக்கவேண்டும்.** வல்லரசுகள் தங்கள் ஆதிபத்தியத்தைக் குறைத்துக்கொள்ளத் தயக்கமுறின் சர்வதேச அரசை அமைப்பது அரிதே.

## VII. சர்வதேச உணர்ச்சியும் முதலாளித்துவமும்

உலகின்கண் போர்கள் எழுவதின் முக்கிய காரணம் முதலாளிகளின் நலன் பாதிக்கப்படுவதேயாகும். தீவிர தேசிய உணர்ச்சி முதலாளித்துவத்திற்கு இணைபிரியாத் தோழன். மஞ்சூரியாவை ஜப்பானும், எகிப்தை பிரிட்டனும் கைப்பற்றியதன் காரணம், முதலாளிகளின் நலன் பாதிக்கப்பட்டதேயாகும். பிரிட்டிஷ் முதலாளிகளும், ஜப்பானிய முதலாளிகளும் தங்களரசுகளை யுத்தம் புரியுமாறு தூண்டினர். பொருள் பற்றி உண்டான யுத்தத்தைப் புனித யுத்தமாகப் பத்திராதிபர்கள் மூலம் முதலாளிகள் கற்பித்தனர். பாமர மக்களை தேசீயத்தின் பெயரால் யுத்தத்தில் ஈடுபடும்படிச் செய்தனர். தென் ஆப்பிரிக்காவில் டச்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் யுத்தம் மூண்டதின் காரணம் என்ன? பொன் மோகம் அன்றோ? ஜெங்கின்ஸ் காதுப் போர், ஏழாண்டுப் போர், இவைகள் மூண்டதேன்? முதலாளி நலன் பாதிக்கப்பட்டதாலன்றோ? பரம்பரை

வைரியான பிரான்சு இங்கிலாந்தின் நண்பனுக ஒரே இரவில் எவ்வாறு மாறியது? 1914-ல் ஆங்கிலேயரின் நண்பர்களாகயிருந்த ரஷ்யர்கள் 1918-ல் எவ்வாறு ஆங்கிலேயரின் கண்களுக்கு மிலேச்சர்களாகத் தோன்றினர்? முதல் உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டினரைப் பிரிட்டிஷ் மக்கள் எவ்வாறு கருதினர்? ஈவிரக்கமற்ற முதலாளிகளின் கூட்டம் என்றும், தயவு தாட்சணியமின்றி கொடுத்த கடனை வட்டியுடன் வாங்கும் கல்நெஞ்சத்தினரின் கூட்டம் என்றும் அவர்கள் கருதப்பட்டனரன்றோ? பிரிட்டிஷ் நண்பராகிய துருக்கி சுல்தானை மகா ஆல்பர்ட் அரசர்க்கு ஆங்கிலேயப் பத்திராதிபர்கள் கிரிமீயாப் போரின்போது ஒப்பிட்டார்கள் அல்லவா? துருக்கி சுல்தான் முதல் உலக மகாயுத்தத்தில் ஜெர்மானியருடன் சேரவே, அவரை அவர்கள் நன்றி கெட்ட அரக்கனுகத் தூற்றினுர்கள் அன்றோ? பாமர மக்கள் ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றல் உடையவர் அல்லர். எளிதில் பத்திராதிபர்கள் கூறுபவற்றை நம்புகின்றவர்கள். முதலாளிகளின் கையில் ஆதிக்கம் இருக்கும் வரையில் அவர்கள் பாமர மக்களை தங்களிஷ்டம்போல பத்திராதிபர்களின் மூலம் ஆட்டிவைப்பார்கள். அவர்களுடைய சுயநலத்தைக் கற்றோர்களே அறிந்துகொள்ளும் ஆற்றல் உள்ளவர்கள். ஆகையால் சர்வதேச உணர்ச்சி மக்களிடையில் பரவ வேண்டுமெனின் கல்வியை நேர்மையான முறையில் அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். யுத்த தளவாடங்களின் உற்பத்திக்காகச் செலவு செய்யப்படும் பொருளை ஆசிரியர்களின் பொருட்டும் கல்வி நிலையங்களின் பொருட்டும் செலவு செய்யவேண்டும். ஆனல் தேசிய நாடுகளில் யுத்த வீரர்களைப் பற்றி மாணவர்கள் போதிக்கப்படுகிறுர்களேயன்றி, மக்களின் அறிவை வளர்த்த விஞ்ஞானிகளைப் பற்றியும், பிணிகளை நீக்குவதற்காக மருந்துகளையும், கருவிகளையும் கண்டுபிடிப்பதில் தங்கள் வாழ்நாட்களைக் கழித்த வைத்திய நிபுணர்களைப் பற்றியும், மக்களை ஒழுக்கத்திலும், சன்மார்க்கத்திலும் சிறப்புற்று விளங்க உழைத்த பெரியோர்களைப் பற்றியும் போதிக்கப்படவில்லை. இத்தகைய

கல்வி முறை திருத்தியமைக்கப் படாவிடின் தேசீய உணர்ச்சியும், முதலாளிகளின் சுயநலத் தன்மையும் உலக நாகரீகத்தை நாசமுறச் செய்யுமென்பது திண்ணம்.

ஐரோப்பிய மக்களின் சுரண்டி வாழும் கொள்கை, ஆசியாமக்களிடையில் ஒரு புதிய உணர்ச்சியை எழச் செய்திருக்கின்றது. இந்தோனேஷியர், டச்சுக்காரருக்கெதிராகவும், வீட்னும் மக்கள், பிரெஞ்சு அரசுக்கெதிராகவும் போராடுவது ஏன்? ஏகாதிபத்தியத்தை வேரோடு அழிப்பதற்கன்றோ? ஆப்பிரிக்கா விரைவில் ஆசியாவைப் பின்பற்றும் என்பது திண்ணம். ஆகவே, ஐரோப்பிய மக்களும் இதர மக்களும் பிழைத்திருக்க வேண்டுமெனின் தேசீய நாட்டின் ஆதிபத்தியத்தை வெளி விஷயங்களிற் சர்வதேச அரசின் அதிகாரத்திற்குட்படுத்த வேண்டும். இரண்டாவது உலக மகாயுத்தம் அண்மையில் முடிவுற்றது. உலக அமைதியைப் பாதுகாக்க ஐக்கிய தேசங்களின் ஸ்தாபனம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. முன்னிருந்த சர்வ தேச சங்கத்தைவிட யூனோ ஸ்தாபனம் வலுவுடையதே. ஆனால் அந்த ஸ்தாபனம் இதுகாறும் இயற்றியவைகளை ஆராய்ந்திடின் வல்லரசுகள் தங்கள் ஆதிபத்தியத்தைத் தளர்த்த இசையவில்லை என்பது நன்கு விளங்கும். மூன்றாவது உலக மகா யுத்தம் எழுமெனின் மக்களின் கதிதான் என்னே? அதைச் சிந்திக்கவும் மனம் பதறுகின்றது. அணுகுண்டுகளும், மரணக் கதிர்களும், உலக நாகரீகத்தைச் சிதைத்துப் பாழாக்கும் என்று துணிந்து கூறலாம். அத்தகைய கோர விபத்து நேராவண்ணம் தீவிர தேசீய உணர்ச்சியையும், அகங்காரத்தையும் அடக்குவதே அறிஞர்களின் கடமையும், பொறுப்புமாகும். அதற்குப் போதிய சக்தியையும், அறிவையும் அளிக்கும்படி இறைவனை இறைஞ்சுவோமாக.

PRINTED AT
THE B. N. K. PRESS,
MADRAS-1